மாலை 7 | March 1942, விஷு ௵ பங்குனி மீ | முத்து 3

பொருள் அடக்கம்

விசுவாமித்திரர்	101	ரா. ஸ்ரீ. தேசிகன், எம்.ஏ.
கோகலேயின் பெருந்தன்மை	109	எஸ். ஆர். வெங்கட்ராமன், பி.ஏ., பி.எல்.
ஸர். ஜேம்ஸ்யங் ஸிம்ப்ஸன்	111	டி. வி. ஸ்ரீனிவாஸன், எம்.பி., பி.எஸ்.
அரிசி	114	ஆ. வே. ஜெயராமன்
பெற்ற மனம் பித்து	117	எஸ். குஞ்சிதபாதம்
விஞ்ஞானத்தின் பலன்	129	டி. பி. நவநீதகிருஷ்ணன், எம்.ஏ.
யார் மீது குற்றம்	132	ரா. சந்திரசூடன்
மாங்குடிச் சிவனர்	139	வ. வேணுகோபாலன்
நாமும் ரஷ்யாவும்	142	ஏ. ஜி. வெங்கடாசாரி

ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் :
5, வேங்கடேச அக்ரகாரம், மயிலாப்பூர், மதராஸ்,

வருஷச் சந்தா : உள்நாடு ரூ. 3. வெளிநாடு ரூ. 5.

"பாரத மணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

REGD. No. 1506

அசோகா

MILD SCENTED

ASOKA

ஸ்ரீ

ரிஜிஸ்டர். நெ. 1506

அசோகா சுகந்த பாக்குத்தூள்

தயாரிப்பவர்:—

M. K. கிருஷ்ணசெட்டி

கோயமுத்தூர்

மதராஸ் விற்பனையாளர் :—

V. கனகய்ய செட்டி & Co.,

நைனியப்ப நாயகன் தெரு, பார்க் டவுன்,

மதராஸ்.

டெலிகிராம்ஸ்: "ஆர்யோபிளான்ட்ஸ்" டெலிபோன்: ஸௌத் 430 & 431

பெங்கால் ஷேர் டீலர்ஸ் ஸிண்டிகேட் லிமிடெட்

தலைமை ஆபீஸ்:—ஸதர்ன் அவின்யூ, கல்கத்தா.



சௌரங்கி ஸ்கோயரில் தற்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் எங்கள் சொந்த கட்டிடங்கள். டி கட்டிடத்தின் அஸ்திவாரக் கல்லை, 1941ஞ ஜூலை 31உயன்று ஆச்சார்யா ஸர் பி. ஸி. ராய் அவர்கள் நாட்டினர்.

கிளை ஸ்தாபனங்கள்:
ஜம்ஷெட்பூர்,
பெனரீஸ், பகல்பூர்,
மாங்கிர், பாட்னு,
கோமில்லா,
கர்ஸியாங், திப்ருகார்,
பாங்குரு, & மதறாஸ்.

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூ. 25 லக்ஷம்

சேகரித்த மூலதனம் ரூ. 8,90,000

வசூலிக்கப்பெற்ற மூலதனம் ரூ. 2,95,000

கம்பெனி வேலை செய்யத் தொடங்கிய முதல் வருஷத்திலேயே 10% வீதம் டிவிடண்ட் (வருமான வரி இன்றி) வழங்கப் பெற்றது. 1941ஞ செப்டம்பரீ முடிய இரண்டாவது வருஷத்தின் முற்பாதிக்கு ஓர் இடைக்கால டிவிடண்ட் வழங்க உத்தேசித்திருக்கிறது.

பிக்ஸட் டிபாஸிட்டுகள் ஒரு வருஷத்திற்கு 5% வட்டி வீதம் நாங்கள் பெற்றுக் கொள்ளுகிரோம்.

நாங்கள் எல்லாவிதமான பங்கு விற்பனைகளிலும், கவர்ன்மெண்ட் ஸெக்யூரிட்டிகளிலும் லேவாதேவி செய்கிறோம்.

எங்கள் "மாதாந்திர ஷேர் மார்க்கெட் ரிப்போர்ட்"டுக்கு எழுதவும். வருஷ சந்தா ரூ 3 மாதிரி பிரதிக்கு எழுதுங்கள்.

இந்த ஸிண்டிகேட்டின் பாக்கி ஷேர்களை விற்பனை செய்ய ஏஜெண்டுகள் தேவை.

எங்கள் சென்னை கிளை ஆபீஸ் ஆகஸ்ட் 1உ முதல், மாஜி ரயில்வே ரேட்ஸ் அட்வைஸரி கமிட்டி ஸுப்பிரண்டண்ட்டாயிருந்த ராவ் சாஹேப் நடேச அய்யர் அவர்களின் நிர்வாகத்தின் கீழ் 12, தம்பு செட்டித் தெருவில் நடத்தப்படுகிறது.

* இன்ஷ்யூர் செய்யுங்கள் *

ஜூபிடர் ஜெனரல்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

கீழ்க்கண்ட இன்ஷ்யூரன்ஸ் அலுவல்களைக் கவனிக்கும்.

ஆயுள், மோட்டார்கார், நெருப்பு, பஸ்கள்,
டாக்ஸிகள், கப்பல், தொழிலாளர் நஷ்ட ஈடு,
சமுத்திரம், ரெயில்வே, தபால்.

பிரபல இந்திய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி.

வாக்களிக்கப்பட்ட மூலதனம் :

ஒன்றரைக் கோடி ரூபாய்.

செலுத்தப்பட்ட மூலதனம் : ரூ. 23,74,800
மொத்த ஐவேஜுகள் : ரூ. 76,00,000க்கு அதிகம்

எங்கும் ஏஜெண்டுகள் தேவை.

பிராஞ்சு ஆபீஸ் :

167, பிராட்வே : மதராஸ்.

விசுவாமித்திரர்

[வால்மீகியும்—கம்பரும்]

ரா. ஸ்ரீ. தேசிகன், எம்.ஏ.

(1)

ஒரு பெரும் பாழிலிருந்து இராமாயணம் என்னும் ஒரு பிரம்மாண்டமான சிருஷ்டியை வால்மீகி, தன்னுடைய அமானுஷ்யமான கற்பனா சக்திகொண்டு படைத்தார். அந்த ஆதி கவியின் சிருஷ்டி பிரத்தியக்ஷம் போலக் காட்சி அளிக்கிறது. மலை ஆறுகள்போல காலத்தால் குலையாத வனப்பு வாய்ந்திருக்கிறது. அநேக இராமாயணங்கள் வெளிவந்துள்ளன. எல்லா இராமாயணங்களும் வால்மீகி இயற்றிய மஹா காவியத்திலிருந்து கிளைத்தன என்பதில் சந்தேகமில்லை.

நம் தமிழ் நாட்டில் தோன்றிய கம்பர், தம் குன்றாச் சொல் வளத்தைக் கொண்டு ஓர் இளங்கோவைப் போல, ஒரு திருத்தக்கதேவரைப் போல ஒரு தனிச்சிருஷ்டி செய்யவில்லை. ஆனால் வால்மீகி, தான் எழுதிய காவியச் சிறப்பிலும், இன்பக்தியிலும் ஆழ்ந்துவிட்டார். அதை அடிப்படையாக வைத்துக்கொண்டு தன் மனோதர்மத்திற் கேற்பச் சில புதிய அமைப்புக்களை அதில் காட்ட முயன்றார். கவி புதிதாக ஒன்று சிருஷ்டிக்க வேண்டும் என்ற நியதில்லை. பழைய கதைகளுக்கு ஷேக்ஸ்பியர் (Shakespeare) ஒரு புதிய அழகையும, ஒளியையும் தரவில்லையா ?

தம்முடைய ஓவியக் கோலுக்கு இராமாயணம்போல விஸ்தாரமான ஒரு கிழி வேண்டுமென்று நினைத்தார் போலும். மேலும் தோள்வலிமிக்க வீரஇராமன் முழுமுதற் கடவுளாக ஆழ்வார்களின் உள்ளக் கோயில்களிலும், பக்தர்களின் ஆழ்ந்த சிந்தையிலும் காட்சியளிக்க ஆரம்பித்து விட்டான்.

கற்பார் இராமபிரானை யல்லால் மற்றும்
கற்பரோ ?
புற்பா முதலாப் புல்லெறும் பாதி ஒன்றின்றியே
நற்பாலயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும்
நற்பாலுக்கு உய்த்தனன் நான் முகனார்
பெற்ற நாட்டுளே.

என்ற பாடல் தமிழ் நாடெங்கும் கேட்டது. கம்பர் இராமபிரானின் குணக் கடலில் ஆழ்ந்து

ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு
பூசை முற்றவு நக்குபு புக்கென
ஆசை பற்றி யறையலுற் றேன்மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ.

என்று பாடுகிறார். அவருடைய தெய்வ நிலையை நாட்ட வந்தவர் இராமாயணக் கதையை அக்கண்ணோடு நோக்கி அமைக்கலானார். ஆனால் வால்மீகியின் சிருஷ்டிக்கான கதைக் கேட்ட அவருக்கு யாழின் தீஞ்சுவைத் தேனைப் பருகிற அசுணமாச் செவிக்குத் தன் பாட்டு பறை யடுத்ததை ஒக்குமோ என்ற எண்ணம் வந்தது.

துறை யடுத்த விருத்தத் தொகைக் கவிக்
குறையடுத்த செவிகளுக் கோதில் யாழ்
நறையடுத்த வசுணநன் மாச் செவிப்
பறையடுத்தது போலுமென் பாவரோ

வால்மீகியின் சிற்பச் சோபையைக் கண்ட கம்பருக்குத் தம்முடைய காவியம் தரையிலே கீறுகிற மடப் பிள்ளைகளின் ஓர் அர்த்தமற்ற கோட்டைப்போல ஆகிவிடுமோ என் சந்தேகம் உண்டாயிற்று.

“ அறைபு மாடரங் கும்மடப் பிள்ளைகள்
உறையிற் கீறிடிற் றச்சருங் காய்வரோ
இறைய ஞானமி லாதவென் புன்கவி
முறையி னாலுணர்ந் தாரு முனிவரோ.”

இப்படி அச்சத்தோடு அந்த மஹா காவியத்தை அவர் அணுகுகிறார் என்பது தாம்

பாடிய சிறப்புப் பாயிரத்தால் விளங்குகின்றது. வால்மீகி இராமாயணத்தை வாயாரப் போற்றிய கம்பர், முதல் நூலை எத்தனை தூரம் அனுசரிக்கிறார். எந்த எந்த மாறுதல்களை நுழைத்திருக்கிறார், அம்மாறுதல்களில் அவருடைய காவியச் சித்திரங்கள் அதிகச் சோபையை, அளிக்கின்றனவா? பாத்திரங்களின் இயல்பென்ன? கையாளப்பட்ட உவமைகளும் உருவகங்களும் வர்ணனைகளும் எப்படி அமைந்து கிடக்கின்றன என்ற விஷயங்களை ஆராய்வது இலக்கிய விமர்சகரின் கடனாகும்.

இலக்கியமென்பது ஓர் அகண்டமான ஒரு ஜனநாயகம் அதில் தட்டுத் தடங்கலின்றி எந்த விமர்சகனும் தன்னுடைய அபிப்பிராயத்தை வெளியிடலாம். ஆனால் நடுவு நிலையில் நின்றுகொண்டு விருப்பு வெறுப்பில்லாமல் துருவி ஆராய்வதுதான் அவனுக் கழகு.

முதல் முதல் விச்வாமித்திர விருந்தாத்தைப் பற்றிக் கூறுவோம். வால்மீகியின் கதைச் சுவட்டை முன்பு பற்றிப் பிறகு கம்பன் கதைப் பாதையில் இறங்குவோம்.

"ஒரு நாள் தசரதர் தம் உறவினர், புரோகிதர், அமாத்தியர் இவர்கள் புடைசூழப் பிள்ளைகளின் கலியாணத்தைப் பற்றி ஆழ்ந்த யோசனையில் இருந்தார். அவ்வாறு வீற்றிருக்கும் சமயத்தில் அருந்தவத்தின் ஒளி முகத்தில் வீச மஹாமுனிவரான விச்வாமித்திரர் வந்தார்.

நான் வந்திருக்கிறேன்—காதி மகன்—கௌசிகன் வந்திருப்பதாக விரைவிற் சொல்லுங்கள்" என்று வாயிற் காப்போர்களைப் பார்த்து விசுவாமித்திரர் கூறினார். அவருடைய வார்த்தையைக் கேட்டுக் பரபரப்புள்ள மனத்தோடு வேந்தனைக் காண அரண்மனையை நோக்கி ஓட்டமாய் ஓடி விசுவாமித்திரரின் வரவை அறிவித்தார்கள். அவர்களுடைய வார்த்தையைக் கேட்டு மன்னன் மகிழ்ச்சி யடைந்து பிரம்மதேவரைத்தேவேந்திரன்எதிர்கொள்ளுவதுபோல புரோகிதர்களோடு மிகுந்த மரியாதையுடன் எதிர்கொண்டு சென்றான். அவருக்கு அர்க்கியத்தை அளித்தான் அரசன். விசுவாமித்திரர் அவருடைய க்ஷேமச் செய்திகளை விசாரித்தார். வசிஷ்டர் முதலிய மகரிஷி கணங்களையும் கண்டு வினவினார். பிறகு எல்லோரும் சபைக்குத் திரும்பிப் போய் உசிதப் பிரகாரம் உட்கார்ந்தார்கள்.

அரசனுக்கு உவகையால் மயிர்க்கூச்சல் வந்தது. வள்ளலான தசரதன் மகிழ்ச்சி பொங்க விச்வாமித்திரரைப் பார்த்து மொழியலுற்றான்: "மஹா முனிவரே, அமிர்தம் கிடைக்கப் பெற்றால் எவ்வண்ணமோ, மழை இல்லாத இடத்தில் மழை பொழிந்தால் எவ்வண்ணமோ, தனக்குச் சரியான மனைவியினிடத்தில் புத்திரப் பேற்றை அடைந்தால் எவ்வண்ணமோ, இழந்த பொருளை மீட்டவன் உவகை அடைகிறது எவ்வண்ணமோ, திருவிழாச் சந்தோஷம் எய்துகிற உள்ளம் எவ்வண்ணமோ, அவ்வண்ணம் உங்கள் வரவு காட்சி அளிக்கிறது. மகிழ்ச்சியோடு கூடிய நான் எந்த மனோரதத்தையும், பூர்த்தி செய்து வைப்பேன். தாங்கள்தான் சத்பாத்திரம். ஏதோ பாக்கிய விசேஷத்தால் இங்கு வந்திருக்கிறீர்கள். என்னுடைய ஜன்மம் கடையேறியது. என் வாழ்வும் புனிதமாயிற்று. தங்கள் தரிசனத்தால் ஒரு புண்ணிய க்ஷேத்திரமடைந்த வனை ஒக்கின்றேன். தாங்கள் எதை நினைத்து வந்தீர்களோ அந்தக்காரியத்தைச் சொல்லுங்கள்; நான் அனுக்கிரஹிக்கப்பட்டவனாகின்றேன். உமக்கு ஊழியம் செய்ய விரும்புகின்றேன். இதைப் பற்றிச் சந்தேகிக்க வேண்டாம். கொஞ்சங்கூட குறை வைக்கவில்லை. தாங்கள் எனக்கு ஒரு தெய்வமல்லவோ? பெரிய சம்பத்தை அடைந்துவிட்டேன். தங்கள் உரவல்லலா கிடைத்திருக்கிறது. செவி குளிர சிந்தை குளிரப் பணிவுடன் மன்னன் பகர்ந்த இன்சொற் கேட்டு அதிக சந்தோஷத்தை அடைந்தார் முனிபுங்கவர். மயிற் கால் தோறும் உவகை கசிய விசுவாமித்திரர் பதில் சொன்னார்.

"அரசே, இவ்வுலகத்தில் இவ்வார்த்தைகள் உனக்கே தக்கதாகும். உன்னுடைய குலத்திற்கும், உன்னுடைய குலகுருவுக்கும் கௌரவத்தை அளிக்கின்றன. என் மனத்திலிருப்பதை இப்பொழுதே தெரிவிக்கிறேன். கொடுத்த வாக்கை குறைவின்றி நிறைவேற்றுவாயாக.

நான் ஓர் யாகத்திலே இறங்கி யிருக்கிறேன். காமரூபிகளான இரண்டு ராக்ஷதர்கள் என் யாகத்தைக் கெடுக்கிறார்கள். மாரீசன், சுபாகு பராக்கிரமுள்ள இரண்டு ராக்ஷதர்கள்; யாகக் குண்டத்தில் ரத்தத்தையும் மாமிசத் துண்டங்களையும் பெய்கிறார்கள். என்னுடைய யாகம் நிறைவேறவில்லை. ஒன்றுந் தோன்றவில்லை. என்னுடைய உத்ஸாகம் குன்றிப் போயிருக்கிறது. கோபத்தைச் செலுத்துகிற எண்ணமே வருகிறதில்லை. நான் இறங்கியிருக்கிறவிஷயத்திற்கும் அதுதக்கதன்று. பக்கக் குடுமி வைத்திருக்கிற தவிராத பராக்கிரமுள்ள சூரனை உன் மூத்த குமாரன் இராமனை என்னிடத்தில் விடவேண்டும். என் பாதுகாப்பிலிருக்கிற அவனுக்கே சுவயம் சக்தியுண்டு. ராக்ஷதர்கள் அவன் முன் நிற்கமுடியாது. இப்பொழுதே அவர்கள்மீது மரணச் சாயை விழுந்து விட்டது. பிள்ளை மீது வைத்திருக்கிற உன்னுடைய அன்பு இப்பெருங் காரியத்தின் குறுக்கே நிற்க வேண்டாம். ராமனுடைய சத்திய பராக்கிரமத்தை நான் அறிவேன், வசிஷ்டர் அறிவர்; தவத்துறையில் இறங்கிய தபஸ்விகள் அறிவர் அவனுக்குக் கீர்த்தி வரவேண்டுமென்று நீ விரும்பினால் என்னோடு பத்து நாளைக்கு அனுப்பு. உனக்கு மங்களம் உண்டாகட்டும். சோகமடைந்து விடாதே.

ஹிதகரமான அந்த விசுவாமித்திருடைய மொழிகளைக் கேட்டுக் கடுமையான சோகத்தை அடைந்தார் தசரதர். பயமுற்று மனங்குன்றிப் போனார். இருதயத்தைப் பிளப்பதான அக்கடுஞ் சொல் வந்தளவில் ஆசனத்திலிருந்தும் அசைந்து விட்டார்.

'சிறிது நேரங்கழித்து அவருக்கு மூர்ச்சை தெளிந்தது. மனத்தைச் சமாதானப் படுத்திக் கொண்டு தழுதழுத்த குரலில் பேசினார் தசரதர்: "என்னுடைய பையனுக்குப்பதினாறுவயது நிரம்பவில்லை. அந்த ராக்ஷதர்களோடு யுத்தம் செய்ய வல்லமையில்லை. அநேக வீரர்கள் என்னைத் தலைவனாகக் கருதுகிறார்கள். என்னுடைய கணக்கில்லாத பெரும் படை வீரர்களை அனுப்புகிறேன். சண்டையில் தேர்ந்தவர்கள். போர்க் கருவிகளில் நல்ல தேர்ச்சியுடையவர்கள். அவர்களை அனுப்புகிறேன் இராமனை அழைத்துப் போக வேண்டாம். (ந ராமம் நேதும் அர்ஹஸி) என் உடலில் உயிர் உள்ளளவில் நானே போர் புரிகிறேன். உங்கள் யாகம் ரக்ஷிக்கப்படும். ராமனை அழைத்துப் போகவேண்டாம்.

அவன் குழந்தை படை யூற்றமில்லாதவன். மறைந்து போர் செய்கிற அசுரர்களின் பலாபலம் தெரியாதவன். அவர்களோடு சண்டை தொடுக்க முடியாதவன் ராமனை விட்டுக் கணநேரங் கூடச் சகியேன் பிரிந்தால் உயிர் தங்காது. இராமனை அழைத்துப் போகத் தீர்மானித்தால் என்னையும் என் சதுரங்கங்களையும் அழைத்துப்போங்கள். எத்தனையோ துக்கமடைந்து பெற்ற குழந்தை. கௌசிகரே, ராமனை அழைத்துப் போக வேண்டாம். நாலு பிள்ளைகளில் மூத்தவனிடம் அதிகப்பற்று எனக்கு இருக்கிறது. இராமனை அழைத்துப் போக வேண்டாம் அதிருக்கட்டும்? அந்த ராக்ஷதர்கள் எப்படிப்பட்ட வீரியமுடையவர்கள்? எவருடைய மைந்தர்கள்; எவ்வித உருவமுடையவர்கள்? முனிபுங்கவரே, அவர்களை யார் காப்பாற்றுகிறார்கள்? மறைந்து மாயப் போர் செய்கிறவர்களோடு, என்னுடைய சென்னியத்தினாலும், என்றாலும், இராமனாலும், எப்படிப் போர் புரிந்தால் நலமாகும் இவ்வாறு உரைத்த மன்னருடைய வார்த்தைகளுக்குப் பதங்கூறினார் விசுவாமித்திரர்.

புலஸ்திய வம்சத்தில் பிறந்த இராக்ஷதன் ஒருவன் இருக்கிறான். அவனுக்கு இராவணன் என்று பெயர். பிரம்மதேவர் கொடுத்தவரங்களினால் முவ்வுலகத்தையும் வருத்துகின்றான் அவன் யாகங்களை எப்பொழுதும் கொடுப்பான். தான் நேரில் கொடுக்காத போனாலும், அவனால் தூண்டப்பட்ட மாரீசனும், சுபாகுவும் யாகத்திற்கு இடையூற்றைச் செய்கிறார்கள்.

இம் மொழிகளைக் கேட்ட வேந்தன் முனிவரைப் பார்த்துச் சொன்னார். "அந்த துராத்மாவான அவனோடு என்றாலே எதிர்த்துச் சண்டை செய்ய முடியாது. அறமதை அறிந்த பெரியோரே, அற்ப

அதிர்ஷ்ட முடையவனான எனக்குக் குருவும் தெய்பமும் தாங்கள் தான். என்னுடைய பிள்ளையிடத்தில் கிருபை செய்யக் கடவீர்.

தேவர்கள், அசுரர்கள், கந்தர்வர்கள். யக்ஷர்கள். முதலியவர்களே, இராவணனை எதிர்க்க வல்லவர் அல்லர். மனிதர்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? என் குல விருத்திக்குக் காரணமான அருமைப் பிணியை எவ்விதத்திலும் நிச்சயமாய் விடேன் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்படி முன்னுக்குப் பின் தடுமாறிக் கூறுகிற அரசன் பேச்சைக் கேட்ட முனிவருக்குக் கோபம் வந்தவிட்டது. நெய் பெய்த யாக குண்டத்தில் நெருப்புப் போல் அது எழுந்தது.

புத்திரனிடத்தில்- வைத்த வாஞ்சையால் வார்த்தைகள், குழறின "முதலிலே கொடுப்பதாய்ச் சொல்லி இப்போழுது வார்த்தை தவறுகிறீர்கள். ரகுவம்சத்து மன்னர்களுக்கு இது தக்கதன்று. தகுதி என்றால் வந்த வழியே செல்லுகிறேன். சொன்னசொல் தவறிவிட்டுச் சுற்றத்தாரோடு சுகமாயிரும் என்று விசுவாமித்திரர் உரைத்தார்.

முனிக்கு வந்த சீற்றத்தால் உலகம் நடுங்கிற்று: இராக்ஷதர்கள் அஞ்சினர் இந்நிலையைக் கண்ட வசிஷ்டர் அரசனுக்குத் தர்மத்தைக் கூறினார்.

இக்ஷ்வாகு குலத்தில் அறமே உருவெடுத்த நீர், தர்மத்தினின்று நழுவுதல் அழகன்று. சொன்ன வார்த்தை தவறினவனுடைய அறங்களெல்லாம் அழிந்து போய்விடும். தம்முடைய தபோ பலத்தினால் எதையும் அழிக்க ஆற்றலுடையவர் அவர் உம்முடைய குழந்தை இராகவனுடைய நன்மையைக் குறித்து உம்மை அடைந்து யாசிக்கிறார்.

குருவின் மொழிகளைக் கேட்டதும் தசரதனுக்கு மனக்கலக்கம் நீங்கிற்று. முகத்தில் ஒளிவீசிற்று. பிரசன்ன முகத்தோடு, இராமலக்ஷ்மணர்களை அழைத்து வரக் கட்டளை யிட்டான்.

அரசனும், அவன் மனைவி கோசலையும் குலகுருவான வசிஷ்டரும் ஆசிர்வாதம் செய்தனுப்பினார்கள். காற்றுச் சுகமாக வீசிற்று. மங்கள வாத்தியங்கள் முழங்கின. பக்கக் குழல்கள் காற்றில் ஆட, குழந்தைகளை விற்பிடித்த கையொடு விசுவாமித்திரரைத் தொடர்ந்தனர்.

(2)

இம்முறையில் வால்மீகியின் கதைப் போக்கு அமைந்திருக்கிறது. கம்பரின் கதைப்போக்கைக் கவனிப்போம்.

கற்பக மரத்தை உடைய நாட்டிலுள்ள அமரர்கள் இதுதான் இந்திர சபை என்று சந்தேகிக்கும்படி ஆகாயத்தை அளாவிய சபா மண்டபத்தை அடைந்தான் தசரதன்.

அரியணை மேல் பொலிந்து தோன்றிய அரசனை நோக்கிய சாரணர்கள் தங்கள் நாயகன் இவன் தானோ என்று சந்தேகித்தார்கள். ஆனால் ஆயிரம் நாட்டம் இல்லை என்று பயம் நீங்கினர். சிங்கம் போல வலிமையுள்ள வேந்தன்முன் உலகத்தை இப்பொழுதே படைப்பேன் ஈண்டென என்றுமுன்னொருகால் வெகுண்ட விசுவாமித்திரர் அங்குத் தோன்றினார். அந்த முனிவர் வந்து சேர்ந்தவுடன், பிரமதேவன் வரவகாணும் இந்திரன் என கடிதெழுந்து அடி பணிந்தான் வேந்தன்.

வணங்கிய பிறகு என் வினை இன்றே தொடர்பு அழிந்தது. தாங்கள் வந்தது இந்தத் தேசம் செய்த தவமோ? இல்லை நான் செய்ததவமோ? அன்று; என் குலஞ் செய்த தவம் என்று கைகூப்பி நின்றான் வேந்தன்.

விசுவாமித்திரர் அதற்குப்பதில் கூறினார்: பகைவரை வென்ற அரசே, என்னைப் போன்ற முனிவர்களும், தேவர்களும் இடையூற்றை அடைந்தால் பல மலைகளை நடுகின்ற பனிவரையான கைலாச கிரியும், திருப்பாற் கடலும், பிரமலோகமும் அமரநாடும், அணியாட அயோத்தியுந்தான் புகலிடங்கள் ஆகும்.

ஏ வேந்தே, இந்திரன் தன் கற்பகச் சோலையை இழந்து உங்களை யாசித்தான். சம்பரனைக் குலத்தோடுங் குலைத்து நீ

கொடுத்தருளிய அரசன்றோ, இப்பொழுது புரந்தரன் ஆளுகிறது என்று இயம்பினர் விசுவாமித்திரர்.

இப்படிக் கூறுமளவில் அளவு கடந்த உவகைக் கடல் தன் உள்ளத்தில் பொங்கக் கரங்கள் கூப்பி, அரசாட்சியின் பயனைப் பெற்றேன் இனி நான் செய்வது அருள்க என்றான் தசரதன்.

காமம் வெகுளியெனத்திரியும் அரக்கர்கள் என்னுடைய யாகத்தைக் கலைக்காதபடிக் காக்கச் சிறுவரிற் கரிய செம்மலைத் தந்திடு என்று உயிர் இரக்கும் கொடுங்கூற்றுவனைப் போலக் கேட்டார் அவர்.

எண்ணிலா அருந் தவத்தோன் சொன்ன சொல், மார்பிலே வேல் பாய்ந்த புண்ணினுடைய பெரும் துவாரத்தில் கொள்ளிக்கட்டை நுழைந்தால் போல அவன் செவியில் விழுந்தது. மனத்திலே எழுந்த துயர் அவனைப் பிடித்துத்தள்ளவே உயிர் ஊசலாடிற்று. கண்ணில்லாதவன் பெற்று இழந்தான் எனக் கடுந்த துயரத்தில் உழந்தான் அவன்.

தசரதன் ஒருவாறு துயர் நீங்கி மொழியலுற்றான். "இவன் சிறியன்; படை ஊற்றம் இலன். தங்களுக்கு இது இஷ்டமானால் பனிநீர்க்கங்கைச் சடையானும் புரந்தரனும், நான்முகனும் புகுந்து செய்யும் இடையூற்றுக்கு இடையூறாக நான் இருப்பேன்; பெரிய யாகத்தைச் செய்ய எழுந்தருள வேண்டும்.

இப்படி மொழிந்த அளவிலே முனிவோடு எழுந்தார் விசுவாமித்திரர். இது இறுதிக்காலந்தானோ என்று இமையோர் சந்தேகித்தனர். ஆகாயத்தில் சூரியன் மறைந்து போனான். அவ்வுலகத்திலும், இவ்வுலகத்திலும், நிலையாய் உள்ளன சுழன்றன. விசுவாமித்திரருக்குப் புருவங்கள் மேலேறின. நகையும் வந்தது. கண்கள் சிவந்தன; திசைகள் எல்லாம் இருண்டன.

இவ்வாறு கோபித்த மாமுனிவன் கருத்தை நினைத்துத் தாங்கள் பொறுத்தருள வேண்டும் என்று முனிவரைப் பார்த்துக் கூறினார் வசிஷ்டர். பிறகுத் தசரதனை நோக்கி உனது குமாரனுக்கு பிறரால் அடைவித்தற்குக் கூடாத பெரு நன்மைகள் தாமாக வந்து சேர்கிற காலத்தில் தடுக்கலாமா? பெய்யுமாரியால் பெருகு வண்ணம் கடலை அடைகிறது போல, உன் மகனுக்கு அளவில்லாத வித்தைகள் சேரும்படியான காலம் அணுகியிருக்கிறது.

இப்படிச் சொன்ன பொழுது "இராமனைக் கொண்டுவாருங்கள் என்று தசரதன் கட்டளையிட்டான். இராமனும் இலக்குமணனும் அங்கே வந்து சேர்ந்தார்கள். தாயுந்தந்தையுமாய் நின்று தாங்கள் தான் வேண்டிய அனுகூலங்களைச் செய்ய வேண்டும் என்று அவர் கையில் ஒப்படைத்தான் குழந்தைகளை. சீற்றத்தை விட்டு முனிவன் அவர்களை அழைத்துச் சென்றான்.

கொடுத்த மைந்தரைக் கொண்டு சிந்தை முன்
தெடுத்த சீற்றம் விட்டினிது வாழ்த்திமே
எடுத்த வேள்வி போய் முடித்து நாமென
நடத்தன்மேயினான் வைக்கணீங்கினான்

(3)

இவ்விரு காட்சிகளையும் ஆராய்வோம்.

தன் மைந்தன் மணத்தைப் பற்றிச் சபையில் தசரதன் ஆலோசித்துக் கொண்டிருக்கிறான் என்று கதையை வால்மீகி ஆரம்பிக்கிறார். இப்படி வால்மீகி தொடங்குகிற முறை அவர் கதை அமைப்புக்கு மிகவும் பொருத்தமாயிருக்கிறது. இராமாயண முழுவதும் அருவவிதியின் கைநிழல் தான் விழுகிறது. கலியாணப் பேச்சு நடந்தாலும், முதல் முதல் கலியாணத்திற்கே தடை போட்டது போலப் படுகிறது விசுவாமித்திரர் வருகை. மேல் விளைவு கலியாணந்தான். அதை மனத்தில் வைத்து ஹிதகரமான அந்த விசுவாமித்திரருடைய வார்த்தையைக் கேட்டுக் கடுமையான சோகத்தை அடைந்தார் தசரதர் என்று கவி கூறுகிறார். இந்த விபரீத ரசம் மங்களத்தில் முடிவடைகிறது. மேலும் இராகவனை விட்டுக் கணங்கூடப் பிரிய மாட்டேன்" பிரித்தால் உயிர் தரியேன் என்று இப்பொழுது கூறும் வார்த்தைகள் அயோத்தியா காண்டத்தில் உண்மை ஆகிவிடுகின்றன.

மற்றொரு விஷயம் இங்கு நோக்கத் தகுந்தது. விசுவாமித்திரன் உடனே

அரண்மனையில் புகுந்து விட வில்லை. வாயிற்காப் போர்களின் மூலம் செய்தி விசுவாமித்திரர் அனுப்புகிறார். அவர்கள் உள்ளே பயந்தோடி அதைப் பரபரப்புடன் அறிவிக்கிறார்கள். அரசன் சபையோர்கள் பின்தொடர முனியை வர வேற்கிறான்.

இவைகளெல்லாம் நம்முன் பிரத்தியட் சக்காட்சிகளைப் போல நிற்கின்ற இவை கள் அற்பமான விஷயங்கள் என்று சிலர் கூறலாம். இம்மஹாகாவியத்தைச் சிருஷ் டித்த ஆதிகவி சிறிய அம்சங்களைக் கூட கூர்ந்து நோக்கிக் கொண்டே போகிறார். இப்படிக் கூர்ந்து நோக்குகிற தன்மை தான் எவன் உண்மையான சைத்திரிகன் எவன் இல்லை என்று காண்பிக்கும் உறைகல்.

கம்பராமாயணத்தில் கதைத் தொடர்பு இல்லாதது போலப் படுகிறது. மன்னன் அரியணைமேலிருக்கிறான்; விசுவாமித்திரர் வருகிறார் திடீரென்று என்று அவர் கூறு கிறார். நாடக முறையில் கதையைத்தரு கிறார் என்று இதற்கு ஒரு பரிகாரம் கூறலாம். ஆனால் இயற்கையாய்ச்சொல் கிற வால் மீகியின் கதைப் போக்கின் ஒளிக்கு முன் நாடக மேடை செயற்கை ஒளி மங்கித்தான் போகிறது. மேலும் பிரம மாவை வரவேற்கிற தேவேந்திரனைப் போல என்று கூறிய ஆதி கவியைப் பின் பற்றியே இச்சித்திரத்தை நமக்குக் கொடுக்கிறார் கம்பர்.

"தூயமெல் லரியணை பொலிந்து தோன்றினன்
சேயிரு விசும்பிடைத்திரியுஞ் சாரணர்
நாயக னிவன்கொலென் றயிர்த்து நாட்டமோ
ராயிர மில்லையென் றைய நீங்கினர்."

"கந்தமல ரிற்கடவு டன் வரவு காணு
மிந்திர னெனக்கடி தெழுந்தபடி பணிந்தான்"

எப்படித் தசரதன் முனியை வரவேற் கிறான் என்ற விஷயம் நோக்கத் தகுந் தது. மூன்று உவமைகளை வால்மீகி நமக்குத் தருகிறார். அமிருதத்தை அடைந் தால் எப்படியோ. வரண்ட நாட்டில் மழையின் வருகை எப்படியோ, புத்திர பாக்கியமில்லாதவன் புத்திரப் பேற்றை யடைந்தால் எப்படியோ, அப்படித் தங்களுடைய வருகை என்று தசரதர் மொழிகிறார். இம்மூன்று அனுபவங்கள் அவர் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கின் றன. உரோம பாதன் நாட்டில் மழை யில்லாது ஜனங்கள் கஷ்டப்பட்டது. தச ரதனுக்குத் தெரியும். தனக்குப் பிள்ளை யில்லாது வருந்தினதும் அவனுடைய அனுபவந்தான் அக்கினி குண்டலத்தி லிருந்து அமிர்தம் வந்த காட்சியையும் கண்டவன் அவன்.

வால்மீகி தசரதன் நிலையிலிருந்து பேசு கிறார். கம்பருடைய

நிலஞ்செய் தவமென்று ணரினன்று
நெடியோ யென்
நலஞ்செய் வினையுண் டெனினு
மன்று நகர் நீ யான்
வலஞ்செய்து வணங்க வெளி
வந்த விதுமுந்தென்
குலஞ் செய் தவமென் றினிது
கூற முனி கூறும்.

என்ற பாட்டுச் சம்பிரதாய முறையில் பேசுகிறது. சொல் அலங்காரத்தைப் பார்க்கிறோமே யொழிய, வால்மீகி கூறிய தசரதனின் உணர்ச்சி ததும்பும் பேச்சுக் களாயில்லை.

முக்கியமான மற்றொரு விஷயம் இங்கு நமக்கு விளங்காமற் போகாது. விசுவா மித்திரன் வந்த உவகையில் முன்பின் யோசியாமல் அரசன் சத்தியஞ் செய்து விடுகிறான். சத்தியத்தைக் காப்பாற்றும் பொருட்டு மிதமாகப் பேசுகிறார்கள் ரகுவம்சத்தில் தோன்றிய அரசர்கள். என்று காளிதாஸர் கூறுகிறார். ஆனால் மிதமாய்ப் பேசவே தெரியாது அக்குலத் தில் உதித்த தசரதனுக்கு வாக்கை முன்பு கொடுத்துப்பின் தத்தளிக்கும் இயல்பை உடையவன் கைகேயிக்கு மேல் விளைவை உன்னாது வரந்தந்தான் ஒரு முனி குமா ரன் மீது தான். இவ்வியப்பு அவனு டைய பிராணனுக்கே முடிவை அளித்து விடுகிறது. இதை வைத்துக் கொண்டு தான் தசரத பாத்திரத்தை அமைக் கிறார் வால்மீகி.

பன்னிப் பன்னிப் பேசுகிற கிழத் தசரதன் நம் முன் நிற்கிறான். இரண்டு வாக்கியங்களுக்கிடை யிடையே ராமனை அழைத்துப் போக வேண்டாம் ராமனை

அழைத்துப் போக வேண்டாம் என்று திரும்பத் திரும்பப் பேசுகிறான். இவ்விரு அம்சங்களைக் கவி நமக்கு ஞாபகப் படுத்திக் கொண்டே போகிறார்.

கம்பராமாயணக் காட்சியை காண்கிறபொழுது, தசரதன் வாக்குத் தந்தானா? என்ற விஷயமே சந்தேகிக்கத் தகுந்த தாயிருக்கிறது.

"மற்றினிச் செய்தருளுக" என்ற வாக்கியம் இருக்கிறதே ஒழிய அரசன் பிரதிக்ஞை செய்ததாகத் தெரியவில்லை. வால்மீகி ராமாயணத்தில் இச் சந்தேகத்திற்கு இடமேயில்லை. "கொடுப்பதாய் முன் சொல்லி இப்பொழுது வார்த்தை தவறுகிறீர்கள் என்ற விசுவாமித்திரன் வார்த்தைகளும், அளித்த வாக்கை நிறைவேற்றாதவனுக்குமுன்செய்த அறங்களின் பலன் கூட அழிந்துவிடும் என்று வசிஷ்டர் கூறிய மொழிகளும், கொஞ்சங்கூடச் சந்தேகத்திற்கு இடந்தரவில்லை.

விசுவாமித்திர பாத்திர சிருஷ்டியைப் பற்றிப் பேசுவோம். வால்மீகத்தில் விசுவாமித்திரர் ஒரு முனிவரைப் போலவே காட்சி அளிக்கிறார். ஒரு முனியை ஒரு முனிதான் சிருஷ்டிக்க முடியும். கம்பரில் மன்னர்களைப் பாடுகிற ஒரு புலவராக விச்வாமித்திரர் நம்முன் நிற்கிறார்,

'துனியுறு முனிவன் தோன்றினான்" என்று கதை ஆரம்பிக்கிறது. அதற்கேற்ப நிகழ்ச்சிகளையும் கொண்டு கம்பர் போயிருக்கிறார். வால்மீகியிலோ "மன்னவரே கோபத்தை பிரயோகிக்க மனத்திலெண்ணமே எனக்கு உண்டாகிறதில்லை" என்று விசுவாமித்திரர் சொல்லுகிறார். அடுத்த நிமிஷம் தசரதன் தன் பிள்ளையை அனுப்பமாட்டேன் என்றபொழுது கோபம் வந்துவிட்டது" இந்த ஹாஸ்ய ரசத்தை வால்மீகி நமக்குத் தந்திருக்கிறார்.

"என்றனனென் றலு முனிவோ டெழுந்தனன்
மண் படைத்த முனி யிறுதிக் கால
மன்றெனவா மெனவிமையோ ரயித்தனர் மேல்
கரந்த தங்கு மிங்கு
நின்றன வுந் திரிந்தனமீ நிவந்த கொழுங்
கடைப் புருவ நெற்றி முற்றச்
சென்றன வந் ததி நகையுஞ் சிவந்தன கண்
ணிருண்டன போய்த் திசைக ளெல்லாம்"

என்று கம்பர் விசுவாமித்திரருடைய சீற்றத்தை வர்ணித்துப் பாடுகிறார் சொற்களில் பூரு காம்பீரியம் இருக்கத்தானிருக்கிறது இருண்டன திசைகளெல்லாம் என்ற சொற்றொடர் சொல்வளம்வுள்ள மில்டனை (Milton) ஞாபகப் படுத்துகிறது.

எதிரிகள் வெருண்டதில் இருள்செறி நிரயமும்
கொதியெழு சினத்தால் கூடிய திருளே.

இப்படி வெகுண்டு பேசுகிற விசுவாமித்திரர் முதலிய மன்னர்களையும் ஜமீன்தார்களையும் புகழ்த்து பேசும் புலவராகத்தான் நிற்கிறார் என்று முன் குறிப்பிட்டேன். இந்திரன், சந்திரன், பிரமன், ருத்திரன், விஷ்ணு என்று வேந்தர்களைச் சிறப்பித்து பாடுகிற வழக்கம் அந்தக் காலத்தில் தன் காலத்து வாசனையை விட்டு நீங்கி, ஒரு முனியைக் கம்பர் சிருஷ்டிக்க முடியவில்லை.

நம்மாழ்வாரும் தன் காலத்தில் மனிதரைப் பாடிப் பிழைக்கும் புலவர்களைப் பற்றி நிந்தித்துப் பேசுகிறாள்.

"சொன்னால் விரோதமிது, ஆகிலும்
சொல்லுவன் கேண்மினோ
என்னாவி லுன் கவி யாமொருவருக்கும்
கொடுக்கிலேன்
"என்னாவது? எத்தனை நாளைக்குப் போதும்?
புலவீர்காள்
மன்னா மனிசரைப் பாடிப் படைக்கும் பெரும்
பொருள்

வேந்தர்களைப் பல்லைக்காட்டிப் புகழ்ந்து பாடும் புலவர்களை மனத்தில் வைத்து அம்மஹான் எழுதியிருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை.

"என்னனைய முனிவரரு மிமையவரு மிடையூ
றொன்றுடையரானால்
"பன்னகமுந் தருவெள்ளிப் பனிவரையும்
பாற்கடலும் பதுமபீடத்
தன்னகருங் கற்பக நாட்டணி நகரு மணிமாட
வயோத்தியென்னும்
பொன்னகரு மல்லாது புகலுண்டே விகல்
கடந்த புலவு வேலோய்
"இன்றளிர்க் கற்பக நறுந்தேனிடை துளிக்கு
நிழலிருக்கை யிழந்து போந்து
நின்றளிக்குந் தனிக்குடையினிழலொதுங்கிக்
குறையிரந்து நிற்பரோக்கிக்

குன்றளிக்குங் குலமணித் தோட் சம்பரனைக்
குலத்தோடுந் தொலைத்து நீ கொண்டன்
றளித்த வரசன்றோ புரந்தரனாளுகின்ற
தரசுவென்றான்

இவ்விரு சொல்நயல்கள் நிரம்பிய பாடல்களைப் வாசிப்போர்களுக்கு கேவலம்மன்னர்களை வாயாரப் புகழ்ந்து பாடும் புலவர்களின் சாயல்கள் தான் இவைகளில் அடிக்கின்றன என்று சொல்லாமலே விளங்கும்.

மேலும் இவ்விரு கவிகளின் சைத்திரிக முறையும், பண்பும் நமக்குத்தோன்றுகின்றன. வால்மீகி பாத்திரங்களின் செயல்கள் மூலமாகவும் பேச்சுக்களின் மூலமாகவும், கதையைக் கொண்டு போகிறார். கம்பரோ தானே வர்ணிக்க ஆரம்பித்து விடுகிறார். உதாரணமாக விச்வாமித்திரர் இராமனை யாசித்த பொழுது, ஆசனத்தில் அப்படியே தசரதன் ஆடி விழுந்து விட்டான் என்று வால்மீகி சொல்லுகிறார். கம்பரோ அவனுடைய செயலை வர்ணிக்கிறார். மற்றொரு விஷயமும் காணத் தகுந்தது. மேல் வருகிற நிகழ்ச்சியை முன்னமேயே சூசிப்பிக்கிறார். இராவணனுடைய பிரஸ்தாபம் கலியாணத்திற்காகக் கூட்டின அயோத்தி மன்னன் சபையில் ஏற்படுகிறது. இதில் இன்னொரு காட்சியைக் காண்கிறோம் இராகவன் விசுவாமித்திரரோடு போவதற்குமுன் கோசலை ஆசீர்வாதம் பண்ணுகிறாள். இவ்விருத்தாந்தத்தை கம்பரில் காணோம் அவளுடைய உருவம் விசுவாமித்திரர் முன் சதாநிற்கிறது. குழந்தைகளைச் சாக்கிரதையாகக் கொண்டு கோசலையிடம் ஒப்புவிக்க வேண்டுமென்று கூட அவர் எண்ணியிருக்கலாம். இராமன் தூங்குகிறான். காலை நேரம் வந்துவிடுகிறது. கோசலை பெற்ற மகனே எழுந்திராய் எழுந்திராய் என்று மதுரமான குரலில் விசுவாமித்திரர் பேசுகிறார்,

இப்படி நுணுக்கமாய் ஆராய்ந்து கொண்டே போகிறார் வால்மீகி. அவருடைய மகாகவிஷயத்தில் இயற்கை ஒளியைப் பார்க்கிறோம்; இயற்கை ஒலியைக் கேட்கிறோம் ஒரு மஹா நதி போல அது கம்பீரமாய் ஓடுகிறது. கம்பனுடைய சித்திரத்தில் நாடக மேடை ஒலிதான் கேட்கிறது. கம்பருடைய சொல் வலையில் சிக்கித் திகைக்கிறவர்களுக்கு, இம்மஹா கவியினுடைய இயற்கைச் சோபை விளங்காது. நிதம் உதிக்கிற சூரியனைக் கவனிக்கிறோமா? நிதம் ஒளி வீசுகிற சந்திரனையும் நக்ஷத்திரங்களையும் பார்க்கிறோமா? நம்முன் விரிந்தோடுகிற மஹா நதியை நாம் கண்டு களிக்கிறோமா? அதற்கோர் உண்மையான பண்பட்ட உள்ளம் வேண்டுமல்லவா?

சந்தாதாருக்கு அறிக்கை.

சந்தாத் தொகையை செலுத்தாமல் பாக்கி வைத்திருப்பவர்கள், பாரத மணி ஆபீஸிலிருந்து 'ரிமைண்டர்' கடிதத்தை எதிர்பாராமல் வருஷச் சந்தாத் தொகை ரூ. **3—0—0**யும் தாமதிக்காமல் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மானேஜர்.

கோகலேயின் பெருந்தன்மை

எஸ். ஆர். வேங்கடராமன், பி.ஏ., பி.எல்., இந்திய ஊழியர் சங்க மெம்பர்.

பண்டிதர் ஜவாஹர்லால் நேரு ஆங்கிலத்தில் தனது சுய சரிதத்தை எழுதியிருக்கிறார். அதில் கோபாலகிருஷ்ண கோகலேயைப் பற்றி ஒரு ருசிகரமான சம்பவத்தை ஜவாஹர்லால் விவரித்திருக்கிறார். அது கோகலேயின் பொறுமையையும் பெருந்தன்மையையும் காட்டுகிறது.

1912-ம் வருஷம் பங்கிபூரில் விஹாரில் கூடிற்று. அதற்கு ஜவாஹர்லாலும் முதன் முதல் ஒரு பிரதிநிதியாகச் சென்றிருந்தார். அதே வருஷத்தில்தான் அவர் பாரிஸ்டர் பரீக்ஷை கொடுத்து இந்தியாவுக்கு வந்தது. அதுவே அவர் பார்த்த முதல் காங்கிரஸ். அதே 1912-ம் வருஷத்தில் கோகலே தென்னாப்பிரிக்கா சென்று திரும்பினார். தென்னாப்பிரிக்காவில் நமது இந்திய மக்கள் பல கஷ்டங்களை அனுபவித்து வந்தனர். அவர்களது உரிமைகளைப் பாதுகாக்க மகாத்மா காந்தி ஒரு பெரிய சத்யாக்ரஹப் போரை நடத்தி வந்தார். தென்னாப்பிரிக்காவில் உள்ள நிலைமையை நேரில் அறிந்து நமது மக்களின் கஷ்டத்தை நீக்க கோகலே தென்னாப்பிரிக்காவுக்கு 1912-ம் வருஷம் சென்று திரும்பினார். உடனே பங்கிபூர் காங்கிரஸுக்கும் சென்றிருந்தார். அந்தக் காங்கிரஸின் நடவடிக்கைகளில் அவர் ஒரு பெரிய பங்கு எடுத்துக்கொண்டார். கோகலேயின் பரிசுத்தமான தன்மை, ஆற்றல் முதலியவற்றைக் கண்ட ஜவாஹர்லாலுக்கு கோகலேயினிடம் அதிக மதிப்பு ஏற்பட்டது.

காங்கிரஸ் முடிந்தது. எல்லோரும் தம் தம் ஊர்களுக்குப் புறப்பட்டார்கள். கோகலேயும் கல்கத்தாவுக்குப் புறப்பட்டார். அந்தக் காலத்தில் கோகலே பப்ளிக் சர்விஸஸ் கமிஷன் மெம்பர்களுள் ஒருவராயிருந்தார். அந்த வேலையின் நிமித்தமாகக் காங்கிரஸ் முடிந்ததும் கல்கத்தாவுக்குச் சென்றார். அவருக்கென்று அரசாங்கத்தார் ஒரு தனி முதல் வகுப்பு வண்டியில் ஒரு அரையை ரிசர்வ் செய்து வைத்திருந்தார்கள். அப்போது அவருக்கு உடம்பும் அசௌக்கியமாயிருந்தது. காங்கிரஸில் கலந்து கொண்டதாலும் அவர் இன்னும் அதிகக் களைப்பை அடைந்திருந்தார். காங்கிரஸோ முடிந்தது. இனி தொந்திரவில்லாமல் தனிமையாக முதல் வகுப்பில் பிரயாணம் செய்யலாம் என்று கோகலே எண்ணினார். ஆகவே ரயிலடிக்கு வந்ததும் தன் கம்பார்ட்மெண்டண்டை சென்று அதில் ஏறிக்கொண்டார்.

சிறிது நேரம் கழித்து பூபேந்திரநாத் வசு என்பவர் கோகலேயிடம் வந்தார். இவர் பிற்காலத்திவ் காங்கிரஸ் பிரசிடெண்டாகவும் இருந்தார். பிற்காலத்தில் இந்தியா கவுன்சில் மெம்பராகவும் வேலை பார்த்தார். தடபுடலாகப் பேசுபவர். அதிகாரத் தோரணையுடன் கோகலேயைப் பார்த்து "நானும் உங்கள் வண்டியில் வரத் தீர்மானித்திருக்கிறேன். ஆக்ஷேபணை கிடையாதே" என்றார். சாதுவான கோகலே அவருடைய தோரணையையும் தீர்மானத்தையுங் கேட்டுச் சரி என்றார்.

உடனே வசு கீழே இறங்கி வேறு ஒரு வண்டிக்குச் சென்றார். சிறிது நேரத்தில் திரும்பி வந்து "நான் என்னுடைய நண்பர் ஒருவரையும் இந்த வண்டியிலேயே பிரயாணம் செய்யும்படி அழைத்திருக்கிறேன். அதற்கும் உங்களுக்கு ஆக்ஷேபணையிருக்காதே?" என்றார். என்ன சொல்வார் கோகலே. அதற்கும் சம்மதித்தார். வண்டி நகருவதற்குச் சற்று முன்பு வசு கோகலேயைப் பார்த்து, "நானும் என் நண்பரும் மேல் படுக்கையில் படுத்துத் தூங்க முடியாது. ஆகவே

நாங்களிருவரும் கீழேயுள்ள படுக்கையில் படுத்துக்கொள்ளுகிறோம். நீர் மேல் படுக்கையில் படுத்துக்கொள்ள வேண்டியது.'' என்று சிறிதும் தாக்ஷிண்யமின்றி வசு உத்திரவு போட்டார். அதற்கும் கோகலே ஒன்றும் பதில் சொல்லாமல் சம்மதித்தார்.

தன் உடம்பின் அசௌக்யத்தையும் கவனியாமல், தனக்கென்று ஏற்பட்ட சௌகரியத்தை வசுவுக்கும் அவரது நண்பருக்கும் கொடுத்தார். அன்றிரவு முழுதும் தூக்கமில்லாமல் கோகலே என்ன கஷ்டப்பட்டாரோ. ஒரு உத்தம தேச பக்தருக்கு ஏற்பட்ட சங்கடத்தைப் பாருங்கள்.

விசுவின் நடத்தைக்கு, நாம் ஒட்டகமும் கூடாரமும் என்ற ஒரு கதையை ஒப்பிடலாம். எனினும் இதினின்றும் கோகலேயின் பெருந்தன்மை நன்கு விளங்குகிறது.

---

* ஜவாஹர்லால் நேருவின் சுய சரிதம். ஆங்கிலப் பதிப்பு பக்கம் 27.

* ஸர். ஜேம்ஸ் யங் ஸிம்ப்ஸன்

டி. வி. ஸ்ரீனிவாஸன், எம்.பி., பி.எஸ்.

ஜேம்ஸ் யங் ஸிம்ப்ஸன் 1811-ம் வருஷம் ஜுன் மாதம் 7-ம் தேதி பாத்கேட் என்ற ஊரில் பிறந்தார். அவர் டேவிட் ஸிம்ப்ஸன் என்ற ஒரு ரொட்டிக் கிடங்கு சொந்தக்காரரின் ஏழாவது பிள்ளை. ஆகவே அவர் சாதாரண குடும்பத்தில் பிறந்தவர். ஸிம்ப்ஸனுக்கு ஆறு சகோதரர்கள் என்றாலும், ஆரம்பம் முதல் இவரே படிப்பில் அதிக ஊக்கம் கொண்டவராய் இருந்து வந்ததால், அவர் தகப்பனும், அண்ணன்களும் அதிக சிரமப்பட்டு, இவரை காலேஜ் படிப்பிற்கு அனுப்பினார்கள். இவரும், காலேஜ் படிப்புகளைச் சரிவர முடித்து, 1827-ம் வருஷத்தில், வைத்தியப்படிப்பை ஆரம்பித்து 1832-ல் எம். டி. (M.D.) என்ற வைத்தியப்பட்டம் பெற்றார். வைத்தியப் பட்டம் பெற்றபின் வெகு சீக்கிரத்திலேயே இவருடைய புத்தி நுட்பமும் மேதையும் நன்கு உணரப்பட்டு, இவருடை 28 வது வயதிலேயே, எடின்பரோவில், மருத்துவ வைத்தியத்தில் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். இவர் இந்த ஸ்தானத்தை வெகு மேன்மையுடன் வகித்து, எடின்பரோ வைத்திய ஸ்தாபனத்திற்கே பெரும் புகழும் பெருமையும் உண்டாக்கி வந்தார்.

1946-ம் வருஷம், அமெரிக்காவில், மார்டன் (Mordon) என்றவர், ஈதர் (ether) என்னும் மருந்தை ஒருவன் நுகர்ந்து சுவாஸத்தோடு உட்கொண்டால், அது மயக்கம் உண்டாக்கும் என்றும், அவ்வாறு மயங்கியிருக்கும் சமயத்தில், சீக்கிரம் செய்யக்கூடிய ஆபரேஷன்களை செய்துமுடிக்கலாம் என்றும் கண்டுபிடித்து, அம்முறையைக் கையாள ஆரம்பித்தார். இது ஸிம்ப்ஸன் காதிற்கு எட்டவே, அவர் அதில் அதிக ஊக்கம் காண்பித்தார். மற்ற வைத்தியர்களால், பெரிது என்று கருதப்படாத, இந்த மயக்கம் கொடுக்கும் ஆராய்ச்சியில், ரண வைத்திய சிகித்ஸையிலேயே ஒரு புரட்சி ஏற்படுத்தக்கூடிய ஒரு தன்மையை ஸிம்ப்ஸன் கண்டார். இதைப் பற்றி அவர், இது ஒரு மகத்தான யோசனை ; இது என் மனதில் வேறொன்றி வேறு ஒன்றைப் பற்றியும் நினைக்க முடியாதபடி என் மனதைக் கவருகிறது. 'என்று எழுதினார். இந்த வார்த்தைகளைச் சற்று கவனித்துப் பாருங்கள். எந்த மனிதனுக்காவது, ஏதாவது ஒரு விஷயத்தில் இத்தகைய ஆர்வம் ஏற்பட்டு, அவன் அம்முயற்சியை எடுத்துக்கொண்டால், அவன் அதில் வெற்றி அடைந்தே தீருவான். இது பல பிரமுகர்கள் விஷயத்தில் உண்மையானதுபோல், ஸிம்ப்ஸன் விஷயத்தில் உண்மையாயிற்று.

அவர் நம்முடைய பிரஸவ கேஸ்களுக்கு ஈதர் நுகரச் செய்து, பிரஸவத்தில் வேதனையை இம்முறையால் பெரும்பாலும் தீர்க்கலாம் என்று காண்பித்தார். ஆனால் நடைமுறையில், ஈதர் உபயோகிப்பது பல காரணங்களால் சுலபமானதாக இல்லாததால், அதைவிடச் சுலபமாய் உபயோகிக்கக்கூடிய மருந்து ஒன்றைத் தேட ஆரம்பித்தார். இவர் இம்முயற்சியில் ஈடுபட்டிருக்கையில், டேவிட் வால்டி (David Waldie) என்னும் மருந்து வியாபாரி (கெமிஸ்ட்) குளோரோ பாரம் என்னும் மருந்தை உபயோகித்துப் பார்க்கலாமே என்று ஒரு யோசனை சொன்னார். குளோரோ பாரம் என்னும் மருந்து 1831-லேயே கண்டுபிடிக்கப்பட்டிருந்ததாலும், அதை

* சென்னை ரேடியோவில் 14-10-41-ல் பேசப்பட்டது.

மயக்கம் உண்டாக்க உபயோகிக்கலாம், என்று இதற்கு முன் ஒருவரும் நினைக்க வில்லை. ஆகவே ஸிம்ப்ஸன் குளோ ரோபாரத்தை இவ்வாறு உபயோ கித்து பார்க்கலாம் என்று யோசனைக்கு ஒத்துக்கொண்டார். ஆனால் அபாயம் இருக்கக்கூடிய ஒரு புதிய முறையை, ஒரு நோயாளி மேல் பிரயோகித்து ஆராய்ச்சி செய்வது தர்மம் அல்ல, குற்றமும் ஆகும். ஆகையால் ஸிம்ப்ஸன் மிக்க தைரியத்துடன், தன் மீதே அம் மருந்தைப் பிரயோகம் செய்து கொள் வது என்று நிச்சயம் செய்துகொண் டார். அவருடைய உதவி டாக்டர் இரு வர், தாங்களும் இம்முயற்சியில் ஈடுபட ஒத்துக்கொள்ளவே, 1847-ம் வருஷம், நவம்பர் 4-ம் தேதியன்று, ஸிம்ப்ஸனும் அவரது இரு உதவி டாக்டர்களும், குளோரோ பாரத்தை. முடிந்தவரை நுகர்ந்தார்கள். நுகர்ந்துமூவரும் மயங்கி விழுந்து, கொஞ்ச நேரத்தில் மயக்கம் தெளிந்து எழுந்தனர். இவ்வாறு குளோ பாரத்தை, மயக்கம் கொடுக்கக்கூடிய மருந்தாக முதல் முதல் உபயோகிக்கப் பட்ட முயற்சி வெற்றிகரமாய் முடிந் தது. தன் மீதே பிரயோகித்து திருப்தி அடைந்ததால், ஸிம்ப்ஸன் இதில் தீவிர நம்பிக்கை கொண்டு, இதன் உப யோகத்தை அனுபவ சாத்தியமாய்ச் செய்வதில் ஊக்கம் கொண்டார். குளோ ரோபாரம் கொடுத்து ஆபரேஷன் செய்ய ஏற்பாடு செய்ய ஏற்பாடு ஆயிற்று. ஆனால் இந்த முதல் கேஸுக்கு ஸிம்ப் ஸன் போக முடியாதபடி ஏதோ இடை யூறு ஏற்பட்டதால், அந்த ஆபரே ஷன் குளோரோபாரம் கொடுக்கப்படா மலே செய்யப்பட்டது. துரதிர்ஷ்ட வசத்தால் அந்த நோயாளியின் உடலில் கத்தி வைத்ததுமே, நோயாளி இறந்து விட்டார். இந்த நோயாளிக்குக் குளோ ரோபாரம் கொடுக்கப்பட்டிருந்தால்? 'காக்கை உட்கார்ந்ததும், பனம் பழம் விழுந்ததாம்' என்பதுபோல் குளோ ரோபாரம் கொடுத்தால்தான் நோயாளி இறந்தார் என்று எல்லோரும் ஓலமிட்டு, குளோரோ பாரத்தைச் சரிவர உபயோ கித்து ஆராய்ச்சி செய்யவே முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கும். நல்லவேளை யாக, அந்த கேஸுக்கு குளோரோ பாரம் கொடுக்கப்படாமல், பிறகு எடின் பரோ ஆஸ்பத்திரியில் ஒரு நோயாளிக்கு 1847-ம் வருஷம், நவம்பர் 15-ம் தேதி யன்று குளோரோபாரம் கொடுக்கப்பட்டு அதன் போதையில் நோயாளி வசப்பட் டிருக்கையில், ஆபரேஷன் திருப்திகர மாய் நடந்தது. ஸிம்ப்ஸனின் மனோ பீஷ்டமும் நிறைவேறியது.

ஆனால் ஸிம்ப்ஸனின் இயக்கம் இத னால் உடனே வெற்றி பெற்று விடவில்லை. உலகில், மனித சமூகத்தின் முன்னேற்றத் திற்கான எந்த நூதன முறைக்கோ அல்லது இயக்கத்திற்கோ ஆரம்பத்தில் எதிர்ப்பு இல்லாமல் இருந்ததே இல்லை. பிரபல விக்ஞானிகள் யாவருக்கும் ஏற் படும் எதிர்ப்பு ஸிம்ப்ஸனுக்கும் ஏற்பட் டது. குளோரோ பாரம் கொடுப்பதால் உடலுக்கே பெருந் தீங்கு உண்டாகும் என்று சிலர் கட்சி கிளப்பினார்கள். இன் னும் சிலர், இவ்வாறு குளோரோ பாரம் கொடுத்து வலியைத் தெரியாமல் செய்வது சமூகக் கோட்பாடுகளுக்கும், மதாசாரத் திற்கும் விரோதம் என்று வாதித்தார்கள். நூறு வருஷங்களுக்குப் பிறகு, இப் போது நமக்கு இவை சாரமில்லாத வாதங்கள் என்று தெளிவாய்த் தெரிந் தாலும், அக்காலத்தில் ஸிம்ப்ஸன், வெகு சிரமப்பட்டுத்தான் இவைகளுக்குச் சமா தனம் சொல்லித்தன் காரியத்தைச் சாதித் து வர வேண்டி இருந்தது. குளோரோ பாரம் ரண வைத்தியத்தில் நோயாளிக்குச் செய்யும் பேருபகாரத்தை மேலும் மேலும் பலர் அறிய, பொது ஜனங்களும், மற்ற வைத்திய சங்கத்தார்களும் ஸிம்ப்ஸனைப் போன்று ஆரம்பித்தனர். 1847-ல் அவர் மாக்ஷிமை தங்கிய மாஹாராணியாரின் வைத்தியர் என்ற பட்டத்தைப் பெற்றார். 1856-ல் பிரஞ்சு விக்ஞான சபை, மனித சமூகத்திற்கே மாபெரும் நன்மையை அளித்தவர் என்பதற்காக அவருக்கு ஒரு பரிசு அளித்தது. 1866-ம் வருஷம் அவருக்கு "ஸர் (Sir) என்ற பட்டம் அளிக்கப்பட்டது. ஸ்காட்லாந்தில் வைத்தியத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர் களில் ஒருவர் இப்பெரும் பட்டத்தை அடைந்தது இது தான் முதல் தடவை

விம்ப்ஸன் அளித்த குளோரோபாரம் என்ற கொடையால், ரண வைத்ய சாஸ்திரம் எவ்வளவு முன்னேறி இருக்கிறது என்பதை இப்போது சற்றுக் கவனிக்கலாம். விம்ப்ஸனுக்கு முந்திய காலத்து ரண வைத்திய சிகிச்சை எல்லாம் பார்க்கக் கோரமானதும், நோயாளிக்குத் துன்பகரமுமான செய்கைகளாயுமிருந்தன. தசையைக் கத்திகொண்டு நறுக்கும் போது ஏற்படும் வலியை, நோயாளி சகித்துக் கொண்டிருக்கும் நிலையில், வெகு துரிதமாய்ச் செய்யக்கூடிய சொற்ப சிகிச்சைகளையே ரண வைத்தியர்கள் செய்ய முடிந்து வந்தது. ஆனால் நோயாளிக்கு குளோரோபாரம் கொடுத்து ஸ்மரணை தெரியாமல் மணிக்கணக்கில் வைத்துக்கொள்வது சாத்தியமானபின், ரண வைத்திய சாஸ்திரம் அடைந்திருக்கும் வளர்ச்சிமிக்க ஆச்சரியமானது. இன்று நமது பிரபல ஆஸ்பத்திரிகளில் உள்ள ஆபரேஷன் செய்யும் பிரத்யேக விடுதிகளில், நோயாளிக்கு நடக்கும் ரண வைத்ய சிகிச்சையின் உன்னத நிலை எங்கே?—சற்றேறக்குறைய 100 வருஷங்களுக்கு முன் நடந்து வந்த துன்பம் நிறைந்த ரண வைத்தியத்தின் நிலை எங்கே? குளோரோ பாரம் முதலிய சாதனங்களை உபயோகப்படுத்தி, இன்று ரண வைத்தியர்கள், பற்பல அரிய, ஆபரேஷன்களை, நிதானமாய்ச் செய்து, பல கடுமையான வியாதிகளை நிவாரணம் செய்ய முடிகின்றது. சுருங்கச் சொல்லின் இன்று மனித சரீரத்தில் ரண வைத்தியரின் நலம் தரும் கத்தி, புகமுடியாத இடமோ அல்லது அவயவமோ இல்லை என்று சொல்லலாம். இம்மகத்தான வளர்ச்சிக்கு ஆதாரத்தை அளித்தவர் விம்ப்ஸனே. ரண வைத்ய ஆபரேஷன்கள், நோயாளிக்கு வலியின்மை செய்வது (Annesthesig) ஒரு தனிக் கலையாக இருந்து வருகிறது.

விம்ப்ஸன் வைத்திய சாஸ்திரத்தின் மற்றப்பகுதிகளிலும் அநேக ஆராய்ச்சிகள் செய்து உதவியிருக்கிறார். இவை முக்யமாய் மருத்துவசாஸ்திர சம்பந்தமானவை. அவர் தர்க்கத்தில் பெரிய நிபுணர். தம்மை எதிர்த்து நிற்போரைத் தம் பக்கம் திருப்புவதில் மகா கெட்டிக்காரர் வைத்தியத் தொழிலும் வைத்திய ஆராய்ச்சிகளிலும் ஓய்ச்சல் ஒழிவின்றி ஈடுபட்டு வந்த போதிலும், அவர் சிறந்த கலாபிமானி, தனது வசிகரமான குணங்களினால் தன்னுடன் பழகும் எல்லா நண்பர்களின் அன்பையும் பெற்றார். தம் தினசரி வாழ்க்கையில், ஏழைகளுக்கு வைத்தியத்தில் பெரும் உதவி செய்து வந்தார்.

இவ்வாறு அவர் அழியாப் புகழ் பெற்று. 1870–ம் வருஷம் மே 6–ம்தேதி தமது 60-வது வயதில் காலமானார். அவர் மரணம், ஜனங்களை துக்கத்தில் ஆழ்த்தியது. எடின்பரோவில், அவர் பிரேத ஊர்வலம், பொதுஜனச் சார்பாக நடத்தப்பட்டு, அதில் பொதுமக்கள் அனைவரும் கலந்துகொண்டு தங்கள் நன்றியறிதலைக் காட்டினர். அவர் ஞாபகார்த்தமாய், அவருடைய உருவச் சிலை பல பட்டணங்களில் வைக்கப்பட்டது. மேலும், எடின்பரோவில் அவருடைய ஞாபகார்த்தமாய் ஒரு பெரிய ஆஸ்பத்திரி கட்டப்பட்டது. அவர் உருவச்சிலை ஒன்று லண்டனில் பிரபல வெஸ்ட்மின்ஸ்டர் மாதாலயத்தில் வைக்கப்பட்டு, அதன் கீழே குளோரோ பாரத்தை உபயோகித்து, மனிதர்களுக்கு அவஸ்தையையும், வலியையும் ரண வைத்தியத்தினின்று விலக்கிய விம்ப்ஸனுக்கு உலகம் என்றும் கடமைப்பட்டிருக்கிறது என்ற வாக்கியத்தைச் செதுக்கி இருக்கிறார்கள்.

இன்று குளோரோ பாரம் கொடுக்கப்பட்டு ஆபரேஷன் செய்து கொள்ளும் ஒவ்வொருவரும் விம்ப்ஸனுக்குக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு ஆபரேஷனும் விம்ப்ஸனின் ஞாபகச்சின்னமே.

அரிசி

[அகில இந்திய கிராமத் தொழிற் சங்கத்தார் வெளியிட்டது.]

ஆ. வே. ஜெயராமன் (தமிழ்ப்படுத்தியவர்)

அத்தியாயம் 2

நெல் அரைக்கும் இயந்திரங்களும்
மெருகு கொடுக்கும் இயந்திரங்களும்

இந்தியாவில் பல இடங்களில், நெல்லை வீட்டிலேயே அரைக்கக்கூடிய பல சுதேசி இயந்திரங்கள் இருக்கின்றன. அவைகள் பின் வருமாறு:

1. அஸ்ஸாம் மரச்சக்கி (டிலெய்ன்)

இந்த அஸ்லாம் மரச் சக்கியில் நம் நாட்டு மாவரைக்கும் இயந்திரத்தைப் போல இரண்டு வட்டமான பாகங்கள் உண்டு. இந்த இயந்திரம் மரத்தினால் செய்யப்பட்டிருக்கும். அதன் உயரம் 5 அடியும், வட்டத்தின் மத்திம அகலம் 15 அங்குலமும் இருக்கும். ஒரு மனிதன் நின்றுகொண்டு, இயந்திரத்தின் மேல் பாகத்தில் பொருத்தியிருக்கும் 'T' போன்ற பிடியை முன்னும் பின்னும் இழுக்கவேண்டும். இந்த இயந்திரத்தில் சுமார் 100 பவுண்டு நெல் அரைக்கலாம். இதன் விலை 9 ரூபா.

2. வங்காள மரச்சக்கி

இந்த இயந்திரமும் அஸ்ஸாம் சக்கியைப் போலவே இருக்கும். ஆனால் அதைவிடச் சிறியது. ஒரு ஸ்திரீயால்கூட இயந்திரத்தில் நெல் அரைக்கலாம். வங்காளத்திலுள்ள பெரிய மில்களிலெல்லாம் நெல்லினுடைய தராதரத்தைப் பரீட்சை செய்ய இயந்திரத்தை உபயோகப்படுத்துகிறார்கள். இதில் மணிக்கு 30 பவுண்டு நெல் அரைக்கலாம். நெல் அரைபடும் பாகம் நடுவிலிருந்து விளிம்புவரை சரிவாக இருக்கும். நெல் அரைத்துக்கொண்டே இருக்கும் பொழுது திடீரென்று நிறுத்தக்கூடாது. அப்படி நிறுத்துவதினால் நெல் பற்களுக்கு மத்தியிலுள்ள பள்ளத்தின் வழியே அரைபடாமல் வெளியே வந்து விழும். இந்த இயந்திரம் மரத்தூள்களினால் செய்யப்படுவதால் வெய்யல் காலத்தில் இது வெடித்துப் போய் உபயோகமற்றுவிடும். இதன் விலை 4 ரூபா.

3. மஹாராஷ்டிரா மரச்சக்கி

இந்த இயந்திரம் ஒரு அடி உயரமும், 27 அங்குலம் அகலமுமிருக்கும். பம்பாய் மாகாணத்தில் ரத்தினகிரி ஜில்லாவில் இதை அதிகமாக உபயோகப் படுத்துகிறார்கள். மற்ற இயந்திரங்களைவிட இது அதிக உபயோகமாகவும், இருக்கும். இதில் ஒரு மணிக்கு அதிகமாகவும் நெல் அரைக்கலாம். ஆனால் இந்த இயந்திரம் மாமரத்தினால் செய்யப்படுவதால், இரண்டு நாள் அரைப்பிலேயே இதனுடைய பற்களெல்லாம் தேய்ந்துவிடுகின்றன. அதுவுந் தவிர இதன் அகலம் 27 அங்குலமாக இருப்பதால் உட்கார்ந்து அரைப்பதற்குச் சிறிது அசௌகர்யமாக இருக்கும். அகலம் 22 அல்லது 24 அங்குலமாக இருந்தால் ரொம்ப சௌகர்யமாக இருக்கும். அகலம் பெரிதாக இருக்குமானால் சுற்றும் வேகம் குறையும். இந்த இயந்திரத்தில் மணிக்கு 60—லிருந்து 80 பவுண்டு நெல் வரை அரைக்கலாம். இதன் விலை. 7 ரூபா.

கல் இயந்திரம்

பம்பாய்க்கு அருகிலுள்ள வில் பார்லி என்னுமிடத்தில் ஒருவகைக் கல் அகப்படுகிறது. இக்கல்லினால்கூட இயந்திரம் குஜராத்தில் பழக்கத்தில் இருந்து வருகிறது. இந்த இயந்திரத்தின் அகலம் 2 அடி, உயரம் 3 அங்குலம். அரைக்கும் நெல்லின் தராதரத்துக்குத் தகுந்தபடி இந்த இயந்திரத்தை சரிபண்ணிக்கொள்ளலாம். இதில் ஒரு மணியில் 80-லிருந்து 100 பவுண்டுவரை நெல் அரைக்க முடிக்

தாலும், அரிசி அதிகம் நொருங்கிவிடுகிறது. ஆனால் இதில் ஒரு சௌகர்யம் என்னவென்றால் பல வருஷங்கள் இதனுடைய பற்கள் தேயாமல் இருக்கும். இதன் விலை 6 ரூபா. அதிக சௌகர்யமாக இருப்பதாலும், மலிவாக இருப்பதாலும், பல இடங்களில் இதை உபயோகிக்கிறார்கள்.

மைசூரிலிருந்து வந்த ஓர் இன்ஜினீர் கூட இதேபோல சிமிண்டினாலும், காங்கிராட்டினாலும் செய்ய முயற்சியெடுத்துக் கொண்டு வருகிறார்.

மசூலிப்பட்டணம் சக்கி

மசூலிப்பட்டணத்தில் இதே கல் இயந்திரத்தை இரண்டு பற் சக்கரங்களினால் ஓட்டுகிறார்கள். இது மணிக்கு இரண்டு மணங்கு நெல் அரைக்கிறதாம். இதன் விலை 120 ரூபா.

களிமண் சக்கி

மத்திய மாகாணங்களில் இதை அதிகமாக உபயோகப்படுத்துகிறார்கள். ஒரு இயந்திரம் மூன்று மாதத்துக்கு வரும். நம் பக்கத்தில் மாவரைக்க உபயோகப்படும் இயந்திரத்தை ஒத்ததுதான் இதுவும். இதன் அகலம் 16 அல்லது 18 அங்குலமிருக்கும். களி மண்ணுடன் தேங்காய் நாறு அல்லது வேறு நார்களைக் கலந்து பிசைந்து இந்த இயந்திரத்தின் இரு பாகங்களையும் செய்வார்கள். சில இடங்களில் மேல் பாகத்தைச் சுட்டு வைத்துக் கொள்வதும் உண்டு. வெய்யல் காலத்திலேயே நாலைந்து இயந்திரங்களைச் செய்து வைத்துக்கொள்வார்கள். இதனுடைய பற்கள் சீக்கிரம் தேய்ந்துவிடும். இதில் அரைத்த அரிசியை 'தெங்கி' என்னும் இயந்திரத்தில் மெருகு போட்டுக் கொள்வார்கள். இதற்கு விலையே இல்லை. ஆதலால் ஏழைகளுக்கு இது மிகவும் உபயோகமாக இருக்கிறது.

உரலும் உலக்கையும்

தமிழ் நாட்டில் மில் வருவதற்கு முன்பெல்லாம் உரலில்தான் நெல் குத்துவார்கள். இந்த உரலும், உலக்கையும் எல்லோருக்கும் தெரிந்ததே. இதில் நெல் குத்துவது கொஞ்சமாக இருந்தாலும், அரிசியின் சத்துக்கள் அதிகம் வீணாவதில்லை. இந்த உரலிலேயே அரிசியைத் தீட்டி மெருகு கொடுப்பார்கள்.

ஓர் புது சக்கி

நெல்லை அதிகம் அரைப்பதற்கும், கிராமக் கைத் தொழிலுக்கு உகந்ததாயும் இருக்கும்படியான ஒரு புது மரச் சக்கியைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இது ஏறக் குறைய மஹாராஷ்டிரா சக்கியைப் போலத்தான் இருக்கும். இதை 'சம மர நெல் சக்கி' என்றும் கூறுவார்கள்.

இந்த இயந்திரம் செய்வதற்கு வேப்பை, பாபுல், விரிஷ், புளி முதலிய மரங்களை உபயோகப்படுத்துகிறார்கள். மாவரைக்கும் இயந்திரத்தைப் போல இரு வட்டமான பாகங்களுண்டு.

ஒவ்வொரு பாகமும் 18 அங்குல அகலமும் 4 அல்லது 5 அங்குல கனமும் இருக்கும். அடிப் பாகத்தின்மேல் பரப்பிலும், மேல் பாகத்தின் அடிப் பரப்பிலும், அரத்தில் அறுத்துவிட்டிருப்பதேபோல, அறுத்துவிடப்பட்டிருக்கும் அடி பாகத்துடன்மேல் பாகம் சேர்ந்து சுற்றுவதால் நெல்லின்மேலிருக்கும் உமி நீங்கி அரிசி வெளிப்படுகிறது.

இயந்திரத்தின் மேல்பாகமும், கீழ்ப் பாகத்தின் மேல் முகமும் படத்தில் காட்டியபடி அறுத்துவிடப்பட்டிருக்கும். படத்தில் காட்டியிருக்கும் கோடுகளெல்லாம் பற்களெல்லாம் பற்களே இந்தப் பற்கள் கூர்மையாயில்லால் சிறிது மழுங்கியே இருக்கும்.

பற்களில் நெல் அகப்பட்டு அதன் மேல் தோல் நீங்கி அரிசியாக வெளியே வந்து விழுகிறது.

கீழ் பாகத்தின் நடுவில் 2½ அங்குல முளை ஒன்று அடிக்கப்பட்டிருக்கும். இம்முளையில் ஒரு அங்குலந்தான் வெளியே தெரியும், இம்முளையில் தான் மேல் பாகம் சுற்றும். மேல் பாகத்திலே நெல் உள்ளே விழுவதற்கு இரண்டு அர்த்த வட்டமான ஓட்டைகள் உள்ளன. இந்த இரு ஓட்டைகளுக்கு மத்தியில் பாலம் போல இருக்கும் மரபாகத்தின் நடுவில் பொருத்தப்பட்டிருக்கும் முளை நுழைந்து சுற்றுவதற்கு ஓர் சிறிய துளை உண்டு. அந்த இரு அர்த்த வட்டங்களின் பக்கம்

-சரிவாகச் செதுக்கப்பட்டிருக்கும். இதே மாதிரியான சில இயந்திரங்களின்மேல் பாகத்தின்மேல் முகமே சற்று குழிவாகத்தான் இருக்கும். அப்பப்பொழுது பிடிப்பிடியாக நெல் எடுத்துப் போட்டுக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, ஒரே தடவையில் ஒரு இருபது பிடி நெல்லை எடுத்துப் போட்டு அரைக்கலாம்.

மேல் பாகத்தின் மேல் முகத்தில் பொருத்தப்பட்டிருக்கும் கைப்பிடியைக் கொண்டு சுற்ற வேண்டியது.

இந்த சக்கியில் இயந்திரத்தில் ஒரு நாளைக்கு எட்டு மணி நேரத்தில் சுமார். 4 லிருந்து 5 மணங்கு நெல் அரைக்கலாம்.

இதில் அரிசி இடிவது மிகவும் சொல்பமே. 5 சத விகிதந்தான் இடிகிறது என்று சொல்கிருர்கள். ஆனல் அரிசி இடிவது, நெல்லின் தராதரத்தையும் காய்ச்சப் பாட்டையும், குதிரில் போட்டிருக்கும் காலத்தையும் பொறுத்திருக்கும்.

மூன்று நாட்கள் சேர்ந்தாற் போலவோ, அல்லது 12-லிருந்து 15 மணங்கு வரை நெல் அரைத்தாலோ இந்தச் சக்கியினுடைய பற்கள் தேய்ந்து விடுகின்றன. ஆனல் அதை நாம் அப்பப்பொழுது கூர் தீட்டிக்கொள்ளலாம்.

இது அரிசி வியாபாரிக்கு அதிக உபயோகமாக இல்லாவிட்டாலும், வீட்டிலேயே நெல் அரைப்பதற்கு ஓர் இன்றியமையாத இந்திரமே. இந்த இயந்திரத்தில் அரைபடும். அரிசி அதிக சத்துள்ளது. அது தவிர நம் நாட்டில் வளரும் தேக்கு மரமும், நம் கிராமத்து தச்சு வேலையும் இந்த யந்திரம் செய்வதற்கு உபயோகப்படுகிறது.

மெருகு போடுதல்

'மெருகு போடுதல் என்பதையே கிராமாந்திரங்களில் 'தீட்டுதல்' என்று கூறுவார்கள் இதையே 'பாலிஷ் போடுதல்' என்றும் கூறுகிருர்கள். அரிசியை மெருகு கொடுப்பதானல் சத்துள்ள பாகங்கள் அழிந்து போகின்றன. இருந்தாலும் மெருகு கொடுத்துத்தான் தீர வேண்டுமென்ருல் அதற்கு உரலையாவது, தெங்கி என்ற இயந்திரத்தையாவது உபயோகித்துக் கொள்ளலாம்.

தெங்கி

தெங்கி அரிசிக்குப் பாலிஷ் போட உபயோகப்படுகிறது. ஒரு நீளமான கழியின் ஒரு முனையில் ஒரு உலக்கையின் அடியில் உரல் வைக்கப்பட்டிருக்கும். ஒருவன் மற்றொரு பக்கத்திலிருந்து கொண்டு கழியின் மற்றொரு முனையை கீழும் மேலும் அழுத்தி தூக்கி விடுவதால் உலக்கையும் கீழும் மேலும் போய்க் கொண்டிருக்கும். உரலிலுள்ள அரசியும் இதனல் தீட்டப்பட்டு விடும். இந்த தெங்கியில் ஒரு நாளைக்கு 8 மணி நேரத்தில் $2\frac{1}{2}$ மணங்கு அரிசியைப் பாலிஷ் பண்ணலாம். இதன் விலை 8 ரூபா.

அரிசி புடைத்தல்

கிராமாந்திரங்களில் முறத்தினல் புடைத்துத் தவிட்டையும் உமியையும் நீக்குவார்கள். ஆனல் இதனல் கால விரயம் அதிகமாக ஆகிறது. அத்துடனில்லாமல் உழைப்பும் அதிகந்தான். இவ்விதம் அனவசியமாக உழைப்பு வீண் போகாமல் இருப்பதற்கு விசிறியை உபயோகப் படுத்துகிருர்கள்.

இந்த விசிறியின் அமைப்பு பின் வருமாறு: உருட்டையான அச்சில் ஆறு பலகைகள் பொறுத்தப்பட்டிருக்கும். இது மரப்பலகையினலாவது, தகரத்தினலாவது மூடப்பட்டிருக்கும். பலகையோடு கூடிய அச்சு சுற்றிக்கொண்டே இருக்கும். உமியோடு கலந்த அரிசி உள்ளே செல்லும்பொழுது, விசிறி சுற்றுவதால் உண்டாகும் காற்று அரிசியிலிருந்து உமியையும் தவிட்டையும் பிரித்து விடுகிறது. அவ்விதம் பிரிக்கப்பட்ட அரிசி கீழே விழுந்து விடுகிறது. உமியும் தவிடும் மற்றொரு அரைக்குச் சென்று படிந்து விடுகிறது. இதன் விலை 25 ரூபா. முறத்தினல் செய்யப்படுவதைவிடப் பத்து மடங்கு வேலையை இது செய்து விடுகிறது.

பெற்றமனம் பித்து

எஸ். குஞ்சிதபாதம்

காற்று ஊளையிட்டது. எங்கும் கவிந்து கொண்டது இருள். உடனே கூரிய அம்புகள் போல் தாக்கலாயிற்று மழை. கரிய மேகத்திரளை வாள் போல் வெட்டிக் கிழித்துக் கொண்டு சென்றது ஒரு மின்னல். உலகமே தவிடு பொடியாகிவிடும் போல் ஒரு இடி; பேரிடி; இடித்தது. தரையில் தண்ணீர் பிரவாகமெடுத்து ஓடியது. மறுபடி ஒரு மின்னற் கொடி துள்ளியோடிற்று.

அம்மின்னலின் ஒளியில் ஓடுகள் சரிந்த ஒரு பாழ்மனை தெரிந்தது. குளிரால் நடுங்கி, ஈரத்துணியால் முக்காடிட்டுக் கொண்டு ஒரு கிழஸ்திரீ அங்கு உட்கார்ந்திருந்தாள். அவளுக்குச் சற்று அப்பால், திண்ணையில் பள்ளம் பறித்துக்கொண்டு கதகதவெனவிருக்கும் மண்ணில் சுகமாகப் படுத்து, ரத்தம் தோய்ந்த எலும்பைக் கடிப்பது போல் ஒரு நாய் கனவு கண்டு கொண்டிருந்தது. அந்தக் கிழவி அயர்ந்து கிடந்தாள். உலகத்தில், வாழ்க்கையில், அவளுக்கு ரஸம் இல்லை. தூக்கம் அவளை ஸ்மரணையற்றுக் கிடக்கச் செய்தது.

அவள் மறுபடியும் கண்விழித்துப் பார்த்தபோது தெருவில் சிறுமிகள் கோலமிட்டுக் கொண்டிருந்தனர். மழைபெய்த தன் அடையாளமாகத் தரை மட்டும் நனைந்திருந்ததேயன்றி வானம் நிர்மலமாக இருந்தது. சூரிய கிரணங்கள் ஓடுகளின் மீது பிரகாசிக்க அவற்றிலிருந்து புகைபோல ஆவியெழுந்து கொண்டிருந்தது.

கிழவி மெள்ள மெள்ள சமாளித்துக் கொண்டு எழுந்திருந்து ஒரு மாடி வீட்டின் திண்ணையை அடைந்தாள். அவளால் மேலே நடக்க முடியவில்லை. கண்கள் சொருகிக்கொண்டன. அவளது கிழ அங்கங்கள் சுருக்கம் மிகுந்து யமன் அவளை விரும்பாமல் இவ்வுலகிலேயே விட்டு வைத்திருக்கிறானே என்று தோன்றச் செய்தன. அவள் அங்கே உட்கார்ந்து விட்டாள். சற்று நேரத்தில் கலவரமடைந்தவள் போல எழுந்திருக்க முயன்றாள். அவள் எழுந்து தள்ளாடிக் கொண்டே கீழே விழும் சமயம் அயல் வீட்டுக்காரர் அவளருகில் ஓடி வந்து பிடித்துக் கொண்டு, "யார் அம்மா நீங்கள்?" என்று அநுதாபத்துடன் வினவினர். "நானா அப்பா? என்னையா விசாரிக்கிறாய்? நான் ஒரு அனாதை. என் கதை ஒரு பெரிய கதை. அதைச் சொல்ல வேண்டுமா? வேண்டாமப்பா? எனக்கு இரண்டு கவளம் சோறு கொடு போதும்; பசிதாங்க முடியவில்லை" என்று சிரமப்பட்டுக் கொண்டே கிழவி சொன்னாள்.

"அடியே செல்லம்! இங்கே வா! ஒரு செம்பு ஜலம் கொண்டு வா! பாட்டி! பல் விளக்குங்கள். கொஞ்சம் ஆகாரம் சாப்பிட்டால் களை தெளியும். ரொம்ப சோர்ந்து போயிருக்கிறீர்கள்" என்றார் அவர்.

அவருடைய மகளான செல்லம்மாள் ஜலம் கொண்டு வந்து கொடுத்ததும், நிலையில்லாமல் துடிக்கும் விரல்களை பொக்கை வாயில் விட்டுக் கிழவி குழப்பினாள். பிறகு மெள்ளத் தள்ளாடிக் கொண்டு உள்ளே சென்று ஆகாரம் சாப்பிட்டு ஆயாசம் தீர்த்தாள்.

"அப்பா! உனக்குப் புண்ணியம் உண்டு. உன் குழந்தை, குட்டிகளுடன் தீர்க்காயுசாக இருக்க வேண்டும். இந்த நாதியற்ற ஜடத்தை வேண்டிய உபசாரம் செய்து விட்டாய். நான் போய் வருகி

தேன்" என்று தழுதழுத்த குரலில், நன்றி பாராட்டும் வார்த்தைகளால் வந்தனம் கூறிவிட்டு கிழவி எழுந்திருந்தாள்.

"உங்களால் இப்பொழுது போக முடியாது. இங்கேயே சில நாள் நீங்கள் இருக்கலாம். பிறகு உங்களுக்கு சொந்தக்காரர்கள் யாராவது இருந்தால் அவர்களிடம் அனுப்புகிறேன். உங்களுக்குப் பிள்ளைகள் ஒருவரும் இல்லையா?" என்று அந்த வீட்டுக் குடையவர் சொன்னார்.

"எனக்கு ஒரே ஒரு பிள்ளை. அவன் இப்பொழுது இருந்தால் உன்னைப்போலத்தான் இருப்பான். உனக்கு நாற்பது இருக்காதா? அவன் இன்னும் ஜீவதசையுடன் இருந்தால் அவ்வளவு வயது தான் இருக்கும். ஆமாம்! போனதை நினைத்து நினைத்துத் தான் இந்தக் கதிக்கு வந்தேன்." என்றாள் கிழவி.

"விவரமாகக் கூறுங்கள். உங்களுக்கு எந்த ஊர்? உங்கள் வரலாற்றைச் சொல்லுங்கள். உங்களைப் பார்த்தால் பெரிய வம்சத்திலிருந்து வீணாகப் போனவர்கள் மாதிரி இருக்கிறது?" என்று பரிதாபப் பட்டுக் கேட்டார் அவர்.

"வாழ்க்கை முழுவதும் துக்கப்பட்ட என் கதையைக் கேட்க வேண்டுமா? நீ அன்புடன், அநுதாபத்துடன் கேட்கிறாய்! சொல்கிறேன்" என்று சொல்லி விட்டு ஆரம்பித்தாள் கிழவி. பழைய ஆனந்தத்தை நினைக்கும் போது அவள் கண்களில் பிரகாசமும், கண்ணீரும் தோன்றின. கிழவி சொன்ன விவரங்களைக் கொஞ்சம் மசாலை கலந்து பக்குவம் செய்து கதை வடிவத்தில் நான் எழுதுகிறேன்.

1

காங்கையன்பட்டி என்பது ஒரு பெரிய ஏகபோகக் கிராமம். அதன் சொந்தக்காரர் பெரிய தம்பி உடையார் என்பவர். அவர் வாழ்நாள் முழுமையும் அவ்யாஜிருதமாக வீணாக்கினர். அவருடைய தகப்பனர் சாகுந்தறுவாயில் அவரிடம் ஒப்படைத்த இரண்டு லக்ஷம் ரூபாய்களும், நகைகளும் எப்படி எப்படிப், பிரிந்து எங்கெங்கு சென்றன என்பது கூடத் தெரியாமல் போயின. நன்செய் நிலங்களில் பாதிப்பகுதி யாரிடமோ அடமானமாக இருந்தது என்று ஜனங்களிடையே ரகசிய வதந்தி பரவியிருந்தது. அவருடைய மனைவி அவரைச் சுகமாக அனுபவிக்க விட்டு விட்டு, தான் துக்கத்தையே சுமந்து சுமந்து தாளாமல் இறந்து போய்விட்டாள். அப்பொழுது அவருக்கு வயது ஐம்பதுக்கு மேல் இருக்கும்.

ஆனல் அவ்வளவு வயதுடையவராக அவரை யாரும் மதிக்க முடியாது. அவருடைய மீசை அடர்ந்து கறு கறுவென்று வளர்ந்திருக்கிறது. அவரது வயதின் உண்மையைத் தெரிவித்துவிடும் போலிருந்த தலைமயிரில் அவர் கருந்தைலமிட்டுக் கொள்வார். ஒளி வீசும் இரு பெரிய வைரக்கடுக்கன்கள், அவர் வயதில் பத்தைக் குறைத்துக் காட்டின. அவருடைய நெற்றியில் விளங்கிய பெரிய ஜவ்வாதுப் பொட்டும் நெற்றியின் சுருக்கங்களுக்கு அழகு கொடுத்தது. இந்த நிலைமையில் அவர் மறுமணம் செய்து கொள்ளாமல் எப்படி இருக்க முடியும்?

'நான் தான் அவரைக் கல்யாணம் செய்து கொள்வேன்' என்று ஒரு பெண்ணும் அவரிடம் வரவில்லை. ஆனல் 'என் பெண்ணைத்தான் செய்து கொள்ளவேண்டும்' என்று ஏராளமான பெற்றோர்கள் அவருடைய வீட்டு வாயிலில் மண்டி போட்டுக் காத்திருக்கலாயினர். அவருடைய கண்ணோட்டம் சாம்பசிவ உடையார் என்னும் அவருடைய தூரபந்து ஒருவர்மீது விழுந்தது. அந்தக் கண்ணோட்டம் அவருடைய பெண்மீது முன்பே விழுந்து விட்டது. சாம்பசிவ உடையார் தாஸானுதாஸராகப் பெரிய தம்பி உடையார் மருமகராகக் கிடைக்கும் காலமெதுவோ என்று தவமிருந்தார். சாம்ப சிவ உடையார் பிரார்த்தனை செய்து கொண்ட பிள்ளையாருக்கு, நூற்றெட்டுத் தேங்காய்கள் கிடைக்கும் பிராப்தம் இருக்கும் போது பெரிய தம்பி உடையார் ஏன் அவரைப் பெண் கேட்க மாட்டார்?

ஆனல் பத்மாவதி என்னும் பெயருள்ள சாம்ப சிவ உடையாரின் மகள் சம்மதிக்கவில்லை. அவளுடைய தாயார் சண்பகமும் அவளுடைய தாள்வாயைப் பிடித்

துக் கொண்டு கெஞ்சிப் பார்த்தாள். கிழவரைக் கல்யாணம் செய்து கொள்வதைவிட அநித்தியமான சரீரத்தைக் காவேரியம்மனிடம் ஒப்படைத்து விடுவதாக அப்பெண் கூறினாள்.

"அப்படிச் சொல்லாதே அம்மா! அவருக்கு வயதே ஆகவில்லை. நமக்கு வேறு வரன் தான் எங்கே கிடைக்கும்? நீ அவரைக் கல்யாணம் செய்து கொண்டால் நிறைய நகைகள் போட்டுக் கொள்ளலாம். வைர அட்டிகை, கல்லிழைத்த ஒட்டியாணம் இன்னும் என்ன வெல்லாமோ கிடைக்கும். அடுப்பங்கரைப் பக்கமே பாராமல் எப்பொழுதும் கண்ணாடியையே பார்த்துக் கொண்டு தேகம் அலுங்காமல் நாஸூக்காக இருக்கலாம். ஒவ்வொரு வேளையிலும் உயர்ந்த சாப்பாடு தவசிப் பிள்ளை பரிமாறுகிறான். கை பிடிக்க நாலு பெண்கள்; கால் பிடிக்க நாலு பெண்கள், பன்னீரிலேயே ஸ்னானம் பண்ணலாம் பத்மா,!" என்று குழந்தையின் இளமனதை தன் நய வார்த்தைகளால், சந்தனத்தைப் பன்னீரால் கரைப்பது போலக் கரைத்தாள் சண்பகம்.

பத்மாவதிக்கும் அவைகளைக் கேட்கக் கேட்க ஆசை உண்டாயிற்று. ஆனால் 'உடையாரின் மீசை பயங்கரமாக இருக்கதே! அவர் பத்மாவை இடது கையால் தூக்கி அம்மானை ஆடிடவும் முடியுமே! அவரையா கல்யாணம் செய்து கொள்வது?' என்று பத்மாவதியின் மனம் தத்தளித்தது.

"பத்மா!" என்று தகப்பனாரின் குரல் கேட்டது. பத்மா தலைகுனிந்து எழுந்து நின்றாள். "என்ன கசக்கிறதோ வேப்பங் காயாக? இவ்வளவு சொத்து எத்தனை பேரிடம் இருக்கிறது? உன்னைக் கல்யாணம் செய்து கொள்ளத்தான் வேறு யார் வரப்போகிறான்? இருந்தாலும் நம்மிடம் செலவிட எத்தனை பணம் இருக்கிறது? உன் லக்ஷணத்திற்காக மட்டும் ஒருவனும் பண்ணிக் கொள்ள மாட்டான். ஆனால் மிராசுதாரோ உன் அழகிற்காகவே தான் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள ஆசைப் படுகிறார் ஆகையினாலே உன் பணத்திற்காக அல்லாமல், உன் அழகை மெச்சி உன்னை அடைய நினைப்பவர்களை மணப்பது அல்லவோ உன் கடமை?" என்று சாம்பசிவ உடையார் மகளுக்கு உபதேசம் பண்ணினார்.

பத்மாவதிக்கு ஒன்றுமே தோன்றவில்லை. பெற்றோர் சொல்வதைக் கேளாமல் அவளால் என்ன செய்ய முடியும்? எங்குப் போக முடியும்? கதைப் புத்தகங்களில், கிழவனைக் கல்யாணம் செய்து கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்படும் பெண்களை வாலிபக் காதலர்கள் காப்பாற்றி அழைத்துக் கொண்டு போனதாகவெல்லாம் அவள் வாசித்திருக்கிறாள். ஆனால் அவைகள் பொழுதுபோக்குக் கதைகள். இந்தக் காலத்துப் பெண்களுக்குள்ள சுதந்திரம் கூட அக்காலத்தில் கிடையாது. எத்தனையோ பெண்கள் கிழவர்களுக்கு வாழ்க்கைப் பட்டிருப்பதும் அவளுக்குத்

115-ம் பக்கத்தில் "ஓர் புது சக்தி" என்று கூறப்பட்ட "இயந்திர"த்தின் படம்.



கீழ் பாகம்



மேல் பாகம்

தெரியும். அவர்களையெல்லாம் நினைத்துக் கொண்டு தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டாள். கண்ணீர் சிந்தி ஏங்கி அழவில்லை அவள். பேசாமல் பெற்றோர் சொல்வதைக் கேட்டு இசைந்தாள். அவர்கள் தன்னைக் கெடுத்துவிடக் கூடிய பாவிகள் அல்ல என்பது அவள் சித்தாந்தம்.

2

மணம் முடிந்து பத்மாவதியின் கழுத்தில் மாங்கல்யம் திகழ்ந்தது. கிழவரும் உள்ளத்தில் ஆனந்தம் பொங்கப் பொங்கக் குமரரானார். கோடையில் குற்றாலத்தின் குளிர்ந்த அருவியில் ஸ்னானம் செய்து கொண்டு ஆனந்தமாக இருக்க தம் இள மனைவியை அழைத்துச் செல்ல பெரிய தம்பி உடையார் நிச்சயித்தார். ஒரு பரிசாரகன், இரு வேலையாட்கள், பத்மாவதிக் குத் துணையாக ஒரு வேலைக்காரி அடங்கிய கோஷ்டி பின்னால் புறப்பட்டது. முதல் வகுப்பு வண்டியில் தம்பதிகளை ஏற்றி விட்டுத் திரும்பும்போது "சௌக்கியமாகப் போய் விட்டு வா அம்மா! அவர்கள் சொல்கிறதைக் கேட்டுக் கொண்டு ஜாக்கிரதையாக உடம்பைப் பார்த்துக் கொள்" என்று மகளிடம் கூறினார் சாம்பசிவ உடையார். பெரிய தம்பி உடையாரைப் பார்த்து ஒரு பெரிய கும்பிடு போட்டு விட்டு விடைபெற்றுக் கொண்டார். பெரியதம்பி உடையார் தமது மீசையை முறுக்கிவிட்டு, அங்கவஸ்திரத்தின் அகலமான ஜரிகைக் கரையையும் தடவி விட்டு, பதிலுக்குப் புன்னகையுடன், பெரிய மனுஷ்யர்களுக்குப் பிரத்யேகமான பந்தாவில் ஒரு கும்பிடு போட்டார். வண்டி புறப்பட்டது. ஒரு கனைப்புக் கனைத்துக் கொண்டார் அவர்.

நிலவொளியில், அடர்ந்தோங்கிய மரங்களும், கிணறுகளும், காட்டாறுகளும் புதிது புதிதாகத் தோன்றி மறையும் காட்சிகளைப் பத்மாவதி பார்த்துக்கொண்டிருந்தாள். வெண் மேகங்களினிடையே தவழ்ந்து உலகை நோக்கிப் புன்முறுவல் புரியும் சந்திரன் ரயிலைப் பின் தொடர்வதுபோலத் தோன்றியது. ஒரு பெரிய ஆற்றின் பாலத்தின் மீது கட படா என்று மிகுந்த சப்தத்துடன் வண்டி செல்லும்போது அவளறியாமல் பயமடைந்தாள். சஞ்சலமுடன் ஓடும் ஆற்றுத் தண்ணீரில் சந்திர பிம்பம் சலித்ததுபோல அவள் மனம் சலித்தது.

உடையார் தலைப்பாகையையும், அங்கவஸ்திரத்தையும் களைந்து வைத்துவிட்டு அவளுடைய அருகில் வந்து உட்கார்ந்தார். வெட்கத்தால் முகத்தை அவரது பக்கம் திருப்பமுடியவில்லை அவளுக்கு. வழி தவறித் தனியே ஓடிவந்து மிரள விழிக்கும் மான் குட்டியைக் கண்ட ஓநாயைப்போல நாக்கைச் சப்புக் கொட்டிகொண்டார் உடையார். தமது சுருக்கம் விழுந்த, மோதிரங்கள் பூண்ட விரல்களால் அவளுடைய உச்சந் தலையை மெதுவாகத் தடவிக் கொடுத்தார். "பத்மா! இங்கே பார்! வெட்கப் படாதே! த்ஸொ, த்ஸொ, த்ஸொ! வெட்கப் படவே கூடாது இப்படி நீ என்னிடம்" என்று சொன்னார். தனது கனிந்த பார்வையை அவர்பால் செலுத்தினாள் பத்மா. அவள் கண்களில் முத்துப்போன்ற நீர்த்துளிகள் கீழே விழத்தயாராக இருந்தன. அவருடைய முரட்டுக் கைவிரல்கள் அவளுடைய மென்மை வாய்ந்த கன்னங்களில் உறைந்தன. கண்களை மூடிக்கொண்டு பத்மா ஒரு பதுமை போலானாள். "ஒரு வார்த்தை கூடப் பேசமாட்டாயோ, பத்மா?" என்று அவள் காதில் கிழக்குரல் ரயிலின் சப்தத்திடையே கேட்டது. அவள் வாழ்நாளே வியர்த்தமாகிவிட்டதா? ஐயோ. அவர் எவ்வளவு வாஞ்சையுடன் இருக்கிறார்? இரக்கம் வேண்டாமா அவரிடம்? அவள் மனம் துடிதுடித்தது. அவளுக்கு எல்லாம் பிரமையாக இருந்தன. ஜன்னல் வழியாக விசும்பிக் குதித்துச் செத்துப்போகலாமா என்று நினைத்தாள்.

திடீரென்று உடையார் எழுந்திருந்து அவள் எதிரில் நின்று கொண்டார். "இதைப் பார்! நீ இப்பொழுது என் பெண்ஜாதி. உனக்கு என்னை பிடித்திருக்கிறதோ இல்லையோ என்னைத் தவிர உனக்கு வேறு கதி கிடையாது. உன்னுடைய அழகு என்னை

மிகவும் வசப்படுத்திவிட்டது. என்னைப் பற்றி பல தினுசாக நீ கேள்விப்பட்டிருக்கலாம். அதெல்லாம் அரை குறையாக வாஸ்தவமாகவும் இருக்கலாம். என்னுடைய பழைய காலம் எப்படி இருந்த போதிலும், இனிமேல் சரிவர இருந்து காலந்தள்ள வேண்டும் என்று உத்தேசித்திருக்கிறேன். நீ சின்னப் பெண் தான். இருந்தாலும் உனக்குச் சொல்லுகிறேன். நம்முடைய குடும்ப சுக சௌகரியங்கள் உன்னைப் பொறுத்தது. நான் அதிகமாக ஒன்றும் சொல்லவேண்டாம். நீ படித்த பெண்; உனக்கு எல்லாம் தெரியும்." என்று சொல்லிவிட்டு உட்கார்ந்தார். கொஞ்சம் மௌனமாக இருந்தாள் பத்மா. "நான் உங்களை அலக்ஷியம் செய்யவேயில்லை. நீங்கள் சொல்வதற்குக் கட்டுப்பட்டவள் நான்." என்றாள்.

"நீ துக்கப்படுகிறாயா?"

"இல்லை"

"நான் கிழவன்."

"என்றுமே யாரும் இளமையுடன் இருக்கமுடியாது"

"பத்மா!"

"ஏன்!"

"வருத்தமில்லையே?"

"சந்தோஷமாக இருக்கிறேன்."

உடையார் பத்மாவதியின் சாதுர்யத்தைப் பற்றி எல்லையில்லா மகிழ்ச்சியடைந்தார். மேலே எரிந்து கொண்டிருந்த விளக்கைப் பார்த்தார். பூச்சிகள் சூழ்ந்து சூழ்ந்து பறந்து கொண்டிருந்தன. படுக்கையை விரித்துவிட்டு விளக்கை அணைத்தார். ரயில் அவர்களை சுகமாகத் தாலாட்டிக் கொண்டே ஓடியது.

3

ஒரு மாத குற்றால வாழ்க்கை உடையாரின் நிலைமையில் பெரிய மாறுதலை உண்டாக்கிவிட்டது. ஊருக்குத் திரும்பியதும் கொஞ்ச நாட்களிலேயே தம்மைப் பற்றிய வதந்திகள் எல்லாம் பொய்த்துப் போகும்படி செய்துவிட்டார். அவருக்கே அவருடைய மாறுதல் ஆச்சரியம் அளித்தது. பத்மாவின் வாத்ஸல்யம் அவரைப் புது மனிதராக்கி விட்டது. அவருக்கு வயது கொஞ்சம் கூட ஆகிவிட்டதனால் என்ன, அவர் எப்படியும் நமது கணவர் அல்லவோ என்று அவரிடம் குறைவற்ற பிரியத்துடன் நடந்து கொண்டாள் பத்மா. குடும்பத்தில் ஏற்பட்டிருந்த சிக்கல்கள் எல்லாம் சீராயின. போனது போனது, வந்தது வந்தது, என்ற ரீதியி[illegible] நடந்து வந்த நிர்வாகம் ஒழுங்கு பெற்றது. வயல் வெளிப்புறங்களுக்கே செல்லாமல், மட்டக் குதிரை பூட்டிய வண்டியில் நகரங்களுக்குப் போவதும் வருவ[illegible]ாக இருந்த உடையார் இப்பொழுது ஊரைவிட்டுச் செல்லாமல், பண்ணைவேலைகளில் தக்க கவனம் செலுத்தினர். குடிபடைகள் கொண்டு வந்து கொடுத்தவைதான் மிச்சம் என்ற நிலைமை போய் விட்டது. பெரிய குடும்பம் பாழாகாமல் நிமிர்ந்தது. எல்லாம் புதிய சம்சாரத்தின் அதிர்ஷ்டம் என்று எல்லோரும் சொன்னார்கள்,

சண்பகம் தன் மகள் மூன்று மாத மாகத் 'தலை முழுகாமல்' இருப்பதைக் குறித்து சந்தோஷம் அடைந்தாள். காலக்கிரமத்தில் பத்மாவதி ஒரு குழந்தைக்குத் தாயாரானாள். ஸ்வர்ண விக்ரகம் போன்ற அழகிய ஆண் குழந்தைக்கு தாய் தகப்பனார் என்பதை உணர்ந்ததும் பெரிய தம்பி உடையார் அடைந்த சந்தோஷம் வரம்புக்குட்படாமல் பெருகியோடியது. நாலைந்து குழந்தைகள் 'தாத்தா, தாத்தா' என்று மழலை மொழியால் அழைத்துக் கொண்டு இருக்க வேண்டிய பிராயத்தைத் தாண்டியும், இதுவரை தமக்கு ஒரு குழந்தை கூட இல்லாதிருந்த குறை அவரை ரொம்பவும் வருத்திக்கொண்டிருந்தது. இப்பொழுது தம்மைவிட சுகவான் ஒருவரும் உலகிலே இருக்கமுடியாது என்று தோன்றும்படியான மகிழ்ச்சி அவருக்கு உண்டானதில் ஆச்சரியமில்லை. தாம் மறுவிவாகம் செய்துகொண்டதன் பலன் கைமேல் கிடைத்ததில் அவருக்கேற்பட்ட திருப்திக்கு உதாரணமாக எதைக்கூற முடியும்?

குழந்தைக்கு சோமாஸ்கந்தன் என்று பெயர் வைத்தார்கள். குழந்தை நாளொரு

மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. சதா சர்வதா அதனுடன் கொஞ்சிக்குலவிக் கொண்டிருந்தார் பெரிய தம்பி உடையார். குழந்தை தன் சின்னஞ்சிறு விரல்களால் அவருடைய ஜவ்வாதுப் பொட்டை அழித்து கைகளில் மெழுகிக்கொள்ளும் போதும், பொக்கை வாயைத் திறந்து மாயப் புன்னகை செய்யும் போதும் அவருக்கு ஹிருதயம் ஆனந்த நர்த்தனமாடும். ஒரு தடவைகுழந்தை அவருடைய மீசையைப் பிடித்து வெடுக்கென்று இழுத்துவிட்டது. அவருடைய கண்களில் நீர் ததும்பிவிட்டது. வலி தாங்கமுடியவில்லை. அந்த வலியாலே ஒரு பேரின்பத்தை அடைந்தார். இப்படியாகப் புத்திரன் வளர, வளர அவருடைய புத்திர வாத்ஸல்யமும் வளர்த்து தழைக்க ஆரம்பித்தது. தினந்தோறும் வைத்தியன் கோவிந்த நாவிதன் வந்து வந்து குழந்தைக்கு ஒன்றுமில்லை என்று கைபார்த்துச் சொன்னல்தான் அவருக்கு நிம்மதி ஏற்படும். கணை, மாந்தம் என்று சொன்னல் அவருக்கும் பிரத்யேகமாக வைத்தியம் செய்யும்படி ஆகிவிடும். ஒரு நாள் குழந்தையின் வாய் செக்கச் செவேலென்று இருந்தது. வாயிலிருந்து ரத்தம் வருகிறது என்று யாரோ சொன்னார்கள். வீடு அல்லோல கல்லோலப் பட்டது. பிறகு ஊர் கூடி ஆராய்ந்து பரீசிலனை செய்து பார்த்தபோது தொட்டிவில் போட்டிருந்த புதிய சிவப்பு ஜமக்காளத்தைக் குழந்தை வாயில் வைத்துச் சுவை பார்த்ததில் சாயம் ஏறிவிட்டது என்று தெரிந்தது. பிழைத்தார் உடையார்! அன்று செய்த திருஷ்டி கழித்தலே ஒரு அமர்க்களமாயிருந்தது.

பத்மாவதிக்கும், பெரியதம்பி உடையாருக்கும் இடை உள்ளே பிரேமையைக் குழந்தை ரூபத்திலுள்ள சங்கிலி இன்னும் நெருக்கமாக இணைத்து வைத்துக் கொண்டிருந்தது.

4

குழந்தை சோமாஸ் கந்தன் எங்கே? பத்மாவதி வேலைக்காரி திகைத்தாள். அங்கே பார்த்தாள், இங்கே பார்த்தாள், காணேம். கூட்டம் அதிகம். உடையார் என்ன, என்ன என்று பதறினர். விஷயம் அறிந்து அலறினர். புண்ணியம் சம்பாதிக்க இப்படி ஒருவர்மேல் ஒருவர் மோதிக் கொண்டு அவதிப்படவேண்டுமா? அப்பொழுதே அவர் சொன்னரே, "கும்பல் ஜாஸ்தி. குழந்தையையும் அழைத்துப்போகவேண்டுமா? வீட்டிலேயே இருக்கட்டும்; அங்கே போய்ச் சிரமப்பட வேண்டாம் அவன்" என்று எவ்வளவோ தடுத்தும் பத்மாவதி கேட்கவில்லையே. நான்கு வயதும் நிரம்பாத குழந்தைக்கு மகா மகம் என்ன வேண்டியிருக்கிறது. அவளுடைய பாழும் மனம் கேட்டதா? வேடிக்கை பார்க்கட்டும் என்று அழைத்து வந்தாள். இப்பொழுதோ நாலுபேர் அவளை வேடிக்கை பார்க்கும்படி ஆயிற்றே. பத்மா நிலை குலைந்தாள். மூலைக்கு மூலை ஆட்கள் ஓடினர். போலிஸ்டேஷனில் எழுதி வைத்தார்கள். பிரயோஜனம்? குழந்தையின் மேல் போட்டிருந்த நகைகளுக்காக திருடர்கள் தூக்கிக் கொண்டு போயிருப்பார்களோ? நகை போகட்டும், குழந்தையைத் திரும்பவும் கொண்டு வருபவர்களுக்குத் தன் நகைகளையெல்லாம் பரிசளிக்கத் தயாராக இருந்தாள் பத்மா. ஆனல்....? 'ஆனல்' என்ன? குழந்தை யகப்பட்டிருந்தால் மேலே கதை எப்படித தொடரும்? பத்மாவின் கதி எப்படி விபரீதமாகும்? குழந்தை அகப்படவேயில்லை.

திகப்பிரமை கொண்ட பத்மாவதியை அழைத்துக் கொண்டு பெரிய தம்பி உடையார் ஊருக்குத் திரும்பினர். குழந்தையைத் தேடுவதற்கு அவர் செய்த முயற்சிகளெல்லாம் பயனளிப்பதாகத் தோன்றவில்லை. பத்மாவுக்கு உண்ண உணவு வேண்டியிருக்கவில்லை. மேனி வாடியது. வாழ்வு திடலாயிற்று, மனங் குழம்பியது. புத்தி மழுங்கியது. இந்த ஜன்மமும் ஒரு ஜன்மமா என்று வெறுப் பேற்பட்டது. அவளுக்குத் தேறுதல் கூறுவதற்கு ஒருவராலேயும் முடியவில்லை. வற்றி மெலிந்த சரீரத்தை அவளது அந்தராத்மா தாங்க முடியாமல் தத்தளித்தது.

வேலைக்காரர்களுக்கும், மற்றவர்களுக்

கும் குழந்தையைத் தேடுவதில் அதிகச் சிரத்தை ஏற்படாது என்று எண்ணினாள். குழந்தை எங்குக் கிடந்து ஏங்குவானோ என்று சஞ்சலமடைந்தாள். அவனைத் தேடிப்பிடிக்கலாம் என்ற தோற்றம் அவள் மனதிலிருந்து அகலவேயில்லை அந்த வீட்டு ஜனங்களுக்குத் தெரிந்தால் அவளை வெளியே யனுப்பயனுப்பச் சம்மதிக்க மாட்டார்கள் என்று அவளுக்குத் தெரியும். ஒருவரும் அறியாமல் ஓரிரவு வெளியே புறப்பட்டாள். அவளை மீறி ஒரு சக்தி அவளைத் தள்ளிக்கொண்டு எங்கெங்கோ சென்றது. அவள் சென்ற இடங்களெல்லாம் அவளுக்குத் தெரியவேயில்லை. அவளை எல்லோரும் அவசியம் தேடித்தான் இருப்பார்கள். ஆனால் அவள் தன்னைச் சேர்ந்தவர்களில் ஒருவரையும் சந்திக்கவேயில்லை.

வழியில் ஒரு பிச்சைக்காரி ஒரு குழந்தையுடன் நிற்பதைப் பார்த்தாள். குழந்தை அழுது கொண்டிருந்தது. அதை கண்டதும் பத்மாவுக்கு இரக்கம் உண்டாயிற்று. பிச்சைக்காரியிடம் தன் கழுத்தில் இருந்த ஒரு சங்கிலியைக் கழற்றிக் கொடுத்தாள். பிச்சைக்காரி நடுங்கிவிட்டாள். 'எடுத்துக் கொண்டு போ, பரவாயில்லை.' என்று சொல்லிவிட்டுப் பத்மா நடந்தாள். அவளுக்கு வீடு, வாசல், ஏன் உலகமே பற்றில்லாததாக ஆகி விட்டன; இந்தச் சிறு நகையைத் தான் ஏன் தூக்கியலைய வேண்டும் அவள்? மற்ற நகைகளையும் இவ்வாறே ஆங்காங்குக் கண்டவர்களிடம் கொடுத்தாள். வேறு உடையணியவில்லை அவள். அவளுடைய சேலை கிழிந்து நூறு கந்தல்களாயிற்று. பசித்த பொழுது எங்கேனும் இரண்டு வீடுகளில் கேட்டுக் கொஞ்சம் ஆகாரம் வாங்கிப் புசித்து விட்டு அலைந்து கொண்டிருந்தாள். சிலர் அவளைப் பரிகசித்தனர். குழந்தைகள் அவளைச் சூழ்ந்து கொண்டு கைகொட்டிச் சிரித்தனர். ஒன்றையுமே அவள் லக்ஷியம் செய்யவில்லை. அவள் எந்தக் குழந்தையைக் கண்டாலும் 'வாடா ராஜா! என் செல்வமே! கண்ணே!' என்று கொஞ்சிக் கூப்பிடுவாள். சற்றுத் திகைத்து விழித்த கண் விழித்த படியே யோசனையில் ஆழ்வாள். பிறகு அந்த இடத்தை விட்டு அகன்று வேகமாய் நடந்து போய் விடுவாள். களைப்பேற்படும் போது சத்திரமோ, சாவடியோ கண்ட இடங்களில் தூங்குவாள். அவளை ஒருவரும் அடையாளம் கண்டு பிடிக்க முடியாதபடி உருக்குலைந்தாள்.

இம்மாதிரி நாடோடியாக எவ்வளவு காலம் இருக்கமுடியும் என்பதில் அவளுக்குச் சிந்தனையேயில்லை. ஒரு தடவை இந்த உலகின் அநித்தியத்தையும், அதில் மனிதர் எல்லோரும் தம்மை சாசுவதமாக கருதிக் கொண்டிருப்பதையும் நினைத்துச் சிரிப்பாள்; உடனே அழுவாள். சந்தோஷமும், துக்கமும் அவளுக்கு ஒன்றுகி விட்டன. தன்னைப் பார்த்து எல்லோரும் ஏன் ஏளனம் செய்கிறுர்கள் என்பது அவளுக்குத் தோன்றவேயில்லை.

5

ஒரு மலைச்சாரலில் இரு கைகளாலும் புதர்களை விலக்கிக் கொண்டு ஒரு ஸ்திரீ தோன்றினாள். அவள் பத்மாதான்; ஆனால் அவளை ஒருவரும் பத்மாவதி தான் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஒரு விரலைப் பற்களில் வைத்துக் கடித்துக் கொண்டு, கிரீச் என்று சப்தமிட்டாள். கீழே ஒரு பாம்பு ஊர்ந்தது; அது அவளை என்ன செய்யும்? நாற்புறமும் புதிய இலைகள் தோன்றிய மரங்கள் இனிய தென்றலில் அசைந்து கொண்டிருந்தன. தூரத்தில் அருவி விழும் சப்தம் பறவைகளின் கலரவங்களிடையே கேட்டது. அவள் நடந்து கொண்டேயிருந்தாள். ஒரு பள்ளத்தின் அருகில் வந்தாள். அங்கிருந்து பார்த்தால் அருவி சிவபிரானது வெள்ளி மலையே சூரிய கிரணங்களால் உருகி ஓடி வருகிறதோ என்று திகைப்பூட்டும் வண்ணம் தோன்றியது. ஜன சூன்யமான அந்த இடத்திலிருந்து "குழந்தாய், சோமா! எங்கே போனுய்?" என்று உரக்கக்கூவினாள். பள்ளத்தின் மறு புறத்திலிருந்த ஒரு ஆல மரத்தின் கிளை அகன்று பரந்து அவள் நின்ற இடத்திலும் நிழல் தந்து கொண்டிருந்தது. எதிர்ப்புறத்தில் அருவிக் கரையில் ஒரு சன்யாசி ஜபம் செய்து கொண்டிருப்பதை பத்மா பார்த்

தாள். அவரைக் கேட்டால் ஒரு வேளை தெரியுமோ என்று அவளுக்கு ஒரு எண்ணம் உண்டாயிற்று.

பத்மா அங்கே போக எண்ணினாள். மற்றையோர் பார்த்து நடுங்கும் அப்பள்ளத்தைத் தாண்டுவதற்கு தைரியம் எங்கிருந்து அவளுக்கு வந்ததோ? எவ்வளவு ஆழமாக இருக்கிறது, இதில் விழுந்தால் சரீரம் திவலையாவு கூடத்தேறுதே என்பன போன்ற கேள்விகள் அவள் மனதில் உதயமாகவில்லை. உலகில் காணும் காட்சிகளை மெய்யென நம்பி அவைகளை அனுசரிக்காது, தமது கற்பனை உலகில் சஞ்சரிப்பவர்களைப் பைத்தியம் என்கிறோம், அவள் பைத்தியம் தான். அவளுக்கு முடியாததே ஒன்றுமில்லை என்ற அமானுஷ்யமான தைரியம் உண்டாயிருந்தது. இல்லாவிட்டால், இத்தனை ஆட்கள் தேடியும் கிடைக்காத குழந்தை, தான் தேடிக் கிடைக்குமா என்ற சந்தேகம் உண்டாகியிருக்கும். ஒரு ஆலம் விழுதைப் பிடித்துக் கொண்டு வேகமாகத் தாவினாள். வெகுதொலைவில் அக்கரையில் போய் விழுந்தாள். தலையில் நல்ல அடிபட்டது. உச்ச ஸ்வரத்தில் 'ஐயோ' என்று அலறிக் கொண்டு மூர்ச்சையானாள்.

அவள் விழுந்து கதறிய சப்தம் கேட்டு சன்யாசி ஓடிவந்தார். தனது கலச பாத்திரத்தில் இருந்த நீரை அவள் முகத்தில் தெளித்தார். தன் மேல் துணியால் விசிறினார். அவள் கண்விழித்தாள். ரத்தம் பிரவாகிப்பதை உணர்ந்தாள். அதைச் சட்டை செய்யவில்லை அவள். 'எங்கே யென் குழந்தை எங்கு ஒளித்துவிட்டு வந்திருக்கிறாய்?' என்று அவரைக் கேட்டாள். 'யாரம்மா நீ! இங்கே தனியாக வந்திருக்கிறாயே! உனக்கு உற்றார், உறவினர் இல்லையா? என்றெல்லாம் சன்யாசி கேட்கவே, பத்மா விபரீதமான குரலில், 'காடும் மலையுமே என் ஊர், ஆடும் மயிலே எனக்கு உறவு. நீயார் கேட்க? 'என்றெல்லாம் பிதற்ற ஆரம்பித்தாள். அவர் அவளுக்கு சித்த ப்ரமம் என்பதை நொடியில் கண்டு கொண்டார். 'வா, அம்மா! உன் குழந்தையைக் காண்பிக்கிறேன்' என்றார். அவள் முகத்தில் பிரகாசம் உண்டாயிற்று: அவரைப் பின் தொடர்ந்து பேசாமல் சென்றாள்.

உலகை வெறுத்த அந்தச் சன்னியாசியும், தன்னைத் தானே வெறுத்த அப் பேதையும் ஒரு பாழ் மண்டபத்தை அடைந்தனர். மாயை என்னும் திரையை விலக்கி அப்பாலுள்ள ஞான ஒளியை தரிசிக்க நினைத்த அவர் மாயையே பெண்ணுருவாக வந்து தன்னைப் பந்தனத்தில் திரும்ப ஆழ்த்த முயல்கிறதோ என்று கிலேசமுற்றார். ஆனால் அந்தப் பைத்தியக்கார ஸ்திரீயை அங்கேயே விட்டு வந்திருந்தால் அவள் ஆத்மஹத்தி என்னும் மகா பாதகத்தைச் செய்திருக்கக் கூடுமாதலால், அழைத்து வந்ததில் ஒன்றும் தவறில்லை என்று மனதைச் சமாதானம் செய்து கொண்டார்.

இடிந்து கிடந்த அந்தப் பாழ்மண்டபத்தின் வெளிப்புறத் தாழ்வாரத்தில் ஏட்டுச் சுவடிக் குவியல்களும், அகல் விளக்கும், காவி வஸ்திரங்களும் சிதறி இருந்தன. மண்டபத்தின் உள்ளே வௌவால்கள் சிறகடித்துத் சப்தம் செய்வது கேட்டது. இருட்டு, அங்கே என்ன தான் இருக்கிறதோ என்று அறியக் கூடாததாக இருந்தது. சன்யாசி அவளுடைய புத்திக் கோளாறுகளைச் சரிப்படுத்தி, அவளுக்கு நல்ல அறிவு உண்டாக்க முயன்றார். அவள் அடிக்கடி 'குழந்தை எங்கே' என்று அவரைத் துன்புறுத்திக் கொண்டேயிருந்தாள். "உன் குழந்தை இப்பொழுது அகப்படமாட்டான். நான் சொல்கிறவைகளைக் கேள். பிறகு தான் உன் குழந்தையைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியும்'' என்றார் அவர். அவளும் ஒப்புக் கொண்டாள். அங்கேயே அவருடன் வெகுகாலம் இருந்தாள்.

தினந்தோறும் அருவியின் குளிர்ந்த நீரில் அவளை ஸ்னானம் செய்யச் சொன்னார். சில மந்திரங்களை உபதேசித்து அவளைச் சபம் செய்யவும் சொன்னார். அவர் அருகாமையிலுள்ள கிராமாந்தரங்களுக்குச் சென்று பிக்ஷை கொணர்ந்து அவளைப் போஜனம் தயாரிக்கும்படி பழக்கினார். மனிதப் பேய்களின் கும்பலிலிருந்து வெகு தூரத்திற்கு அப்பால்

விலகிய அவள் சன்யாசியின் நற்போதனைகளினால் நல்ல சிந்தனு சக்தி பெற்றுள். நாம் யார், குழந்தையார், அதற்கும் நமக்கும் உள்ள பிரதி பந்தகம் என்ன, இம் மாதிரியான தோற்றங்கள் அவளுக்கு உண்டாயின. அனுபவ வேதாந்தியாகி விட்டாள் அவள். சன்யாசியைத் தன்னைக் கடைத் தேற்றவந்த குருதேவராக பாவித்து அவருக்குச் செய்ய வேண்டிய சிச்ருஷைகளில் தயங்காமல் கண்ணுங் கருத்துமாக ஈடுபட்டாள். பல வருஷ காலம் சன்யாசியைத் தவிர வேறு மனித வர்க்கத்தின் வாடையே வீசப் பெரு திருந்த அவள் தத்துவ ஞானியாகமாறி மாயா மோகத்திலிருந்து விடுதலை பெற்றுள். "இனிமேல் உன் குழந்தையைத் தேடலாம்." என்றுர் சன்யாசி.

"ஸ்வாமி! தேவரீரின் ஞானுபதேசங்களால் நான் சித்த சாந்தி அடைந்தேன். இந்தச் சரீரமுள்ளளவும் தேவரீருக்குப் பணிவிடை செய்வதையே என்னுடைய பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். கருணையில்லாத ஆக்ஞை இடலாகாது தாங்கள். நான் இப்பொழுது எங்குப் போவேன்?" என்றுள் பத்மாவதி.

"இல்லை. தீர்த்த யாத்திரைகளாலும், பல க்ஷேத்திரங்களில் பகவத் தர்சனத்தாலும் உனக்கு ரொம்ப நன்மை உண்டு. ஒருகால் இடையில் உன் புத்திரனைக் காண நேர்ந்தாலும் நேரலாம். என்ன தான் எல்லாவற்றையும் மித்யை என்று கருதினுலும், புத்திரவாத்ஸல்யத்தை நீ நீக்கிவிட முடியாது. அவனைக் காண்பதைவிட இவ்வுலகத்தில் வேறு சௌபாக்கியம் உனக்கு ஒன்றுமில்லை. போய் வா அம்மா!" என்று சன்யாசி அவளுக்கு ரொம்பவும் சொன்னுர்.

பிரியமுடியாமல் பிரிந்து, அங்கிருந்து அகன்று, நிலையில்லாமல் மறுபடியும் பத்மாவதி அலைய ஆரம்பித்துவிட்டாள். ஆனுல் முன்னர் இருந்ததை விட உலகம் அவளுடைய திருஷ்டியில் எவ்வளவு வித்யாசம் அடைந்திருந்தது! ஸாது மகான்களைக் காண்பதிலும், அவர்களுடைய உபதேசங்களைக் கேட்பதிலும் அவளுடைய சிரத்தை அளவிடப் படாததாக இருந்தது. இப்படியே காலத்தை ஓட்டிவிட்டாள். அவள் இன்னும் குறை நாட்களையும் கழித்து விட வேண்டும். அவள் சாவை வரவேற்றுக் கொண்டிருந்தாள்; ஆனுல் அதைத் தேடித் தானுகச் செல்ல விரும்பவில்லை. அவ்வளவு தான் அவளுடைய பூர்வோத்திரம்.

o o o

கிழவியாகிய பத்மாவதி தன் கதையைக் கூறி முடித்தாள். அது வரையில் பேசுவதற்குக் கூட முடியாமல், கண்ணீரைப் பொறுமையுடன் அடக்கிக் கொண்டு பதுமைபோல உட்கார்ந்திருந்தார் வீட்டுக்காரர். நடு நடுவே கிழவியைக் கட்டிக் கொண்டு 'ஹோ' என்று இரைந்து அழ வேண்டும் போல் அவருக்கு ஒரு உத்வேகம் உண்டாகிக் கொண்டிருந்தது. கிழவி முழுவரலாற்றையும் சொல்லி முடிக்கு முன் தான் ஏதாவது அப்படிச் செய்து விட்டால் மேலே சொல்லாமல் இருந்து விடுவாளோ என்று பயந்து போய், பற்களை நெருக்கமாகக் கடித்துக் கொண்டு, பிராணனைப் பிடித்துவைத்துக் கொண்டிருப்பது போல, உணர்ச்சியை இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்தார். கிழவி இனிமேல் சொல்ல வேண்டியது பாக்கி ஒன்றுமில்லை என்று தீர்ந்து போனதும் அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுதார்.

கிழவி ஒன்றுமே புரியாமல் அவருடைய முகத்தை மங்கிப்போன கண்களால் பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

"அம்மா! உன் அபாக்கியமடைந்த பிள்ளை நான்தான். அம்மா! என்னுலே எவ்வளவு கஷ்டத்தை அனுபவித்திருக்கிருய்? நீ செத்துப் போய் விட்டதாக எல்லாரும் எண்ணினேம். உனக்கு வருஷம் தவருமல் திதி பண்ணிக் கொண்டு வருகிறேன்." என்றுர்.

"என் தங்கமே! கண்ணே, கட்டி முத்தே!" என்றெல்லாம் புலம்பிக் கொண்டு கிழவி அவரைக் கட்டித்தழுவினுள். உச்சி முகர்ந்தாள். கிழவிக்கு ஏற்பட்ட குதூகலத்தை என்னென்று சொல்வது? நாற்பது வயதானவரை இப்படிச் சீராட்டுவதாகவே அவளுக்கு

நினைப்பில்லை. எல்லாவற்றையும் மறந்து 'குழந்தை அழுகிறது. பால் கொடுக்க வேண்டும்' என்று மடியில் வைத்துக் கொண்டிருப்பது போல அவளுக்கு நினைப்பு.

கிழவியை உள்ளே அழைத்து வந்து ஊஞ்சல் பலகையில் உட்காரச் செய்தார் உடையார். உடையாரின் தர்மபத்னி எல்லா விவரங்களையும் கவனித்துக் கொண்டுதானிருந்தாள். தன் மாமியாரின் முன் வந்து நமஸ்காரம் செய்தாள், கிழவிக்கு மருமகளைக் கண்டு ஆனந்தம் பொங்கியது. மன மார வாழ்த்தினாள். வெகு நேரம் ஆனந்தத்திலே மயங்கிக் கிடந்த கிழவி, சற்றுச் சிந்தித்து, "ஆமாம்! இது நம் ஊர் தானா? இது நம் வீடா? எல்லாம் மாறியிருக்கிறாப் போலத் தெரிகிறதே" என்றாள்.

"இது நம் ஊர் இல்லை. நான் கெட்டுப் போனதனால் இன்னொரு அதிர்ஷ்டம் கிடைத்தது. ஆனால் மகத்தானது துரதிர்ஷ்டம் ஏற்பட்டது. உன்னை இழந்த துக்கத்திலே இதெல்லாம் எம்மாத்திரம்?' என்றார்.

"விவரமாகச் சொல்லு!" என்று கிழவி கேட்டாள்.

"அம்மா! நீ புறப்பட்டுப் போய் விட்ட ஒரு மாதத்திற்குள் நான் அகப்பட்டு விட்டேன். கூட்டத்திலே நான் கீழே விழுந்து விட்டேன். ஓர் அம்மாள் என் மீது கால் வைத்துவிட்டாள். நான் குய்யோ முறையோ என்று வீறிட்டு அழ ஆரம்பித்து விட்டேன், அந்த அம்மாள் என்னைத் தூக்கித் தேற்றிப் பார்த்தாள். நான் அழுதுகொண்டேயிருந்தேன். யாருடைய குழந்தை காணோம் என்று ஆட்களை விட்டுத் தேடச் செய்தாள் அந்த அம்மாள். நீங்கள் ஒரு மூலையில் தேடிக்கொண்டிருந்திருப்பீர்கள் அவர்கள் ஒரு மூலையில் தேடிக் கொண்டிருந்திருப்பார்கள். ஆள் மேல் ஆள்மோதி, மூச்சுவிடத்திணறலேற்படும் அந்தக் கூட்டத்தில் யாரை யார் கண்டு எதைக் கேட்பது? எதைத் தெரிந்து கொள்வது? ஜன சமுத்திரத்தில் ஹோ என்று பேரிரைச்சல் கேட்குமே தவிர புரியக்கூடியதாக ஒரு வார்த்தையும் காதில் விழுந்திராது. என்னிடமிருந்து அந்த அம்மாளுக்கு அழுகையைத்தவிர வேறு என்னபதில் கிடைத்திருக்க முடியும்? என்னைக் கூட்டத்திலே வைத்துக் கொண்டு சிரமப்படாமல், ஊருக்குப் போய், அங்கிருந்து இன்னும் பல ஆட்களை அனுப்பி யாருடைய குழந்தையைக் காணோம் என்ற தகவலைத் தெரிந்து கொண்டு பிறகு அவர்களிடம் ஒப்படைக்கலாம் என்று இங்கே கொண்டு வந்து விட்டாள் அந்த அம்மாள். அந்த அம்மாளே தான் இந்த விஷயங்களையெல்லாம் என்னிடம் சொல்லியிருக்கிறாள். நான் இருக்குமிடம் ஒரு மாதத்திற்குள் தெரிந்து விட்டது. நான் அகப்பட்டு விட்டேன்; நீ கெட்டுப்போய் விட்டாய்."

"பாவி நான்! உன்னை விட்டு இத்தனை காலம் பிரிந்து விட்டேன். இத்தனை காலம் பைத்தியம் பிடித்து அலைந்தேன். என்மனது எத்தனை பாடுபட்டிருக்கும்!" என்று நாத்தழுதழுக்கக் கிழவி கூறினாள்.

"என்னை எடுத்துக் கொண்டு வந்த அம்மாள் ஒரு விதவை. அவளுடைய கணவர் இறந்து போவதற்கு முன்னால் எல்லாச் சொத்துக்களையும் சுயேச்சாவினியோகமாக அவள் பெயருக்கே உயில் செய்து வைத்துவிட்டார். குழந்தையில்லாத அந்த அம்மாளுக்கு நான் தெய்வச் செயலாகக் கிடைக்கவே என்னிடம் அளவு கடந்த விசுவாசம் ஏற்பட்டது அவளுக்கு"

"பாக்கியசாலி அவள். நான்...."

"அம்மா, எல்லாம் விதி. இந்த அம்மாளும் நம்முடைய ஸ்வஜாதி தான். என்னை நம்முடைய சொந்த வீட்டிற்கு அனுப்பும்போது ரொம்ப கவலைப் பட்டாள் இந்த பாகீரதி அம்மாள். நீ எங்கேயோ போய் விட்டாய்; உன்னை அவளுக்குத் தெரியாது. உன்னைப் பற்றிக கவலைப்படவில்லை. எனக்குப் பத்தியமாக ஆகாரம் கொடுத்து, அடிக்கடி எண்ணை தேய்த்து முழுக்காட்டி, காலத்தில் விளக்கெண்ணை புகட்டி நன்றாகக் கவனித்து வர வேறு யாரிருக்கிறார்கள்? என்பதே பாகீரதி அம்மாளின் கவலை. மாதம் குறைந்தது ஒரு தடவை என்னை



நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

(ஸ்தாபிதம் 1906) (தலைமை ஆபீஸ் :—கல்கத்தா)

—— ஸந்தோஷச் செய்தி ——

எங்கள் லைப் பாலிஸிகள் யுத்த விபத்துக்களையும் உட்படுத்தும் என்பதை எங்கள் பாலிஸி ஹோல்டர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம். அதற்காக அதிகக் கட்டணம் ஒன்றும் இல்லை. மேலும், தற்பொழுது புதிதாக வழங்கப்படும் பாலிஸிகளுக்கும், எவ்வித பிரத்தியேகக் கட்டணமின்றி, யுத்த விபத்துகளையும் உட்படுத்தும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிராஞ்சு ஆபீஸ் :

நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ்,

362, சைனுபஜார் ரோடு,
எஸ்பிளனேட், மதராஸ்.

ஸப் ஆபீஸ் :
171, புதுத் தெரு, மதுரை.

ஸப் ஆபீஸ் :
5, கெம்பகோடா ரோட்,
பெங்களூர்.

இங்கே அழைத்துக்கொண்டு வந்து காண்பிக்க வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில்தான் அனுப்பினாள் அவள்.''

"பிறர் குழந்தையிடம் அவ்வளவு அன்புடன் இருந்த அந்த அம்மாள் அல்லவா! மகா உத்தமி.''

"அப்பாவும் பிறகு வெகுகாலம் இருக்கவில்லை. பாகிரதி அம்மாள் பதினைந்து வருஷகாலம் ஜீவித்திருந்தாள். இறந்து போவதற்கு ஒரு வருஷம் முன்னால் அவளுடைய தம்பி பெண்ணை எனக்குக் கல்யாணம் செய்து வைத்தாள். தனது எல்லா ஆஸ்திபாஸ்திகளையும் எனக்கே கொடுத்துவிட்டாள். நான் அந்தக் கால முதலே அங்கு ஒரு மாதமும், இங்கு ஒரு மாதமுமாக மாறி மாறி இருக்கிறேன். கனவு கண்டு கொண்டிருந்த அனந்தரவார்சுக்காரர்கள் வாயில் அம்மாள் மண்ணையள்ளிப் போட்டுவிட்டதற்காக என்னிடம்கூட இந்த ஊரில் சிலர் ஒரு மாதிரியாக நடக்கத் தலைப்பட்டார்கள். ஆனால் அம்மாள் அவர்களையெல்லாம் லட்சியமே செய்யவில்லை. அம்மாள் இறந்து போன காலத்தில் நான் ரொம்பத் துக்கப்பட்டேன். அவர்களுக்குச் செய்யவேண்டிய சடங்குகளையெல்லாம் சிரத்தையுடன் செய்தேன்''

"நான் பெற்றேனே ஒழிய, உன் அம்மா அவள் தான்.'' என்று சொல்லி கிழவி கண்களைத் துடைத்துக் கொண்டாள். ரப்பர் நாய் தலையில் அடித்தால் ஏன் கத்துகிறது என்பதைக் கண்டுபிடிக்க அதன் கழுத்தைப் பல்லில் வைத்துக் கடித்து இழுத்து உள்ளிருப்பவைப்பவைகளைப் பரிசோதிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த சின்ன உடையார் (சோமாஸ் கந்த உடையாரின் குழந்தை) சற்று வேலை நிறுத்தம் செய்து, அந்த நாய் மாதிரிக் கத்திக் கொண்டிருந்தார்.

"எலே பெரிய தம்பி! பாட்டிடா, உன் பாட்டி!'' என்றார் சோமாஸ்கந்த உடையார் சின்ன உடையாரைப் பார்த்து.

"பாட்டி! பாட்டி! எனக்கு என்ன வாங்கியாந்தே?'' என்று கேட்டுக் கொண்டே சின்ன உடையார் பாட்டியின் கால்களுக்கிடையே வந்து புகுந்து கொண்டு அவளது பொக்கைவாயை நோக்கினார். பாட்டியிடம் கொடுக்க என்ன இருந்தது? இருகைகளாலும் தன் பேரப் பிள்ளையைக் கட்டி வாரி உச்சி மோந்து அவனுடைய இரு கன்னங்களிலும் முத்தங்கள் ஓயாது கொடுத்தாள். எவ்வளவு? வானத்திலுள்ள நட்சத்திரங்களின் அளவு.

விஞ்ஞானத்தின் பலன்

டி. பி. நவநீத கிருஷ்ணன், எம். ஏ., (அண்ணாமலைநகர்)

பாமர மக்கள் விஞ்ஞானத்திற்கும் புது வகையான சாதனங்களைக் கண்டு பிடித்ததற்கும் இடையேயுள்ள வேற்றுமையை தெளிவாய் அறிந்தவரன்று. மார்கோனி (Marconi), எடிஸன் (Edison) என்போர் விளைவியலையே நாடி செயலின் பாற்பட்ட புதுச்சாதனங்களைக் கண்டு பிடித்தனர். ரூதர் போர்ட் (Rutherford). ராமன் (Raman) இன்னோரன்னவர் விளைவியலைக் கருதாது சிந்தனையின் பாற்பட்ட புதுக்கொள்கைகளைக் கண்டுபிடித்து அறிவைப் பெருக்கும் ஆர்வத்தால் தூண்டப்பட்டவர். பொதுமக்கள் முற்கூறிய இருவகையினரையும் ஒரே ரீதியானவர் என்று கருதுகின்றனர். அறைகுறைக் கல்வி பயின்றவரோ, இவ்விருவகையினரும் முற்றும் வேறுபட்டவரென்றும் எவ்வகையிலும் ஒத்தவரன்று என்றும் எண்ணுகின்றனர். ஆயினும் அவ்விருசாராரின் கருத்துக்களும் சரியன்று. ஏனெனின், சிந்தனையின்பாற்பட்ட விஞ்ஞானத்திலேயே முற்றும் ஈடுபட்ட தூய விஞ்ஞானிகளும் (Pure Scientists) ஒரோ ரமயம் விஞ்ஞான விளைவில்பாற்பட்ட புதுமைகளைக் கண்டு பிடிக்கின்றனர். வினைப்பயன் கருதும் விளைவியல் விஞ்ஞானிகளால் கண்டு பிடிக்கப்பட்ட சாதனங்கள் ஒரோ ரமயம் விதியியல் விஞ்ஞானக் கொள்கைகளில் புரட்சியியலான மாறுதல்களைத் தோற்றுவித்துள்ளன.

எனவே, தூய விஞ்ஞான ஆராய்ச்சியின் கண் புலன்களுக் கெட்டாதவற்றைக் கண்டு பிடிப்பதற்கும், அளவையை நுட்பப்படுத்துவதற்குமான கருவிகளே புதிதாய்க் கண்டு பிடிக்கப்படுகின்றன. ஆயினும் அவை விஞ்ஞானத் துறையில் மட்டுமன்றி வேறு துறைகளுக்கும் ஒரோ ரமயம் பரவிப் பலன் தருகின்றன. கலிலேயே (Galileo) என்ற விஞ்ஞான அறிஞர் தொலை நோக்காடி (Telescope)யைக் கண்டு பிடித்தார். அவர் அதைக்கண்டு பிடித்தது வானை ஆராய்வதற்கே. ஆயினும் அக் கருவி நாவாய்க்கலை (Navigation) யிலும், போரிலும் பயன்படுகின்றது; நாடகம் பார்ப்போருக்கு அரங்காடி (Opera glass) யாயும் குதிரைப் பந்தயங்களைக் காண்போருக்குப் புலமாடியாயும் (Field glass) அது துணை செய்கின்றது.

பாரிஸ் (Paris) நகரத்துக் கல்லூரியின் சோதனைமன்றத்தில மக்கள்-விலங்குகளின் இயக்கங்களைப் பரிசீலனை செய்வதற்கென ஒரு கருவி, மாரி (Marey) என்பாரால் கண்டு பிடிக்கப்பட்டது. அதுவே பின்னர் அசையும் படக் கருவியாகி (Movietone), இப்பொழுது மக்கள் திரள் திரளாய்ச் சென்று கண்டு மகிழும் படக்காட்சிகள் நிறுவதற்கு அடிகோலியது. இப்படக் காட்சிகளின்று கிடைக்கும் வருமானத்தில் நூறாயிரத்திலொரு பாகத்தையாயினும் விஞ்ஞான ஆராய்ச்சிக்கேற்ற சோதனை மன்றங்கள் நிறுவதற்கு அளிக்கும் மனத்தவராய்ப் படத்தொழில் முதலாளிகள் என்றோ ஒருநாள் ஆவர் என்று நாம் எண்ணி மகிழலாம்.

காற்றளவி (Barometer) யெனும் யெனும் கருவி சோதனை மன்றத்தில் அளவைகளுக்குப் பயன்பட்டு வந்தது. பின்னர் தட்ப-வெப்பநிலை, காற்றின் போக்கு இவற்றை அளக்கும் வளிநிலையியல் நூல் (Meteorology) ஏற்பட உதவிற்று. சோதனை மன்றத்தில் குளிரால் நீராக்கப்பட்டக் காற்றுக்களை சூடு

புகாது அடைத்து வைத்திருந்த கலங்களை, இன்று எங்கும் மலிந்து கிடக்கும் வெப்ப நிலைமாறுக் கலங்கள் (Thermos Flasks) அமைக்கப்படுதற்கு வழி காட்டின.

புதிய சாதனங்களைக் கண்டு பிடித்தல் என்பது விஞ்ஞான ஆராய்ச்சியினின்று வேறுபட்டதாய்த் தோன்றினும் அவையிரண்டிற்கும் பொதுவான சில அம்சங்கள் உண்டு. அவையிரண்டிற்கும் உற்று நோக்கும் ஆற்றலும் திட்டமான முறையில் அமைக்கும் பயிற்சியும், கற்பனைசக்தியும் இன்றியமையாதனவாம். எனவே புதுசாதனங்களும் கருவிகளும் கண்டு பிடிக்கப்படுதலால் விஞ்ஞானமும் முன்னேற்ற மடைகின்றது. முட்டையின் கருவும் வித்தும் கலந்து ஒன்றுதலே கருவுறுதற்குக் காரணம் எனப் பேராசிரியர் ஹார்ட்விக் (Professor Heruig) சோதனை வழியே கண்டு பிடித்தார். இத் தத்துவமே இக்காலத்து உயிர் நூலில் பெரும் பகுதிக்கு அடிப்படையாய் உள்ளது. இவ்வகையான கொள்கைக்குக் காரணமாயிருந்தது நுண்காணி (Microscope) எனும் கருவியேயாம். ஆதலின் நுண்காணி யெனும் சாதனம் புதிதாய்க் கண்டு பிடிக்கப்பட்டு அது செம்மைப் பட்டதே, விஞ்ஞானக் கொள்கைகளில் முக்கியமான தொன்று நிறுவப்படுதற்கு அடிப்படையாய் இருந்தது எனலாம். அக்கொள்கையினால் உழவுத் தொழில் வளர்ச்சிக்குப் பயன்பட்ட பல விளைவுகள் ஏற்பட்டன. பேராசிரியர் மிக்கல் ஸனின் (Professor Michoelson) அற்புதக் கருவிகளே, இக்கால விஞ்ஞானக் கொள்கைகளில் தலையான தொன்றான 'பற்றியல் கொள்கை' (Relativity Theory) நிலை நாட்டப்படுவதற்குப் பெரிதும் உதவின. விளைவியல் முறையில் தொலை நோக் காடிகள் சிறப்புற அமைவதற்கும், படம் பிடிக்கும் முறையில் முன்னேற்றம் உண்டாதற்கும் அவை துணை செய்தன. பேராசிரியர் ஸி. டி. ஆர். வில்சன் (Professor C. T. R. Wilson) கண்டுபிடித்த சாதனமொன்றே தற்கால அணுவியல் கொள்கை (Atomic Theory) யைப் பற்றின ஆராய்ச்சிகளைப் பெரிதும் முன்னேற்றமடையுமாறு செய்தது. இதனுதவி ஒரு வகையான இயைபு அடிப்பொருளை (Chemical element) வேறொன்றாய் மாற்றலாம் எனக் கண்டுபிடிக்கப்பட்டது. எனவே இக்கால இரசவாதம் தோன்றியது. இவற்றினால் வருங்காலத்தில் விளைவியலான நலன்கள் பலதோன்றலாம். மருத்துவ நூலில் அநேக நோய்களுக்குக் காரணமான நுண் கிருமிகளைக் காண இயலாதிருந்தது. அவற்றை இப்பொழுது புதிதாய்க் கண்டு பிடிக்கப்பட்ட புற ஊதா ஒளியால் (Ultra Violet Light) காணும் நுண்காணிகளினுதவியால் காணலாம். ஆதலின் எதிர் காலத்தில் இக்கருவி மருத்துவ நூல் முன்னேற்றத்தை மிகைப் படுத்தலாம்.

பேராசிரியர் கேபிட்ஜா (Professor Kapitza) என்ற ரஷ்ய நாட்டு விஞ்ஞானி ஒளிக்கும் காந்தத்திற்கு மிடையுள்ள தொடர்புகளைக் கண்டு பிடிக்கும் ஆராய்ச்சிகளிலீடுபட்டுள்ளார். இவற்றின் கண் வலிமிக்க காந்தப் புலன்களை (Magnetic fields) ப் பெறும் வழிகளைக் கண்டு பிடித்துள்ளார். இவற்றினுதவியால் ஒரு விநாடியில் முந்நூற்றிலொரு பங்குக் காலத்திற்கு இருநூற்றுப் பதினைந்தாயிரம் குதிரைகளின் வலிவைப் பெறலாம். இக் காந்தக் கருவிகளால் வருங்காலத்தில் வாழ்க்கையிலும் பயன்படும் பலவற்றை விளைவிக்கலாம் எனக்கருத இடமுண்டு.

இதுகாறும் சோதனைமன்றத்தில் ஆராய்ச்சிகளுக்கெனக் கண்டு பிடிக்கப் பட்ட கருவிகள் வாழ்க்கைக்கு அனுகூலமான விளைவியல் சாதனங்களாய் எவ்வாறு பயன் படலாம் என்பதைப் பற்றிக் கூறினோம். இனி விளைவியல் சாதனங்களாகவே கண்டு பிடிக்கப்பட்ட கருவிகள் விஞ்ஞான அறிவின் வளர்ச்சிக்குஎவ்வாறு பயன்படலாயின எனபதைப் பற்றிசிறிது உரைக்கலாம்.

நீராவி இயந்திரங்கள் தொழின் முறையிலேயே தோன்றினவை. ஆயினும் அவை எவ்வாறு வேலை செய்கின்றன வென்றும் சிக்கனமாய் வேலைசெய்யுமாறு அவை எவ்வாறு அமைக்கப்படலாம்

என்றும் கண்டு பிடிப்பதினின்றெழுந்த ஆராய்ச்சிகளால் பல பெரும் விஞ்ஞானிய உண்மைகள் வெளிப்பட்டன. சூடு-மின்சாரம்-இயைபு-இயக்கம் இன்னோரன்னவான யாவும் ஆற்றலின் பல தோற்றங்களேயெனும் இக்கால பூத விஞ்ஞானத்தின் அடிப்படையான கொள்கைக்கு நீராவி இயந்திரங்களே வழிகாட்டின எனலாம்.

செயல் முறையில் நில அளவைகளுக்கென கண்டு பிடிக்கப்பட்ட கருவிகளும் முறைகளுமே வரிவடிவநூல் (Geometry) எனும் அறிவியலான நூலைத் தோற்றுவித்தன எனலாம்.

தொடக்கத்தில் கம்பியில்லாது வான் வழியே செய்தி அனுப்பும் முறைக்கு வழிகாட்டியாய் நின்ற முறை சோதனைமன்ற ஆராய்ச்சிகளினின்று எழுந்தது. எனினும், நாளடைவில் வாழ்க்கையில் அது பெரிதும் பயன் பட்டதால், பல புதுச் சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றில் முக்கியமானது 'ஒரு போக்கு மின் விளக்கு' (Value) என்பதாம். இது பல திற விஞ்ஞான நூல்களின் வளர்ச்சிக்குக் காரணமாயுள்ளது. பூதநூலிலும், இயைபு நூலிலும், உள நூலிலும், பல பேருண்மைகள் கண்டுபிடிக்கப்படுதற்கு ஏது வாயுள்ளது. இயைபுநூலும், இயைபு விளைவியல் நூலும் ஒன்றுடனொன்று பல வகையிலும் கலந்துள்ளவை. அறிவியலான ஆராய்ச்சிகளால் விளைவியலும் விளைவியலான ஆராய்ச்சிகளால் அறிவியலும் பெருக்கமடைந்துள்ளன.

சென்ற காலத்தில், விஞ்ஞானிக்கும் புதுமை கண்டுபிடிப் போருக்குமிடையிருந்து வந்த வேற்றுமை பொருளியலான தொன்றேயெனலாம். புதுமையைக் கண்டு பிடிப்போன் தன் சாதனத்தால் கைம்மேல் பலன் பெற இயன்றது. அதனால் விளைந்த இலாபத்திலும் பெரும் பங்கைப் பெற்றான். அறிவியல் விஞ்ஞான ஆராய்ச்சியால் உடனே பொருளீட்ட இயலாது போயிற்று. பின்னர் விளைந்த இலாபத்திலும் விஞ்ஞானிகள் பங்கு பெறவில்லை. சென்ற நூற்றாண்டில் பூத-இயைபு நூல்கள் பாற்பட்ட விஞ்ஞானமே பெரிதும் பாராட்டப்பட்டு வந்தது. இவற்றின் விளைவியல்களால், தனிமக்கள் பொருளீட்டினரேயன்றி, பொது மக்கள் தாழ்ந்த நிலைமையிலேயே யுள்ளனர். இதனால் இந் ரல்களின் மதிப்பு குறைந்து கொண்டே வருகின்றது எனலாம். இவற்றால் உலகில் அழிவு மிகைப்பட்டுள்ளதேயன்றி, ஆக்கம் பெருகவில்லை. உயிர் நூல் பாற்பட்ட விஞ்ஞானம் இக்காலத்தே தலைகாட்டி வருகின்றது. இவற்றினின்று பொது மக்கள் நலத்திற்கேதுவான பல விளைவுகள் தோன்றியுள்ளன; இன்னும் பலவும் தோன்றலாம் என நம்ப இடமுண்டு. உயிர் நூல் ஏற்பட்ட ஆராய்ச்சிகளே மருத்துவ நூல் முன்னேற்றத்துடன் கைபிணைத்துச் சென்று ஆக்க முறையில் பலனீந்துள்ளன. எனவே வருங் காலத்தில் இத்துறையிலேயே மக்கள் சமுதாயத்தை நலம் படச்செய்யும் மேலான விளைவுகளை எதிர்பார்க்கலாம்.

எனவே கைத்திறனும் அறிவும் கலந்தாற்றான் புதுமைகள் கண்டுபிடிக்க ஏதுவாகும். சிந்தனையும் செயலும் சேர்ந்த தொன்றே விஞ்ஞான முன்னேற்றத்திற்கேற்றதாம். இக்காலத்தில் நமது நாட்டிலுள்ள கல்வி முறை வெறும நூலறிவை மட்டும் புகட்டும் தன்மையதாய் உள்ளது. அவற்றில் சிந்தனைக்கும் செயலுக்கும் இடமில்லை. கைத்தொழில்களோ நூலறிவின் துணையை நாடாதுள்ளன. இந்நிலைமை மாற வேண்டும். கைத்திறனுக்கும் அறிவுக்கும் ஒருங்கே பயிற்சியளிக்கும் முறையில் கல்வி முறை அமைக்கப்பட வேண்டும. கைத்தொழில்களுக்கும் கல்லூரிகளுக்கும் தொடர்பு இருக்க வேண்டும். இவ்வகையான நிலைமையேற்படும்போது தான் விஞ்ஞானம் சிறக்கும்; நாட்டில் எல்லோரும் நலமுடன் வாழ்ந்து, மக்கட் பிறவியின் பெரும் பேற்றைப் பெறலாம். விஞ்ஞானத்தின் சீரிய பலன் இதுவேயாம்.

யார் மீது குற்றம் ?

ரா. சந்திரசூடன்

"நச்சுநச் சென்று ஏன் என்னை இப்படிப் பிய்த்து வாயில் போட்டுக் கொள்கிறாய்? நான் ஒரு ஜன்மம் இருப்பது உங்களிருவருக்கும ஆகவில்லையா?" என்று மனக் கசப்புடன் தன் முந்தானையைப் பிடித்த இளங்குழந்தையின் மெல்லிய கைகளை உதறுகிறாள். முற்றத்தில் அந்தக் குழந்தை வயது மூன்று வருடங்களாகி மேலும் ஒன்பது மாதம். அவள் முகத்தை உரித்து அதற்கு வைத்திருக்கிறது. மூக்கு அவளதுபோல் நீண்டு நுனியில் பைங்கிளியைப் பழிக்க முயன்று வளைந்திருந்தது. கண்கள் கருத்தடர்ந்து வளர்ந்திருந்த கூந்தலின் நிறத்தைப் போட்டியிட்டது எப்பொழுதும் பொறுமையும் அன்பும் தாண்டவமாடிட இருக்கும் தன் தாய் அன்று அப்படியேன் தன் மீது சினங்கொண்டாள்? என்று திகைத்து நின்றான் சிறு பையன். வேறுயாராவது அம்மாதிரி தன்னை உதாசினம் செய்திருந்தால் எரிமலை போல் உள்ளே குமுறிக் கொண்டிருந்த உணர்ச்சிப் பெருக்கத்தை மடை திறந்து அழுது தீர்த்திருப்பான். உள்ளுணர்ச்சிக்கு அறிகுறிதான் என்ன இப்பொழுது? அவன் வளர்ச்சிக்குப் பெரியதான உருண்டு சாதாரணமாகவே பளபள வென்றிருக்கும் அவன் விழிகள் அப்பொழுது இன்னும் அதிகமாகப் பருத்துப் பிரகாசித்தன—கண்ணீர்ப் பிரவாகத்தைக் கக்குவதற்குத் தருணம் எதிர்பார்த்து நின்றன. முகம் தெரிவிக்கவில்லையா அக்குழந்தை மிகவும் 'கூர்ந்த புத்தியுள்ளவன் என்று! இந்த வயதிற்குள் நல்லது கெட்டது. சுக துக்கம் தெரிந்து கொண்டது போலும்! பிஞ்சிலே முற்றியதோ, வெம்பிக் கருகி விடயத்தனமோ?................

அப்பாலன் ஆழ்ந்த யோசனையிலிருக்கிறான்—அம்மா ஏன் அப்படி என்றைக்கும் மாறாகத் தன்னிடம் அசட்டையும் வெறுப்பும் காட்டுகிறாள் என்று. "அது அவளது இயற்கையல்லவே. நானும் என்ன பிரமாதமாகக் கேட்டுவிட்டேன் அவளை? என் கழுத்திலிருந்த சங்கிலியைக் காலையில் எண்ணை தேய்த்து ஸ்நானம் செய்விப்பதற்காகக் கழட்டினாள். ஸ்நானம் தான் ஆயிற்றே. அதை என் கழுத்தில் போடுகிறாயா என்றுதானே கேட்டேன். எப்பொழுதும் அவளாகவே, தானே தொந்திரவு செய்து என்னைப் போட்டுக் கொள்ளச் சொல்வாள். இன்று காலையிலிருந்து ஏதோ விசனமாக இருக்கிறாளே. நானாகவே சங்கிலியைக் கேட்டு வாங்கிப் போட்டுக் கொண்டு அவளைச் சந்தோஷப்படுத்தலாம் என்று கேட்டேன்." என்றெல்லாம் யோசனை செய்கிறான் போலும். தாயின் முகத்தைக் கூர்ந்து கவனித்தான்; அந்த முகத்தில் சினக்குறி சிறிது குறைந்தால், தான் அழ ஆரம்பிக்கலாம்; பின்னர் தன்னை வாரியெடுத்துக் கொஞ்சித் தன் பழைய வாஞ்சையைக் காண்பிப்பாள் என்ற ஆசைதான்.

அதன் தாயோ "என்றுமில்லாது இன்று ஏன் என் அருமைக் குழந்தை, தவம் செய்து பெற்றெடுத்த என் கண்மணியிடம், இப்படிக் கோபம் வந்தது?" என்று அவனைப் பார்த்துத் தன்னை நொந்து கொள்கிறாள். அவள் மனம் கடும் புயலில் அகப்பட்டு, மாலுமியின்றித் திசை காட்டு கருவிகளுமின்றித் தத்தளிக்கும் கப்பலை யொத்திருந்தது. தன்னைச் சுற்றிலும் அலைகள் தன் உயரத்திற்கு மேல் எழும்பித் தன் வெளிப் பார்வையை மறைக்கின்றன. உலகமே அத்திரைக்குள் இருண்டு தோன்றுகிறது. அத்தனை நாட்களாகத்—தானே இசைந்து வரித்த கணவனைக் கொண்ட நாளிலிருந்து

சமீபகாலம் வரை,—வாழ்க்கைப் பதக்கத்தின் சுகம் என்ற ஒரு புறத்தையே கண்டு மற்றொரு புறம் தெரியாமலிருந்தாள், அம்மறுபுறம் தான் உண்மையென்று வற்புறுத்தும் வேதாந்தங்களை உதாசீனம் செய்து. "அதன் சிட்சை தானே இது, கருமேகங்கள் சூழ்ந்து அவைகளின் நிழல் தட்டுகிறது என் வாழ்க்கையில். அந்தத் 'தாவே' என்று இந்த வாயிற்படியில் நுழைந்தானே அன்று முதல் என் சித்திரத்தில் பழுது ஏற்படலாயிற்று. அவனை முதல் முதல் கண்டதிலிருந்தே எனக்குப் பிடிக்கவில்லை. என்னை யறியாது ஓர் வித அருவருப்பு அவனிடம் ஏற்பட்டது. ஆனால் என் கணவருடன் பூனாக்கல்லூரியில் வாசித்தவன் என்றும், அந்நாட்களில் தாங்களிருவரும் மிக்க அந்நியோந்யம் என்றும் அவர் சொன்ன பின்னர் தான் என் அருவருப்பு சிறிதே குறைந்தது. ஆனால் முழுவதும் மறையவில்லை. அவன் தானே என் உயிரை யொப்படைத்த என் புருஷனுக்கு இந்தக் குதிரைப் பந்தய ஆசை ஊட்டி விட்டான். இந்த மோகம் ஏற்பட்டதிலிருந்து தான் இந்த வீட்டில் ரகளை ஆரம்பமாயிற்று. அது வரை எப்படிக் கிளி கொஞ்சின வீடாக இருந்தது இது! புதிதாகக் கூடிக் குலவி மகிழும் இருபுறாக்கள் போல் வெளி உலகக் கவலை வீசாமல் நிர் விசாரமற்று வாழ்ந்து வந்தோம்.

"எனக்குச் சிவப்புக் கம்மல் பொருந்தவில்லையென்று எவ்வளவு சிரமப்பட்டு வைரத்தோடு வாங்கிக் கொடுத்தார், அது இப்பொழுது போன இடம் தெரியவில்லை. என்னிடம் பொய்யே சொல்லாத அவர் வீட்டு வெள்ளிப்பாத்திரங்கள் யாரோ ஒரு சினேகிதருக்குக் கலியாண தினத்தன்று புழங்கக் கொடுப்பதாகவும் ஒரு வாரத்தில் திரும்பி வருமென்றும் சொல்லிக் கொடுத்தார், ஏழுவாரங்களாகியும் திரும்பி வரவில்லை. இன்று காலை குழந்தையின் கழுத்துச் சங்கிலியையல்லவோ கேட்டார்! எதற்கென்று கேட்க எனக்குச் சுதந்திரமில்லையா? என் மூக்குப் பொட்டு, அல்லது கையில் மிகுதியிருக்கும் ஜதை வளையல்கள் கொடுக்கிறேனே என்றதற்கு என் மீது சிடுசிடுவென்று எறிந்து விழுந்தார். நான் மொண்ணையாக நிற்க அவருக்கு இஷ்டமில்லை என்று தான் தெரிகிறது, பிள்ளையாய்ப் பிறந்தவனுக்கு என்ன நகை வாழ்வு என்றல்லவா கேட்டார். அவர்மனம் நோகாமல் நடப்பது தான் என் வாழ்க்கையின் முக்கிய இலட்சியம் என்று நினைத்துத் தான் என் கண்மணியின் சங்கிலியைக் கழற்றிக் கொடுத்தேன். இனி எங்கு அது திரும்பிவரும்? வேண்டா வெறுப்பாக என்னைக் களிக்க வைக்கப் போட்டுக் கொண்டிருக்கும் அந்தக் குழந்தை இன்று அதை வேண்டுமென்று கேட்க, நான் ஏன் அதனிடம் சிடு சிடுத்தேன்! பாவம் அது என்ன செய்யும்,'' என்றெல்லாம் யோசனைகள் செய்தவண்ணம் நிற்கிறாள். இத்தனை எண்ணங்களும் நொடிப் பொழுதில் அவள் மனத்திரையின் கண் சினிமாப் படம்போல் ஓடி மறைந்தன. அத்தருணம் தான் அக்குழந்தையும் தாயின் வதனத்தில் என்றுமில்லாத சஞ்சலத்தைக் கண்டுவிட்டு அழுவதா, வேண்டாமா என்று புரட்டிப் புரட்டி யோசனை செய்து கொண்டிருந்தான். குழந்தையின் பரிதாப நிலைமையைப் பார்த்த தாயார் பச்சாதாபங்கொண்டு அதை வாரி யெடுத்துச் சமாதானம் செய்ய எண்ணி அதனிடம் ஓரடி எடுத்து வைத்தாள்.

அதேகணம் எதிரேயுள்ள அறையிலிருந்து தன் கணவன் அவரது சகாக்களுடனே வெளியில் வரக்கண்டாள். தன் புருஷன் தன்னிடமோ தன் புதல்வனிடமோ ஒரு வார்த்தையும் சொல்லாது வெளியில் கிளம்புவதைக் கண்ணுற்றாள். வீட்டில் சமையல் செய்து தயாராக வைத்துத் தன் கணவன் சாப்பிட எப்பொழுது வருவார் என்று எதிர்பார்த்த வண்ணம் நின்றிருந்தவள் அவள், அவர் தன் சினேகிதர்களுடன் ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு நேரே கிண்டிப் பந்தயத்திற்குச் செல்கிறார் என்று உடனே தெரிந்து கொண்டாள். அவரைக் கூப்பிட்டு உணவிட்டு அனுப்ப யோசனை தோன்றிற்று. ஆனால் அவர் தனியாக இல்லையே. மற்ற ஆண் பிள்ளைகள் அவரைக்கூடி நிற்கையில் எப்படி அவரைக் கூப்பிடமுடி

யும்? அப்படி வெட்கத்தை விட்டுக் கூப்பிட்டாலும், அந்நாட்களில் அவர் இருந்த மனோபாவத்திற்கு, "சனியனே. முக்கிய காரியத்திற்காக வெளியில் கிளம்பும்போது மூதேவிபோல் கூப்பிடுகிறாயே. அபசகுனம்," என்று திட்டிவிடுவாரோ என்ற பயமும் உண்டு. அதனால் வாய் பேசாது நின்றாள். என்றும் வெளியிற் செல்லும்போது தன் மனைவியை அன்புடன் கூப்பிட்டு உத்திரவு பெற்று, வாயிற் கதவைத் தாளிடச் சொல்லிப் பின் செல்லும் அம்மனிதன் சொல்லிக்கொள்ளாமல், ஏதேதோ குதிரைகளின் எடைக் கணக்கைத் தன் நண்பர்களுடன் வாதித்துக்கொண்டே தெருவழியாக; பஸ் ஸ்டாண்டிற்கு நடந்து சென்றான்.

அசுவ மோகத்தில் தன்னை மறந்து விட்டாரே என்று, அம்புஜத்திற்கு அழுகையும் ஏக்கமும் தன்னையும் மீறி வந்தது. "நீ சாப்பிடு சினேகிதர்களுடன் நான் ஹோட்டலில் சாப்பிட்டு விடுவேன்." என்று சொல்லி விட்டாவது செல்லலாகாதோ. ஏன் திடீரென்று இவ்வளவு உதாசீனம்," என்று மனம் வெம்பித் திரும்பினாள். தன்மேல் வெறுப்புண்டாயிற்று; உலகத்திலுள்ள எல்லாவற்றின் மீதும் வெறுப்புத் தட்டிற்று; முக்கியமாகத் தான் யாரிடம் அதிகமாகத் தன் அன்பைச் சொரிந்தாளோ அதனிடம் திடீரென்று வெறுப்பும் சலிப்பும் தோன்றியது. "மூதேவி, கண்காணாது எங்கேயாவது தொலை. ஏன் என் முன்னால் இப்படி நின்று கொண்டு என்னைப் புண்படுத்துகிறாய்?" என்று இறைந்தாள். அதுவரை அவள் உள்ளத்திலே புரட்டிக்கொண்டிருந்த உணர்ச்சிப் பெருக்கம் வெளிவர வழியில்லாது தவித்துக்கொண்டிருந்தது. மூலையில் எங்கோ ஒரு கண்வாய் கண்டு அதன் வழியே சிவ சமுத்திர வீழ்ச்சியோ வெனும்படிப் பிரவாகித்து வெளிவந்தது. சமையலறைக்குத் தாவிச் சென்றாள். முன்றானையைக் கீழே விரித்துப்படுத்து அழுது அழுது துயிலிலாழ்ந்தாள்.

அச்சிறு பாலனோ—எந்நாளும் கேட்டிராத கூரிய அம்புபோல் இளமனதில் பாய்ந்த வார்த்தையை மனக்கையில் எடுத்து அவை உண்மைதானோ என்று திருப்பித் திருப்பிப் பார்த்தான். பாராங்கல்லைவிடக் கடினமாகவும் பளுவாகவுமிருந்தன. அவ் வார்த்தைகள் தன்னிடமிருந்து அதை ஒதுக்கிக்கீழே தள்ளிவிட முயற்சி செய்து பார்த்ததில் தோல்வியுற்றான்; அந்தப்பளு நிமிடங்கள் செல்லச் செல்லத் தன்னை அதிக பாரத்துடன்தான் அமுக்லாயிற்று. ஒரே ஓட்டம் எடுத்தான்.

மாலை மணி ஆறு இருக்கலாம். வீட்டில் அதுவரை விளக்கு ஏற்றப்படவில்லை. சில நாட்களாகச் சிக்கனத்தின் பொருட்டு வீடு கூட்டுபவளையும் நீக்கியாயிற்று, அம்புஜம் கண்விழித்தாள். தானிருந்த அறையும், கூடமும் இருட்டு நிறைந்திருந்தது. முற்றத்தில் மட்டும் சிறிது வெளிச்சம் தவழ்ந்து நின்றது. பொழுது புலர்ச்சியா, அல்லது அந்தி வெளிச்சமா? என்று அவளுக்கு விளங்கவில்லை. அடுப்பங்கரைப்பக்கம் திரும்பினான். காலையில் சமைத்து வைத்தது அப்படியேயிருந்தது. அடுத்தாற்போல் அவள் பார்வை உரியின் மீது சென்றது. தன் மகனுக்குக் காலையில் ஆகாரத்திற்கு முன் கொடுத்திருக்கவேண்டியபால் அப்படியே அங்கு இருந்தது. மனது சுரீர் என்றது. ஹிருதயமும் தன் வேலையை மறந்து சிறிது தயங்கி நின்றது. பிள்ளை காலையிருந்து இது வரை சாப்பிடாமல் எங்கே இருக்கிறானோ என்ற மனோவேதனையும் கலக்கமும் தூண்ட இருமுறை "கண்ணா கண்ணா" என்று கூவினாள். பதிலில்லை.

எதிரொலி அவளைப் பரிகசிப்பதுபோல் த்வனித்தது. எழுந்து ஒரு வாயிலிற்கு வந்து மற்றப் பையன்களுடன் விளையாடுகின்றானோ என்று பார்த்தால் இல்லை. அவன் கூட்டாளி கோடி வீட்டுச் சீராளனைத் தேடிப் பிடித்துக் கேட்டாள். "எனக்குத் தெரியாதே. அம்மாமி, நானும் மத்தியானத்திலிருந்து அவனைத் தேடுகிறேன். நீங்கள் தூங்கிக் கொண்டிருந்தீர்கள். உங்கள் தூக்கத்தைக் கலைக்க வேண்டாமென்று சத்தம் போடாமல் திரும்பிவிட்டேன். அவா அப்பாவுடன் எங்கேயாவது போயிருக்கானோ என்னவோ," என்றான்.

ஒளிநீங்கி இருள் கவியக் கவியப் பேய்த் தோற்றங்கள் மூலை முடுக்கிலெல்லாம் தோன்றின. அதுவரை மனதில் ஓர் மூலையில் ஒடுங்கி இருந்த பயம் ஒன்று இப்பொழுது அகண்ட உருவமெடுத்துத் தன் புத்தியை முற்றுகையிடலாயிற்று. கைப்பிடிச்சுவரற்ற வீட்டுக் கொல்லைக் கிணற்றைப்பற்றி எப்பொழுதும் அவளுக்குப் பயந்தான். “என்னைப் பிடிச்சுக்கோ, அம்மா, விழாமல். எப்படியிருக்கிறேன் என்று ஒரே ஒரு தரம் என்னை எட்டிப் பார்த்துக் கொள்கிறேன்” என்று கூறுவது அவளுடைய மகன் வழக்கம். அக்கிணறு அவனை விழுங்கிவிட்டதோ என்று நடுங்கினாள். அலறிக் கொண்டு புழக்கடைக்கு ஓடிக் கிணற்றை எட்டிப் பார்த்தாள்: அவளை இகழும் தன்மையில் தன் பரப்பின் மீது சிறிதும் களங்கமும், குமிழ்ச்சியுமின்றி, சர்வரக்ஷகன் உறையும் சாந்தம் போலிருந்தது அது. உள்ளே குதித்துக் கிணற்றின் தரை மட்டம் வரை சென்று துழாவிப் பார்க்கும்படி தன்னைப் பிரிவின் ஏக்கமும், அசட்டுத் தைரியமும் தூண்டின. வெள்ளத்தில் மூழ்கிச் சாகுந்தருவாயிலிருப்பவன் ஒருவன் கையில் அகப்பட்ட வைக்கோலைக் கொண்டு கரைசேர முயல்வதுபோல அப்பொழுது அவளுக்கு ஒரு யோசனை—தன்னைப் போல் அவனும் எங்கேயாவது படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கிறானோ என்று. அது அவளைக் காப்பாற்றிற்று. உள்ளே பாய்ந்து ஓடினாள். முன்கட்டு அறைக்குச் சென்றான். அதில் இது வரை அவனைத் தேடவில்லை. அதில் தான் அவள் பிராணனே இப்பொழுது தைரியம் தேடும் கடைசி இடம். கடவுளை “அப்பனே, என் குழந்தை எனக்கு இங்கே கிடைக்கும்படியாகச் செய்யேன். என் வயிற்றில் பால் வாரப்பா” என்று வேண்டிக் கொண்டே அறையினுள் பாய்ந்தாள். முனகும் சப்தம் கேட்டது. அந்த மூலைக்கு ஓடினாள். அங்குக் கண்டாள் தன் மகனை. ஒரே தாவலில் தன் மகனைக் “கண்ணா” என்று கூவிக் கொண்டு அவனை வாரியெடுத்தாள். ஆனால் அவன் மீது வைத்த தன் கரங்களிரண்டும் சட்டெனப் பின் வாங்கின.

தாயார் தன்னைக் காரணமின்றித் திட்டியதனால் அவனுக்கு ஹிருதயம் வெறித்துச் சூன்யமாயிற்று. ‘தகப்பன் தன்னைச் சில மாதங்களாகத் திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை; முன்னெல்லாம் அவர் சாப்பிடும்பொழுது கூட உட்கார்ந்து கொண்டு தானும் சாப்பிடுவான். இவன் எப்பொழுதும் சீக்கிரம் சாப்பிட்டுவிடுவான். கையைத் தட்டிலேயே அலம்பிவிட்டு எழுந்து தன் தகப்பன் கழுத்தைக் கட்டிக் கொண்டு அவர் முதுகின் மேல் ஏறிக்கொண்டு அவரை மேலே சாப்பிட விடாமற் தொந்திரவு செய்வான். அவன் தகப்பன் அன்று மாலை ஆபீஸிலிருந்து வரும் பொழுது “பிஸ்கோத்தோ” அல்லது “ஏரோப்ளேனோ” வாங்கி வருவதாகப் பிரமாணம் செய்தாலொழிய நகரமாட்டான். இப்பொழுதெல்லாம் தகப்பனிடம் இம்மாதிரி விளையாடச் சென்றால் செம்மையாக உதை கிடைக்கிறது. பிதாதான் இப்படியானார் என்றால் அன்னையும் இப்படி ஏன் ஆகவேண்டும்? என்ன பாவம் செய்தேன், என்ற வியாதி கொண்டு நேரே முன்னறைக்குச் சென்று அங்கு ஒரு மூலையில் சுருட்டி அடுக்கி வைத்திருந்த படுக்கைகளின் மீது விழுந்தான் அவன். மிகவும் சங்கோஜப்பிராணிகளின் சாபம் என்னவெனில் ஒருவரும் காணாத்தனியிடம் சென்று தன் குறைகளை நினைத்து நினைத்துக் கண்ணீர் சொரிந்து மனப் புண்ணை ஆற்றிக் கொள்வது. இவ்விதிக்கு அப்பாலனும் மாறு படவில்லை. தன்னைச் சுற்றியுள்ள படுக்கைத் துணிகள் நனைய அவன் கண்கள் நீர்வடித்தன. ஆனால் இதனால் பிரயோசனம் எதுவும் ஏற்படவில்லை. அக்குழந்தைக்கு சூன்யம் முன் போல் அதே ஆவேசத்துடனிருந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் குழந்தை தன்னை மறந்தது.

கண்ணாவிற்கு இப்பொழுது கடுங் காய்ச்சல், தாய் தன்னைத் தூக்கும் பொழுது கண்விழித்துப் பார்த்தது. தொண்டையினின்று க ர க ர வென்று சப்தம் கிளம்பிற்று. முகத்தில் நரம்புகள் சலனித்தன. ஆனால் தெளிவான வார்த்தைகள் ஒன்றும் வெளிவரவில்லை.

கண்டத்தில் ஏதோ தடை ஏற்பட்டிருப்ப தாகத் தோன்றியது. பாலன் ஏதோ பேசியது அவளுக்குப் புரியவில்லை.

அவள் பேதை மனம் ஊசலாடிற்று. என்ன செய்வதென்று தெரியாமல், தன் விதியை நொந்தாள். ஏன் பாவம் காலை யில் தன் செல்வக் குழந்தையை அவ் வளவு கல்நெஞ்சத்துடன் கண்டித்தோம் என்று ஏங்கினன். மறுகணம் தன் கண வன்மீது பொல்லாத கோபமும் வெறுப் பும் கொண்டாள். அவர்தானே கார ணம், தான் பிள்ளையிடம் கோபித்ததற்கு. குழந்தைக்குக் காலையிலிருந்து பாலோ, சாதமோ, ஒரு ஆகாரமும் கண்ணில் காட்டவில்லையே என்றும் பச்சாத்தாபம். "ஏன் இப்படி நான் தூங்கிப் போனேன்? என் இளம்பாலனை ஏன் இப்படி மறந் தேன்? நான் என்னவோ இன்று சாப் பிடவேண்டாம் என்று தான் தீர்மானித் தேன். இவன் எப்படிப்பசி பொறுக்கக் கூடும் என்ற புத்தியில்லையே எனக்கு! அப்படித்தான் உபவாசம் கிடக்க அவன் என்ன பாவம் செய்தான்? நான் வேண்டி வருந்திக் கடவுள் கொடுத்த தனம் இது. அதை இழிவாக நடத்தி னேன் இன்று காலை. அதனிடம் பரா முகமாக இருந்தேனே என்று தெரிந்து ஈசன் அதைத் திருப்பி திருப்பி அழைத் துக்கொள்ளத் தீர்மானித்துவிட்டாரோ?" என்றெல்லாம்பித்து கொண்டது போல் பரதவித்தது அவள் நெஞ்சம்.

வாயிலில் வண்டி வந்து நின்றது. டாக்டரை அழைத்துக் கொண்டு கோடி வீட்டுச் சீராளன் உள்ளே வந்தான். மடியி லிருந்த பையனைக் கீழே படுக்கையில் மெள்ள இருத்திவிட்டு எழுந்து நகர்ந்து ஒரு மூலையில் நின்றாள். டாக்டர் அவள் கணவனுக்கு மிகவும் பழக்கமானவர். அவருடன் தான் பேசுவது சம்பிரதாய முறைக்குப் புறம்பு. டாக்டர் முகத்தை அருகில் சீராளன் பிடித்து நின்ற கை லாந்தர் வெளிச்சத்தில் கூர்ந்து கவனித் தாள். லவலேசம் அவர் புருவங்கள் நெரித்த வண்ணம் காணப்பட்டது. அது கவலையின் குறியா?........டாக்டர் ஜுர வேகத்தைக் கவனித்து, குழந்தையின் வாயைத் திறந்து கவனித்தார். பிறகு இரண்டு மூன்று கேள்விகள் தன் முன் சுவற்றைப் பார்த்துக் கேட்டார். அதற்குப் பதில் அம்புஜம் சீராளனிடம் மெல்லிய குரலில் சொன்னாள், டாக்டர் காதிலும் எட்டும்படி. டாக்டர் நோயா ளிக்கு ஒரு "இஞ்செக்ஷன்" கொடுத்தார். பின்னர் மருந்து, ஆகார விஷயங்களில் சில பத்தியங்கள் சொல்லிவிட்டுத் தன் சுவாசக் குழற்கருவியை மடக்கிப் பையில் போட்டுக் கொண்டு கிளம்பினர்.

அதற்குமேல் அவளால் தாங்கமுடிய வில்லை. நேரே அவர் முன் வந்து "குழந் தை உடம்பு இப்பொழுது எப்படி யிருக் கிறது? என்ன நேர்ந்து விட்டதென்றே எனக்குத் தெரியவில்லையே!" என்று கெஞ்சினாள், தன் வெட்கத்தைக் காலின் கீழ் மிதித்துக் கொண்டு. "அவனுக்கு டிப்திரியா ஜுரம். நல்ல வேளை நான் சீக்கிரமாக வரநேர்ந்தது. இப்பொழுது ஒன்றும் பயமில்லை. நான் கொடுத்த விதிகளை அனுசரித்து நடந்து வாருங்கள். காலையில் மறுபடி 6 மணிக்கு வருகி றேன்." என்று சொல்லி எழுந்து வாயிற்படியருகே சென்றவர் எதையோ நினைத்துத் திரும்பி தன் பின்னல் வந்து கொண்டிருந்த சீராளனைப் பார்த்து "உங் கள் மாமா எங்கேடா? கிண்டி போயிருக் கானு? இன்னும் வரவில்லையா?" என்று கடுத்த குரலில் கேட்டார். அந்தப் பையன் விழித்தான். பதில் அவளிட மிருந்தும் வரவில்லை. விடையும் அவர் எதிர் பார்த்தாகத் தெரியவில்லை. சட் டென்று தலைகுனிந்த அம்புஜம் மறுபடி தலை தூக்கிப் பார்க்கும்பொழுது டாக் டர் அங்கு இல்லை.

இரவு மணி ஒன்பதிருக்கும். நடை வாசலில் பழகிய காலடியரவம் கேட்டது. அவள் ஹிருதயம் திடீரென்று படபட வென்று அடித்துக் கொண்டது. உள் ளே தள்ளாத நடையில் நுழைந்து உடுப்பைக் கழட்டி ஒரு மூலையில் அலுப்புடன் வீசி எறிந்தான் அவள் கணவன். அவரைக் கண்டவுடன் அவள் மனம் சுருங்கிக்கல் போலாயிற்று. "இதென்ன! என் இப்படிக் கிடக் கிறன்?" என்று கேட்டுக் கொண்டே தன் பாலனைத் தொட்டார். கையில்

அனல் வீசிற்று. பதில் கிடைக்கவில்லை. தன் மனைவியை நோக்கினர். அவள் கண்களிலிருந்து பலபலவென்று முத்துக்கள் சொட்டிக் கொண்டிருந்தன. "அடி அசடே, இந்த ஜுரத்திற்காக வா இவ்வளவு பயப்படுகிருய்? எல்லாம் நாளைக்குச் சரியாய்ப்போய் எழுந்து ஓட ஆரம்பித்து விடுவான். டாக்டரை இப்பொழுது போய்க் கூப்பிட்டு வருகிறேன்.'' என்று தேற்ற ஆரம்பித்தார். அதுவரை புயல் வருமுன் இருக்கும் விகல்பமான சாந்தி மறைந்து இடியுடன் தகர்க்க ஆரம்பித்தது. ஓ வென்று வாய்விட்டு அலற லானுள் முகத்தை இரு கைகளாலும் மறைத்துக் கொண்டு.

அன்றிரவு எப்படி யோகழிந்தது. மறு நாளும் கண்ணு அதேஸ்திதியில் கழித்தான். பிதற்றல் இருந்து வந்தது. நடு நடுவே "சங்கிலி, சங்கிலி'' என்று வார்த்தைகள் கேட்டன. அவ்வார்த்தைகள் ஒவ்வொருதரம் வரும் போதும் இருவர் ஹிருதயத்திலும் முள் கொண்டு குத்துவது போலிருந்தது. "இனி நான் குதிரைப் பந்தயத்திற்குப் போவதேயில்லை இது சத்தியம். இம்மாதச் சம்பளத்தில் எப்படியாவது பணம் மிகுத்துக் கண்ணுவின் சங்கிலியை மார்வாடியிடமிருந்து வாங்கிக் கொண்டு வந்து விடுகிறேன், "என்று மனதில் அடிக்கடி பிரமாணம் செய்துகொண்டார்.

இன்னொரு பொழுதும் விடிந்தது. தாவே அவனுடைய மற்ற இரண்டு சாகக்களுடன் வந்து சேர்ந்தான். ராமானுஜம், தான் அன்று அவர்களுடன் கிண்டிப் பந்தயத்திற்கு வரமுடியாதென்று தீர்மானமாகத்தான் முதலில் சொன்னான். ஆனல் அவர்களுக்கு அவன் மிகவும் அத்யாவசயம். இவன் தான் அவர்களுக்குக் கணக்குப் போட்டு எந்தெந்தப் பந்தயங்களில் எந்தந்தக்குதிரைக்கு "சான்ஸ்'' அதிகம் என்று சொல்லக் கூடியவன். அவனுக்குத் தன் விஷயத்தில் அதிருஷ்டமில்லையேயொழிய மற்றவர்களுக்குச் சொன்னல் பலன் கிடைக்கும். அதனல் அவர்கள் அவனை விடுவதாயில்லை. "உங்களுக்குச் சிறிது பொழுதுபோக்காகவுமிருக்கும். இப்படியே பையன் பக்கத்தில் உட்காருவதால் என்ன நன்மை? போன தரம் தான் உங்களுக்குப் பாவம் லவலேசங்கூட அதிருஷ்டம் இல்லை. இன்று நம் குதிரைகள் தான் நிச்சயம் ஜயிக்கப் போகின்றன: தட்டாமல் எழுந்திருந்து வாருங்கள். உங்களுக்குப் பணம் தேவையானல் எங்களிடமிருக்கிறது. திரவிக் கொள்ளலாம், "என்று கெஞ்சி அவன் புத்தியைக் கலைத்தனர். சபலம் தட்டியது போதையல்லவா அந்த ஆசை? சமையலறைக்குச் சென்று தன் மனைவியின் முகத்தைப் பார்த்தான். தன் தைரியம் குறைந்தது. ஆனல் அடுத்த கணம் "நான் இவளுக்கு எதற்காகப் பயப்பட வேண்டும்? புருஷனைக் கட்டுப் படுத்தப் பெண்களுக்கு ஏது அதிகாரம்? இடம் கொடுத்துக் கொடுத்துத் தான் இவள் கெட்டுப் போய் விட்டாள்! நம் முகத்துக்கு நேரே நம்மைக் கண்டிக்க ஆரம்பித்து விட்டாள் "நான் வெளியே சென்று வருகிறேன். நீ முன்னல் சாப்பிட்டு விடு'' என்றான். அவள் முகத்தை அப்புறம் திருப்பிக் கொண்டாள். தன் மகன் இருக்கும் கோலம் தெரிந்தும் இப்படி மயக்கம் கொண்டு ஓடுகிருரே என்ற வருத்தமும் கோபமும் அவளுக்கு. அவனுக்கோ "என்ன செறக்கும் மமதையும் வந்து விட்டது இவளுக்கு! இதற்கெல்லாம் உழைத்துக் கொட்டித்தான் நாம் கண்ட பலன் என்ன? தரித்திரங்கள். இதற்காக நாம் கவலை கொள்வது சுத்த முட்டாள் தனம். நாம் நம் பாட்டைக் கவனித்துக் கொண்டு போக வேண்டியது தான் மேல்'' என்று தன் சினேகிதர்களுடன் வெளியிற் சென்றான்.

பிற்பகல் மூன்று மணியிருக்கும். குழந்தைக்குச் சுவாச பந்தனம் ஏற்பட்டு நிலைமை கவலைக்கிடமாயிற்று. அம்புஜத்திற்குத் திகில் ஏற்பட்டது. சொல்லியனுப்பிய சிறிது நேரத்திற்கெல்லாம் டாக்டர் வந்து பார்த்தார். மலர்ந்த முகத்துடன் வந்தவர் வாடிய முகத்துடன் திரும்பினர். போகும் போது "அவன் ஆபீஸ் போகவில்லை,'' என்றாள். "ஓஹோ! இன்று கிண்டி நாளா? சரி. இன்னும் அரைமணி கழித்துக் குழந்தையின் சௌகரியத்தைப் பற்றி எனக்குத் தெரியப்

படுத்துங்கள் மறுபடி அவசியமானால் வருகிறேன்,'' என்று சொல்லிச் சென்றார் போகிற வழியில் கடை வீட்டிலிறங்கிச் சிராளனின் தாயார் சிதாவைப் போய் அம்புஜ அம்மாளுக்குத் துணையாக இருக்கும்படி அனுப்பிவிட்டுச் சென்றார்.

அறையின் சுவற்றில் மாட்டியிருந்த கடிகாரம் மெதுவாகப் போகின்றது அப்பொழுது குழந்தை மூச்சு விடுவது வர வரக் கடினமாகி வந்தது; இங்குமங்கும் முனகிக் கொண்டு புரண்ட வண்ணம் கிடந்தான். அம்புஜத்திற்கு நிமிஷங்கள் ஒவ்வொன்றும் தயங்கித் தாமதித்துச் செல்வது போல் புலப்பட்டது. சாதாரணமாகத் துரிதமாக "டிக் டிக்" என்னும் கடிகாரம் கள் வெறியில் தன்னை மறந்து தளர்ந்தாற் போல் செல்லக் கண்டாள் அவள். அவள் அதுவரை சாவின் குறிகள் அறிந்தவளல்ல. குழந்தை எப்படியாவது கடவுள் பிச்சையில் பிழைத்து விடும் என்று முழு நம்பிக்கையுடனிருந்தாள். ஆனாலும் தொலை தூரத்தில் ஏதோ ஒரு மாதா கோவில் மணி அடித்துத் தனக்குச் செய்தி யொன்று அனுப்புவதாகவும், ஆனால் அச்செய்தியைத் தன் மனம் புரிந்து கொள்ள முடியவில்லையென்றும் உணர்ந்தாள். சிந்தனையிலாழ்ந்த அவளுக்குக் குழந்தை விக்கினாற் போல் சப்தம் கேட்டது. குழந்தை கண் திறந்து தன்னை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தது. ஆனால் அதன் கருவிழிகளை நோக்குவனவாக இல்லை. தன் முகத்தைத் தாண்டி அதற்கப்பால் தன் பின்னுள்ள பொருள் எதையோ பார்ப்பதாகத் தோன்றியது அவளுக்கு. அதன் கருவிழிகள் வெகு ஆழத்தில் பதிந்து நின்ற தோற்றம் வேறு "கண்ணு, என்ன வேண்டுமப்பா?" என்று தன் கன்னத்தை அதன் முகத்தில் பொருத்திய வண்ணம் கேட்டாள். பையன் ஏதோ பேச ஆரம்பித்தான், ஈன சுரத்தில் "என்னைக் கோவிச்சுக்காதே, அம்மா, சங்கிலியை நான் கெட்டுப் போக்கல்லை" என்றது. "இல்லேடா கண்ணு. அதை நான்னு தொலைச்சுட்டேன்." என்று அவள் பதில் முழுவதும் சொல்லுமுன் அதன் தலை சாய்ந்து விட்டது. தன் முன்னோர்களைத் தேடிச் சென்றது அந்த ஆவி. பக்கத்திலிருந்த அவள் தோழி சிதா "ஓ" என்று கதறி விட்டாள். ஆனால் அம்புஜமோ வாய்திறக்கவில்லை. அச்சவத்தைத் தன் மார்புடன் அணைத்துக் கொண்டு அப்படியே ஸ்தம்பித்து உட்கார்ந்திருந்தாள். சித்தம் தன் வேலையின் பாரம் தாங்காது ஒடிந்து நின்றது.

அதே தருணம் கிண்டியில் அன்று பட்டாணியிடம் பைசாவுக்குப் பைசா வட்டியுடன் வாங்கிய முன்னூறு ரூபாயையும் குதிரைகளின் மீது இழந்து, தன் நண்பன் தாவேயுடன் தன் துக்கத்தை மறக்கச் சாராயக்கடைக்குள் புகுந்தான் ராமானுஜம்.

சமூகத்திற்கு இதை விட வேறு என்ன தொண்டு செய்யக் கூடும் மேல் நாட்டு நாகரீகச் சின்னமான அக்குதிரைப் பந்தயம்?

அறிக்கை.

பாரத மணிக்கு விஷய தானம் செய்பவர்கள் கவனிக்க வேண்டிய சில முக்கிய விஷயங்கள் ;—

(1) கதைகளோ கட்டுரைகளோ பாரத மணி பக்கங்களில் மூன்றுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.

(2) காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

(3) கதைகள், கட்டுரைகள் எழுதுவோரின் முழுவிலாஸமும், அவர்கள் தொழிலும் குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(4) வேண்டிய தபால் பில்லை அனுப்பினாலொழிய, பிரசுரத்துக்கு அங்கீகரிக்கப்படாத கதைகள், கட்டுரைகள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

ஆசிரியர்



மாங்குடிச் சிவனார்

வ. வேணுகோபாலன்

தஞ்சாவூர் ஜில்லாவில் மாங்குடி என்பது ஒரு பழைய கிராமம். அந்தக் கிராமத்தில் நூற்றுக் கணக்கான பிராமண சிவ பக்தர்கள் இருந்தனர். ஒவ்வொரு அந்தணர்களும் நாள்தோறும் சிவ பூஜை செய்பவர்கள், தஞ்சாவூர் ஜில்லாவிற்கே, தனது சிவ பக்திச் சிறப்பால் பெருமை அளித்தது மாங்குடிக் கிராமமே.

அந்தக் கிராமத்தில் சிவன் என்று வாலிபனொருவன் இருந்தான். அவனுக்கு அப்போது பதினெட்டு வயது இருக்கும். அவனுடைய தாய் தந்தையர்கள் சிறு வயதிலேயே இறந்துவிட்டனர். அந்த வயதிலேயே அவ்வாலிபன், சிறந்த சிவ பக்தியுள்ளவனாக இருந்தான். அக்கால வழக்கப்படி சிறு வயதிலேயே உபநயனம் செய்விக்கப் பெற்ற அவன், ஸந்தியாவந்தன ஜபங்களை நியமப்படி உரிய காலங்களில் தவறாமல் செய்து வருவான். விடியற் காலையில் எழுந்து ஆற்றிற்குச் சென்று நீராடி, விபூதி பூசி ஜபங்களைச்செய்துவிட்டு, உச்சிப்பொழுதில் வீட்டிற்கு வந்து ஆகாரம் செய்வதும், பிறகு சிவத் தியானம் செய்துகொண்டிருந்து, மாலையில், ஸந்தியாவந்தன ஜபம் செய்த பின், கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்து, ஆகாரம் செய்த பின் உறங்குவதுமாகக் காலங் கழித்து வந்தான். சிறந்த சிவ பக்தர்கள் உள்ள அந்தக் கிராமத்தில் எந்தப் பெரியோர்களிடத்தும் அவன் பேசுவது மில்லை;

தலை வணங்குவது மில்லை. இந்த விஷயத்தில் மாங்குடிச் சிவ பக்தர்களான பெரியோர்களெல்லோருக்கும், சிறுவனை சிவனிடம் பொறுமையும் கோபம் உண்டாயின.

வாலிபனை சிவனிடம் ஒரு குறையும் இல்லாதிருப்பினும், பரமசிவனையன்றி, எந்தப் பெரிபேரியோர்களிடத்தும் தலை வணங்காதிருந்த ஒரு குறை இருந்தது. ஆனல் சிவன் அதை ஒரு குறையாக எண்ணவில்லை.

சிவனிடத்துக் கோபம் கொண்ட ஒவ்வொரு சிவ பக்தர்களும் அவனை நேரில் பார்க்கும்போது ஒன்றும் பேசுவதில்லை. சிவனுடைய தேஜஸையும், தேகக் கட்டையும், தோற்றப் பொலிவையும் கண்ட பல பெரியோர்கள் அவனுக்குப் பயப்படுவதும் உண்டு. ஆனல் சிவனுக்குச் சிறிதும் இறுமாப்போ, ஆடம்பரமோ கிடையாது.

வாலிபப் பருவமும், அதற்கேற்ற தேகக்கட்டும் சிவ பக்தியும் உடைய சிவனுக்கு அக்கிராமத்திலுள்ள ஒரு அந்தணர் தமது பெண்ணை மணம் செய்து வைத்தார். அவ்விதம் செய்ததில் அக்கிராமத்திலுள்ள எல்லோருக்கும் கோபமுண்டாயிற்று. 'ஒரு பயனுமில்லாமல் விபூதியைப் பூசிக்கொண்டு சாம்பலாண்டியாய்த் திரிகின்ற இவனுக்குக் கொடுக்கலாமா அந்தச் சிறு பெண்ணை' என்று எல்லோரும் மறைவாகவும் வெளிப்படையாகவும் பழிக்கலானர்கள். அவர்கள் கூறும் பழி மொழிகளை, அந்தப் பெண்ணின் தகப்பனும் தாயாரும் கேட்டு வருந்தினர்கள். நாளுக்கு நாள் அவர்களுக்கும், சிவனிடம் முன்பிருந்த மதிப்புப் போய் அலட்சியப் புத்தி உண்டாய்விட்டது. சிவன், அதை லட்சியமே செய்வதில்லை.

தன், தாய் தந்தையர்களின் துர்போதனையாலும், கிராமத்துப் பெரியோர்களுடைய உபதேசத்தாலும் சிவனுடைய மனைவியாக வாய்த்த அந்தச் சிறு பெண்ணின் மனமும் சிறிது பேதமடைந்தது. சிவனுடைய விபூதி ருத்திராக்ஷ தாரணத்தையும், அதிகமாக மௌனம் சாதிப்பதையும் கண்ட அப்பெண்ணிற்கு இன்னும் அதிக மனக் கலக்க முண்டாயிற்று. அப் பெண்ணுடன் சிவன் சாதாரணமாகப் பழகி வருவதிலும் அப்பெண்ணிற்குப் பீதியும் மனக்கலக்கமும் உண்டாயின. சிவனைப் பயித்தியமென்றே அவள் எண்ணிவிட்டாள்.

சிவனிடத்து உண்டான பொறுமைத் தீ ஊரில் கொழுந்துவிட்டெரிந்தது.

ஒரு நாள் கிராமத்துச் சிவ பக்தர் சிலரும், அந்தப் பெண்ணின் தாய் தந்தையருமாகச் சேர்ந்து இரகசியமாக ஒரு முடிவு செய்தனர். அந்த முடிவை அந்தப் பெண்ணிற்குக் கூறி அதன்படி செய்யும்படியாக அவளைச் சம்மதிக்கச் செய்தனர்.

அந்த முடிவின்படி, அன்றிரவு சிவன் சாப்பிடுதற்குரிய உணவில், அந்தப் பெண் விஷத்தைக் கலந்து வைத்து விட்டாள். உரிய காலத்தில் சிவன் அவ்வுணவை

உண்டுவிட்டு விஷத்தாலேற்பட்ட சிறிது மனக் கலக்கத்தோடு வேகமாகத் தன் பூஜையறைக்குச் சென்று உட்கார்ந்தார். தன் மனைவியே தனக்கு விஷம் கொடுத்து விட்டாளென்பதை உணர்ந்தார். உடனே சிறிது பயமுடையவராய், "ஹே நீலகண்டா, அன்று நீ, ஆலகால விஷத்தை உண்டு, பார்வதியால் தடுக்கப்பட்டுக் கண்டத்திலேயே விஷத்தை நிறுத்திக் கொண்டாய். இன்று உன் பக்தனை யானும், என் மனைவியாலேயே விஷம் கொடுக்கப்பெற்று உண்டுவிட்டேன். உன்னுடைய அருளே அருள்!" என்று கூறி வணங்கிவிட்டு அங்கேயே படுத்து விட்டார்.

அந்தப் பெண், சிவன் சாப்பிட்டுப் போன உடனேயே பயந்து தன் தாய் வீட்டிற்குப் போய் விட்டாள். சிவன் விஷத்தை உண்டு இறந்து போயிருப்பானென தீர்மானம் கொண்ட பெரியோர்கள், சிவனுடைய வீட்டின் வாசலில், தகனத்திற்கு வேண்டிய ஏற்பாட்டை இரவிலிருந்தே செய்து கொண்டிருந்தனர். இதைக் கண்ட ஊரிலுள்ள எல்லோரும் சிவன் இறந்து விட்டானென்றே எண்ணிச் சிவனுடைய வீட்டு வாசலில் கூட்டங் கூடிவிட்டனர். சிலர் சிவனுக்காக இரங்கி அழுது கொண்டிருந்தனர். அந்தச் சிறு பெண்ணும் தாய் தந்தையரும் அவர்கள் வீட்டில் கூக்குரலிட்டு அழுதுகொண்டிருந்தனர்.

விடியற்காலம் ஐந்து மணியிருக்கும், சிவன், தன் வீட்டு வாசலில் தனக்கு ஏற்பாடாகியிருப்பதையும் எல்லோரும் கூக்குரலிட்டழுவதையும் எண்ணித் தனக்குள் சிரித்துக்கொண்டு, அவ்வீட்டின் புறங்கடைப் பக்கமாக ஆற்றிற்குச் சென்று நீராடி வழக்கப்படி ஜபம் செய்து விட்டு நன்றாகச் சூரியோதயமான பின்பு தெரு வழியே கிராமத்தில் நுழைந்து வந்தார். சிவனைக் கிராமவாசிகள் பார்த்ததும் திடுக்குற்றனர். சிவனுக்காகத் தகனக் கிரியைகளுக்கு ஏற்பாடு செய்துகொண்டிருந்த பெரியோர்கள் எல்லோரும் பயத்தால் நடு நடுங்கி இடுப்பில் உத்தரீயத்தைச் சுற்றிக்கொண்டு, "மன்னிக்கவேண்டும், தெரியாமல் செய்த பிழையை மஹானை தாங்கள் மன்னிக்க வேண்டும்" என்று விழுந்து நமஸ்காரம் செய்தனர். அந்தச் சிறு பெண்ணும், தாய் தந்தையர்களும் சிவனுடைய பாதங்களில் விழுந்து அழுது மன்னிப்புக் கேட்டனர். எல்லோரையும் பார்த்துச் சிவன் புன்சிரிப்புடன், "எல்லாம் நீலகண்டன் தருள், நீங்களென்ன செய்தீர்கள் ஒன்றும் குற்றமில்லை" என்று கூறி மனைவியை அழைத்துக் கொண்டு வீட்டுக்குள் சென்று விட்டார். எப்பொழுதும் போல் மனைவியுடன் சிவன் பழகிவந்தார்.

ஊராரெல்லோரும் சிவனைத் தினந்தோறும் பார்த்து வணங்கிச் சென்றனர். அன்று முதல் மாங்குடிச் சிவன் கைலாயத்தில் வாழும் சிவனாகவே கருதப்பட்டார்.

நாமும் ரஷ்யாவும்

ஏ. ஜி. வெங்கடாசாரி

இப்பொழுது உலகமெங்கும் நடைபெற்று வரும் போராட்டத்தில் முற்போக்கு சக்திகள் வெற்றியடைந்து, சந்தோஷமும் சௌக்கியமும் நிறைந்த எதிர்காலத்துக்கு வழி ஏற்படவேண்டும் என்று தான், நியாயபுத்தியுள்ள எல்லோவிரு புகிறார்கள். இன்று இந்த மாபெரும் போராட்டத்தின் முழு பளுவையும் தாங்கி நின்று எதிர்காலத்தைப்பற்றி நாமெல்லோரும் நம்பிக்கை கொள்வதற்குக் காரணமாக இருந்து வருபவை முக்கியமாக ஸோவியத் யூனியனும் அதற்கு அடுத்தபடியாக சீனாவுந்தான்.

ஜெர்மன் ஸைன்யங்களை மடக்கி முறியடிக்கவே முடியாது என்று பலராலும் கருதப்பட்டுவந்ததை கண்கூடாகச்செய்து காட்டி, உலகம் சோர்வடையாமற் செய்து, வெற்றிக்கு வழி காட்டி வருகிறது ஸோவியத் யூனியன். சீனாவிலும், அதைவிடப் பன்மடங்கு சிறப்புடன் ஸோவியத் யூனியனிலும், மக்கள், ஆக்கிரமித்தோரை எதிர்த்து மட்டும், நிற்கவில்லை: திடீர் தாக்குதலின்மூலம் ஏற்பட்ட ஆரம்ப அதிர்ச்சிகளை சமாளித்த பிறகு வெற்றிகரமாகப் பகைவனை பின்னுக்குத் தள்ளி வருகிறார்கள். ஜெர்மனி ரஷ்யாமீது மற்றொரு மாபெரும் தாக்குதலைச் சீக்கிரத்தில் மேற்கொள்ளலாம் என்று கூறுகிறார்கள். ஜெர்மன் ஸைன்யத்தின்பலம் ஒடுக்கப்பட்டதேயொழிய நொறுக்கப்படவில்லை. ஆகையால், மற்றொரு மாபெரும் தாக்குதலை ஜெர்மன் பாஸிஸம் மீண்டும் மேற்கொள்வது நிச்சயம். ஆனால், இதே காலத்தில் செஞ்சேனை முன்னிருந்ததை விடப் பன்மடங்கு பலமடைந்திருக்கிறது. அவர்களுடைய சாதனங்களும் அதிகமாயிருக்கின்றன. போர் முனைக்கு, ஆயிரம் மைல் பின்னால் வளர்ந்தோங்கியுள்ள யுத்தத் தொழில்கள் வெற்றிக்கு வேண்டிய தளவாடங்களை வேகமாய்ச் செய்து தருகின்றன. சோதனை மிகுந்த இக்காலத்தில் எந்தத் தியாகத்தையும் ஸோவியத் மக்கள் பெரிதெனக் கருதவில்லை. எனவே, புதிய ஜெர்மன் தாக்குதலைச் சென்ற வருஷம் இருந்ததைவிட அதிகமான பலத்துடன் சமாளிக்கக்கூடிய நிலைமையில் இன்று செஞ்சேனை இருக்கிறது. அதை பலப்படுத்தியாக வேண்டியது தம்கடமை என்பதை பிரிட்டிஷ் அமெரிக்க மக்கள் வரவர அதிகமாக உணர்ந்து வருகின்றனர். காரியாம்சத்தில் ரஷ்யா இன்று தன்னந் தனியாகவே போரிடுகிறது என்பதை ஸ்டாலின் சமீபத்தில் எடுத்துக் காட்டினார். ஐரோப்பாவிலேயே வேறு போர் முனைகளை நேசநாடுகள் சிருஷ்டித்தாக வேண்டிய தன் அவசியத்தை லித்வினுப் அறிவுறுத்தினார். இப்போதைய யுத்தம் உண்மையிலேயே, உலக வியாபகமான மக்களின் போராட்டமாகத் தாமதமின்றி உருவாக வேண்டியதன் அவசியத்தை இவ்விருவரும் எடுத்துக்கூறிவிட்டனர். இது சாத்தியமாகும். பக்ஷத்தில் பாஸிஸ்ட் சக்திகளின் தோல்வி வெகுசீக்கிரத்தில் ஆரம்பமாகும். என்று எதிர்பார்க்கலாம். எக்காரணத்தினாலாவது, ஸோவியத் யூனியன் விரும்புகிறபடி பிரிட்டனும் அமெரிக்காவும் உடனடியாக நடவடிக்கை எடுப்பது முடியாமற்போனால் வெற்றியடையும் நாள் ஒத்திப் போடப்படும். ஆனால், தன்னந் தனியாகவே போரை நடத்தியாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால்கூட, இறுதியில் ரஷ்யா வெற்றி பெறுவது திண்ணம் என்பதை ஸர். ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் எடுத்துக் காட்டியிருக்கிறார். அவர் பேசியிருப்பது வெறும் அசட்டு தைரியத்தினால் அல்ல. ஒரு நியாயமான காரண

யிருந்து, மக்களும், அவர்களை ஆள்வோரும் பரிபூர்ணமாய் எல்லா வகைகளிலும் ஒருமித்துமிருந்தால், மனதினுலும் கற்பனை செய்து கொள்ள முடியாதவைகளைக் கூட சாதித்துவிட முடியும் என்பதைக் கிரிப்ஸ் ரஷ்யாவில் கண்டறிந்தவர். ஜப்பானியர் சகல பிரிட்டிஷ், அமெரிக்க வசதிகளையும் பெற்று தம்மைத் தாக்கி வந்திருந்தபோதிலும் சென்ற ஐந்து வருஷங்களாக தனியாக வீர சுதந்திரப் போரை சீன மக்கள் விடாப்பிடியாய் நடத்தி வந்திருப்பதன் இரகசியமும் இதுவே. ஏகாதிபத்திய முறையில் அமுல் நடந்து வந்த பிரிட்டிஷ், அமெரிக்க டச்சு காலனிகளில் இம்மாதிரியான ஒருமித்த தன்மை கொஞ்சங்கூட இல்லாததால் தான், ஒரு ஜப்பானிய ஆக்கிரமிப்பு நினைத்தவிடங்களில் எல்லாம் வெற்றியடைய முடிந்தது. எனவே, நிலைமை மிஞ்சிவிடுமுன், இந்தியா உட்பட எஞ்சியுள்ள இடங்களிலாவது யுத்தத்தின் அடிப்படையை மாற்றி, இது மக்களின் போராட்டம் என்று உணரும்படியாகச் செய்தாலொழிய இன்னம் நெடு நாளைக்கு அளவற்ற கஷ்டங்கள் வந்து கொண்டேயிருக்கும். பலவிதமானமனப்பான்மைகளும், சரித்திரபூர்வமானவிருப்பு வெறுப்புக்களும், சுயநல உரிமைகளும், அகங்காரங்களும், குறுக்கிழை, நேரிழையாகப் பின்னிக் கிடப்பதால், ஏகாதிபத்தியம் தன் பிரசித்தமான சொரூபத்தைத் திடீரென மாற்றிக் கொள்ளுமென எதிர்பார்க்க முடியாது. இருந்தாலும், யுத்த கால அதிர்ச்சிகளும் சோதனைகளும், விழிப்புற்றெழும் மக்களின் நிர்ப்பந்தமும் பெயர் பெற்ற ஏகாதிபத்திய வாதிகளின் மனப்பான்மையில்கூட முக்கியமான மாறுதலை உண்டுபண்ணி வருகின்றன. இதன் காரணமாக காலனி நிர்வாக முறையிலுள்ள வில்லங்கங்கள் ஓரளவுக்கு அகற்றப்படலாம். ஆனால், நாம் விரும்பியபடி இது நடக்கவில்லையே என்பதற்காக நாம் இத்தருணத்தில் வாளாவிருக்க முடியாது. நாம் நமது தலைவிதியை நிர்ணயித்துக் கொள்ளும் யஜமானர்களாயிருக்கும் பக்ஷத்தில் 40 கோடி மக்களடங்கிய சமூகம், நாற்புறமும் நெருக்கடி விரைந்து வரும் இத்தருணத்தில் செயலற்று, இராது. ராஜீய நிலைமை தெளிவுபடவில்லை என்ற காரணத்துக்காக நாம் வாளாவிருக்க முடியாது. நாம் விரும்பினுலும் விரும்பாவிட்டாலும் போரில் ஈடுபட்டாய் விட்டது. எனவே, வெகு வேகமாய் மாறிவரும் நிலைமைகளுக்கு ஏற்றபடி, சந்தர்ப்ப விசேஷங்களை பயன்படுத்திக் கொள்வதற்கு நாம் தயாராக வேண்டும். அச்சு நாடுகளின் சூழ்ச்சிகளைக் கண்டு எந்த விழிப்புள்ள இந்தியனும் மதிமோசம் போக மாட்டான் எனவே, எத்திசையிலிருந்து வந்த போதிலும் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போரிட்டாக வேண்டும்; அதற்கு வேண்டிய பலத்தையும் சிருஷ்டித்துக் கொள்ள முயல வேண்டும். பிரஜைகளின் பாதுகாப்புக்கு மும்முரமாய் உழைப்பது எல்லோருடைய முதல் வேலையாகும். இதில் அதிகாரிகளுடன் ஒத்துழைத்தாக வேண்டியது அவசியமாகிறது யுத்தத்தின் அடிப்படைசுமாராகவாவது மாறுமானல் அதில் மக்கள் ஏராளமாக பங்கெடுத்துக் கொண்டு வெற்றிக்கு வழி செய்வது நிச்சயம். ஆனல் உலகமக்கள் எல்லோரின் முயற்சியும் முதன்மையாக வீரத்துடன் போரிட்டு வரும் ஸோவியத், சீன மக்களின் தியாகம் வீணுகாமல் கூடிய சீக்கிரம் பயன் தருவதற்கு உதவுவதுதான். அந்த வகையில் இப்பொழுது நாம் நேரடியாகச் செய்யக்கூடியது அதிகமில்லை என்பது வாஸ்தவம். ஆனல் நிலைமை வேகமாய் மாறி வருவதை முன்னிட்டு எதற்கும் நாம் தயாராக வேண்டும். தன் கம்பீரமான எதிர்ப்பின் மூலம், முற்போக்கு சக்திகளுக்கெல்லாம் தைரியத்தையும் நம்பிக்கையையும் அளித்துவரும் ஸோவியத் யூனியனை, செஞ்சேனையை நாம் வாழ்த்துவோமாக.

இந்த யுத்தம் முடிந்த பிறகு சுரண்டலும், அடிமை நிலையுமற்ற புது உலகம் ஏற்படப் போகிறதென்று கூறப்பட்டு வருகிறது. அட்லாண்டிக் சாஸனம் 26 நாடுகளின் பிரகடனம் முதலியவற்றின் நோக்கம், யுத்தத்திற்குப் பிந்திய உலகில் ஒரு புது யுகத்தைச் சிருஷ்டிப்பதுதான் என்று கூறப்படுகிறது. இப்பொழுதுஇந்த வார்த்தைகளைச் சொல்வோரின் மனதில்

வேறு காரணங்கள் இருந்த போதிலும் பரவாயில்லை. யுத்தத்திற்குப்பின் சமூக அமைப்பிலேயே உலகமெங்கும் மாபெரும்மாறுதல் ஏற்படப்போவது திண்ணம். அதற்கு முதற்படியாக மனப்பான்மையில் புரட்சியை ஏற்படுத்துவதற்கு இந்த உத்தேச திட்டங்களைப் பற்றிய பிரசாரம் பயன்படுமானால் அந்த அளவுக்கு அதனால் நன்மையே தவிர தீமை இல்லை. ஆனால் வருவது வரட்டும். சுதந்திரம் கிட்டிய பிறகு நமது சமுதாயச் சீர்திருத்தங்களை நடத்தி விடலாம் என்று மனப்பால் குடித்துக்கொண்டிருப்பதில் தான் அபாயம் இருக்கிறது. அடிமைப்பட்டுள்ள நம் போன்ற தேச மக்களின் உடனடியான லட்சியம் தேசிய விடுதலையே. அதற்காக உழைப்பதேமுதலிடம் பெறத்தக்கது என்பது வாஸ்தவம். அதே சமயத்தில் சரித்திரத்தின் படிப்பினைகளை நாம் மறந்துவிடக்கூடாது. தொன்றுதொட்டு அந்நிய ஆதிக்கத்தின் குடை நிழலின் கீழ் வளர்ந்து வந்த பிற்போக்குக் கூட்டங்கள் சும்மா இருக்க மாட்டா. புதிய ஜனநாயகப் பரீட்சைகளில் இறங்கும் சமுதாயங்கள் ஜாக்கிரதையுடன் இருந்து வராவிடில் இந்தச் சக்திகள் தாம் பாஸிஸ்ட் கூட்டங்களாக மாறிவிடும். இந்த அபாயத்தை உணர்ந்து முன்கூட்டியே ஏற்பாடு செய்ய வேண்டுமானால் நாம் ரஷ்யாவின் உதாரணத்தையே, அவசியமான மாறுதல்களுடன் பின்பற்றவேண்டும்.

இன்று நம் நாடு இருக்கும் நிலைமை 25 வருஷங்களுக்கு முன் ரஷ்யாவில் இருந்ததைப் போன்றது. ரஷ்ய மக்கள் விடுதலை பெற்றது போல நாமும் விடுதலையடையக் கூடும். அதற்கப்புறம் அவர்களை என்னென்ன எதிர்ப்புக்கள் குபீரெனக்கிளம்பி வதைத்தனவோ அவை உடனடியாக இங்கும் தலை தூக்க முயற்சிக்கலாம் ரஷ்ய மக்கள் எவ்வாறு சமாளித்தனர் என்பதைத் தெரிந்து கொள்வது, பாமர மக்களின் நலனை பிரதானமாகக் கருதும் எல்லோரின் கடமையுமாகும்.

நூற்றுக்குமேற்பட்ட பாஷைகள், 185 வெவ்வேறு சமூகத்தினர், மாறுபட்ட சம்பிரதாயங்கள், பலதரப்பட்ட பொருளாதார நிலைமை, பெரும்பான்மையும் எழுத்து வாஸனையே இல்லாத ஜன சமூகம், தொழில் வன்மையில் பிறபோக்கு, விவசாய வளர்ச்சிக்கு எண்ணற்ற இடையூறுகள், வாழ்க்கையை நரக வேதனையாக்கி வந்த பாகுபாடுகள், ஆகியஇவற்றை ரஷ்யா எப்படிச் சமாளித்தது என்பதை நாம் ஆராய்ந்து பார்த்தால் ரஷ்யர் ஒரு புது நாகரிகத்தை வெற்றிகரமாகச் சிருஷ்டித்திருக்கிறார்களென்றே தீர்மானிக்கலாம். “ நாணயத்துடன் ஆட்சி புரிவதில் இதுவே முதல் பரீட்சை ” என்று அறிஞர்களால் போற்றப்பட்டிருக்கும் ஸோவியத் ஆட்சி முறையை, சமூகப் பிரச்னைகளை தீர்த்து வைத்த கதையை, எல்லோரும் அறிய வேண்டும். ‘ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை ஜாதியில்’ ஒவ்வொரு மனிதனும் சந்தோஷமாகவும் சௌக்யமாகவும் வாழ உரிமை பெற்றவன் என்ற அடிப்படையில் எவ்வாறு பிரச்னைகளை ரஷ்யா தீர்த்து வைத்தது என்பதை, இனிப் பாமரமக்கள் யஜமான்களாய் விளங்க வேண்டுமென கருதுவோர் எல்லோரும் தெளிந்தறியச் செய்வது கடமை. இந்த வகையில் ஸோவியத் அன்பர்களாயிருப்போரின் கடமை மகத்தானது. அதைச் சிரத்தையுடனும், உண்மையுணர்ச்சியுடனும் செய்ய அறிஞர்களெல்லோரும் ஒருமித்து முற்படவேண்டும். மற்றவர்கள் அவர்களுக்குச் சகல வசதிகளையும் செய்து தரவேண்டும்.